இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28+2

சுடர் 32 | கதிர் 119 | வள்ளுவர் ஆண்டு 2048 | பங்குனி 12 சனிக்கிழமை 25.03.2017

ரத்துபஸ்வெல துப்பாக்கிச் சூடு

## இராணுவ அதிகாரிகள் மூவர் விளக்கமறியலில்

கொழும்பு, மார்ச் 25

ரத்துபஸ்வெல துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் 3 இராணுவ அதிகாரிகளையும் ஏப்ரல் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இராணுவ அதிகாரிகள் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நேற்று >> 24

## யாழ்ப்பாணம் செல்வதை கைவிடவேண்டும் ரஜினி

விடுதலைச் சிறுத்தைகள் கோரிக்கை

சென்னை, மார்ச் 25

யாழ்ப்பாணம் செல்லும் திட்டத்தைச் சுப்பர் ஸ்ரார் ரஜினிகாந்த் கைவிடவேண்டும். அந்த நிகழ்வில் பங்கேற்று உலகத் தமிழர்களின் எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொள்ளக் கூடாது.

இவ்வாறு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தொல் திருமாவளவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சுப்பர் ஸ்ரார் ரஜினி, லைக்கா நிறுவனத்தின் ஞானம் அறக் கட்டளையினால் அமைக்கப்பட்ட >> 24

## ஐ.நா. பரிந்துரைகளை உள்ளபடியே இலங்கை செயற்படுத்தவேண்டும்

கூட்டமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 25

இலங்கைக்கு இரண்டு வருட கால அவகாசம் வழங்கியுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை வரவேற்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அதில் சொல்லப்பட்டுள்ள பரிந்துரைகளை உள்ளபடியே இதய சுத்தியுடன் செயற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது. >> 22

ஆயுதங்கள் தரிக்காத

# தமிழர் மீதான போர்க்குற்றம் குறித்து டில்லி கடும் வேதனை

அயலுறவுத்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ் நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவிப்பு



புதுடில்லி, மார்ச் 25

ஆயுதங்கள் தரிக்காத தமிழ் மக்களுக்கு எதிரான இலங்கைப் படையினரின் போர்க் குற்றங்களுக்காக இந்திய அரசு வேதனையையும் வலியையும் வெளிப்படுத்தியுள்ளது.

இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ் இந்திய நாடாளுமன்றத்தின் மாநிலங்கள் அவையில் நேற்று இதனைத் தெரிவித்தார். >> 04

## 1983 கலவரம் குறித்து தகவல் எதுவுமில்லை

கூறுகிறார் அமைச்சர் சாகல

கொழும்பு, மார்ச் 25

1983ஆம் ஆண்டு ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் இடம்பெற்ற இனக்கலவரத்தின்போது உயிரிழந்த, காயமடைந்த மற்றும் இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் இல்லை. 33 வருடங்கள் கடந்துள்ளதால் அது குறித்த ஆவணங்கள் அழிந்துள்ளன என்று சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு சபையில் நேற்றுத் தெரிவித்தது.

நாடாளுமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை காலை சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, பொது மனுத்தாக்கல் என்பன நிறைவடைந்த பின்னர் >> 24

## 20 கிலோ கேரளக் கஞ்சா வவுனியாவில் சிக்கியது

வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர் கைது

வவுனியா, மார்ச் 25

வவுனியா புளியங்குளம் பகுதியில் சுமார் 20 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருள் மீட்கப்பட்டது. அதனை வைத்திருந்த குற்றச்சாட்டில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர் கைது செய்யப்பட்டார் என்று வவுனியா மாவட்ட மதுவரித் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் நேற்றுக் காலை 6 மணியளவில் >> 24

## போரை வென்ற ராணுவம் மீது போர்க்குற்ற விசாரணையா?

ஒருபோதுமே இடமளியோம் என்கிறது ஹெல உறுமய

கொழும்பு, மார்ச் 25

"போரை வெற்றிகொண்ட இராணுவத்தினரை விசாரணை செய்து தண்டனை வழங்க ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். தனிப்பட்ட ரீதியில் போரின்போது இராணுவத் தரப்பில் யாராவது தவறிழைத்திருந்தால், அது தொடர்பில் உள்நாட்டு >> 04

முச்சந்தி முரளி



இதுக்கு மட்டும்தான் பிரிட்டன் உதாரணமோ, அல்லது அதிகாரப் பகிர்வுக்குமா?

## கடற்படைப் படகு மோதி மீனவர் சாவு

விடத்தல்தீவில் மக்கள் கொந்தளிப்பு
இரு கடற்படையினர் பொலிஸாரால் கைது

மன்னார், மார்ச் 25

மன்னாரில் கடற்றொழிலாளர் ஒருவர் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார். கடற்படையினரே அவரைப் படகினால் மோதியுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டதை அடுத்துக் கடற்படையினர் 2 பேரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார், விடத்தல்தீவு கடற்பரப்பில் நேற்று முன்தினமிரவு சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. >> 24

## மிக ஆபத்தானது ஐ.நா. அவகாசம்

தயான் ஜயதிலக எச்சரிக்கை



கொழும்பு, மார்ச் 25

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் பொறுப்புக் கூறல் விடயத்தில் மேலும் கால அவகாசம் வழங்கப்பட்டிருப்பதானது இலங்கைக்கு மிகவும் ஆபத்தானது. இந்தப் பயணம் இறுதியில் பன்னாட்டு விசாரணையில்தான் வந்து முடியும்.

இவ்வாறு கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்தார்.

பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கைக்கு இரண்டு ஆண்டு கால அவகாசம் வழங்கும் தீர்மானம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு >> 24

அச்சுவேலி முக்கொலை:

## மறியல்சாலையிலிருந்தவாறே சந்தேகநபர் சாட்சிக்கு மிரட்டல்

யாழ்ப்பாணம், மார்ச் 25

முக்கொலை செய்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் விளக்க மறியல்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தனஞ்செயன், சிறைச்சாலைக்குள் இருந்தவாறே சில மாதங்களாக வழக்கின் சாட்சிக்கு அச்சுறுத்தல் விடுத்து வந்துள்ளார் என்று குற்றஞ் சாட்டப்படுகிறது. இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸில் சாட்சி முறையிட்டார். எனினும் பொலிஸார் ஒன்றரை மாதங்களாக எந்தவித நடவடிக்கையையும் எடுக்காது நேற்று முன் தினமே வழக்கை மல்லாகம் நீதிவான் மன்றில் தாக்கல் செய்தனர். சந்தேகநபர் அச்சுறுத்தல்விடுக்குமளவுக்கு இடமளித்த விளக்க மறியல்சாலை அதிகாரி, உத்தியோகத்தர்களுக்கு எதிராகவும் அச்சுவேலி பொலிஸாருக்கு எதிராகவும் விசாரணைகளை விரைந்து முன்னெடுக்குமாறு சிறைச்சாலைகள் ஆணையாளருக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் மல்லாகம் நீதிவான் மன்று நேற்று தனித்தனியே உத்தர விட்டது.

சாதாரண குற்றமன்றி முக்கொலை புரிந்ததான குற்றச்சாட்டில் விளக்கமறியலிலுள்ள ஒருவர் இவ்வாறு செயற்படுமளவுக்கு >> 23

## பிரிட்டன் எம்.பிக்கள் போல ஒன்றித்துச் செயற்படுங்கள்

இலங்கை எம்.பிக்களுக்கு ரணில் புத்திமதி



கொழும்பு, மார்ச் 25

பிரிட்டன் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிக்கு முன்பாக இடம்பெற்ற குண்டுத் தாக்குதலின்போது அந்த நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து செயலாற்றிய விதத்தை எமது நாட்டிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும் உதாரணமாகக் கொண்டு தேவையான சந்தர்ப்பங்களில் ஒன்றிணைந்து செயலாற்ற முன்வர வேண்டும். >> 24

## பொலித்தீன்களுக்குப் பதிலாக இனி பனையோலைப் பைகள்

சாவகச்சேரி நகர சபை நடவடிக்கை

சாவகச்சேரி, மார்ச் 25

பொலித்தீன் பைகளுக்குப் பதிலாகப் பனையோலைப் பைகளையும் சாக்குகளையும் சீலைப் பைகளையும் விற்பனை செய்யச் சாவகச்சேரி சந்தையில் நகரசபையினர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன் சந்தையில் பொருள்களுடன் வழங்கப்படும் பொலித்தீன் பைகளை மீண்டும் சந்தையில் வைக்கப்பட்டுள்ள தொட்டிகளில் இடுவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சாவகச்சேரி நகர சபைச் செயலாளர் கா.சண்முகதாசன் தெரிவித்தார். >> 24

## அமைச்சர்களுக்கு வாகனம் ரூ.37 கோடி 10 லட்சம் தேவை

செல்வம் எம்.பிக்கும் 4 கோடி செலவில் வாகனம்
சம்பந்தனுக்கு உத்தியோகபூர்வ இல்லத்தைத் திருத்த 2 கோடி

கொழும்பு, மார்ச் 25

கூட்டு அரசின் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் 7 பேருக்கு வாகனம் கொள்வனவு செய்வதற்கு 37 கோடியே 10 இலட்சத்து 97 ஆயிரம் ரூபா கோரும் குறைநிரப்புப் பிரேரணையை அரசு நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது. ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் கயந்த கருணாதிலக இதை முன்வைத்தார்.

இதன்படி கல்விஇராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணனுக்கு வாகனம் வாங்குவதற்கு 3 கோடியே 98 இலட்சம் >> 23

# அதி உயர் சபைக்குள் மிகக் கண்ணியமாக நடந்துகொள்ளுங்கள்

## *எம்.பிக்களுக்குச் சபாநாயகர் அறிவுரை*

கொழும்பு, மார்ச் 25
சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதி உயர் சபையின் கௌரவத்தையும் கண்ணியத்தையும் பாதுகாக்கும் வகையில் சபைக்குள் செயற்படவேண்டும் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய பணிப்புரை விடுத்துள்ளார்.



நாடாளுமன்றத்தில் நேற்று சபாநாயகர் அறிவிப்பு வேளையிலேயே அவர் இந்த உத்தரவை விடுத்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபையில் விவாதிக்கப்படும் விடயதானத்துடன் தொடர்புடைய விடயங்கள் குறித்து மாத்திரமே கருத்துக்களை வெளியிட வேண்டும். இதற்கு அப்பால் சென்று தனிநபர்களைத் தாக்கும் விதத்தில் உரையாடக்கூடாது என நாடாளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.
கடந்த 22ஆம் திகதி இந்த உயரிய சபையின் கௌரவத்துக்கும், புகழுக்கும் இழுக்கை ஏற்படுத்தும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் செயற்பட்டுள்ளனர். தலைமை அமைச்சருக்கும், ஏனைய நாடாளுமனன்ற உறுப்பினர்கள் சிலருக்கு எதிராகவும் அவர்கள் உண்மைக்குப் புறம்பாகவும், அடிப்படையற்றதுமான குற்றச்சாட்டுகளை முன்வைத்துக் கருத்துகளை வெளியிட்டுள்ளனர். இது தொடர்பில் ஹன்சாட்டை மேற்பார்வை செய்தேன். நாடாளுமன்ற நிலையியல் கட்டளை அப்பட்டமாக இதன்போது மீறப்பட்டுள்ளது என்பதைக் கவலையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.
இவ்வாறான செயற்பாடுகளால் ஏற்படும் பாரதூரம், நாடாளுமன்ற உறுப்பினர்களின் கௌரவத்துக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்துள்ளேன். ஜனநாயகத்தின் இருப்பிடமான உயரிய சட்டவாக்கச் சபையில் அவர்களின் கௌரவத்துக்குக் களங்கம் ஏற்படுத்தும் விதத்தில் எவரும் செயற்படக்கூடாது. இதையும் மீறி செயற்படுவதானது நாடாளுமன்றத்தின் சம்பிரதாயத்துக்கும், நிலையியல் கட்டளைக்கும் முரணான செயல்.
ஏதேனும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்பில் எதிர்ப்பு, அதிருப்தி இருக்குமானால் அது குறித்து நாடாளுமன்ற சம்பிரதாயம், நிலையியல் கட்டளைச் சட்டத்துக்குட்பட்ட வகையில் செயற்படலாம். ஆளும் எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த அதி உயர் சபையில் உறுப்பினர்களின் கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையிலும், நிலையியல் கட்டளையின் பிரகாரமும் செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றார். (த-4)



# 24 நாள்களை கடந்துள்ளது கேப்பாபிலவு போராட்டம்

முல்லைத்தீவு, மார்ச். 25
கேப்பாபிலவு மக்களின் அமைதிவழிப் போராட்டம் முடிவு எதுவுமே இன்றி 24 ஆவது நாளாகவும் நேற்றுத் தொடர்ந்தது. கேப்பாபிலவு மக்களின் நியாயபூர்வமான போராட்டத்துக்கு நாட்டின் பல இடங்களில் இருந்தும் ஆதரவு பெருகி வருகின்றது.
கூட்டு அரசு எமக்கு நல்ல பதிலை எதிர்வரும் நாள்களில் வழங்கும் என்ற நம்பிக்கை உள்ளது. இல்லையேல் எமது போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்த வேண்டி ஏற்படும். கூட்டு அரசின் கைகளில்தான் முடிவு உள்ளது எனக் கேப்பாபிலவு மக்கள் தெரிவித்தனர். (த-7)

அனுதாபப் பிரேரணை மீதான விவாதத்தில்

# ரணிலுக்கு பிறந்த நாள் வாழ்த்து கூறினார் மகிந்த

கொழும்பு, மார்ச் 25
நாடாளுமன்றத்துக்கு நேற்று வருகை தந்த முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.
நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10.30 மணிக்குச் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, பொது மனுத்தாக்கல், வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று ஆகியன முடிவடைந்த பின்னர், காலஞ்சென்ற முன்னாள் தலைமை அமைச்சர்ரட்ணசிறிவிக்கிரமநாயக்கவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம் ஆரம்பமானது.
அனுதாபப் பிரேரணையில் சபை முதல்வர் உரையாற்றிய பின்னர், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் அனுதாபம் தெரிவித்து உரையாற்றினார்.
அதன் பின்னர் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச பேசினார். தனதுரையின் இறுதியிலேயே அவர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பிறந்தநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார். (த-5)

# சமுர்த்தி அலுவலகத்துக்குள் 2 பெண் ஊழியர் கைகலப்பு

## *ஒருவர் வைத்தியசாலையில் சேர்ப்பிப்பு*

கிளிநொச்சி, மார்ச்25
கிளிநொச்சி சமுர்த்தித் திணைக்கள அலுவலகத்துக்குள் இடம்பெற்றதாகக் கூறப்படும் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பெண்ணொருவர் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளாதாகத் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் இடம்பெற்றுள்ளது.
சமுர்த்தித் திணைக்களத்தில் பணியாற்றிவரும் பெண் உத்தியோகத்தர் ஒருவர் தனிப்பட்ட தகராறு காரணமாக அங்கு பணியாற்றும் சக உத்தியோகத்தரானபெண்ணைத்தலைமை அதிகாரி முன்னிலையில் தாக்கியதாகக் கூறப்படுகிறது.
சம்பவத்தையடுத்து தாக்குதலுக்கிலக்கான பெண் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர் சம்பவம் தொடர்பாக வைத்தியசாலைப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.
கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என வைத்தியசாலைப் பொலிஸார் கூறினர்.
கரைச்சிப் பிரதேச செயலாளரிடமும் இதுதொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.
பிரதேச செயலாளரிடம் இது குறித்து கேட்கமுயன்றபோதிலும் தொலைபேசி அழைப்புக்கு அவர் பதிலளிக்கவில்லை. (த-ய-6)

# சகலரும் சம உரிமைகள் பெறப்பாடுபட்டவர் ரட்ணசிறி

## *சபையில் சம்பந்தன் புகழாரம்*

கொழும்பு, மார்ச் 25
ஒன்றிணைந்த நாட்டுக்குள் சமாதானமாக வாழவேண்டுமாயின் அனைவருக்கும் உரிமைகள் வழங்கவேண்டும் என்ற தெளிவான கருத்தில் இருந்தவர் முன்னாள் தலைமை அமைச்சர் மறைந்தரட்ணசிறிவிக்கிரமநாயக்க. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணைமீதான விவாதத்தில் தலைமை அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் அரச தலைவர், முன்னாள் சபாநாயகர் உட்பட மூத்த அரசியல் தலைவர்கள் உரையாற்றினர்.
அரச தலைவர் உட்பட மேலும் சில அமைச்சர்கள் உரையாற்றவேண்டியிருப்பதால் பிரிதொரு நாளிலும் விவாதம் நடக்கவுள்ளது.
இந்த விவாதத்தில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், சிறிலங்கா சுதந்திரக் கட்சியை வளர்ப்பதற்குப் பெரும் பாடுபட்ட ஒரு நேர்மையான சிறந்த தலைவர். அதனை அவர் சார்ந்த மக்கள் மட்டுமல்லாது நாட்டு மக்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.
அவருடன் நான் அடிக்கடி பேசியுள்ளேன். அவருடன் உரையாற்றும் போது தெளிவான கருத்துள்ளவருடன் பேசும் உணர்வு எமக்கு ஏற்படும். தன்னடக்கம் உள்ளவர். தன்னை வளர்த்துக் கொள்வதற்காக இனவாதம் பேசியவர் அல்ல. ஒன்றிணைந்த நாட்டுக்குள் சமாதானமாக வாழவேண்டுமாயின் அனைவருக்கும் உரிமைகள் வழங்க வேண்டும் என்ற தெளிவான கருத்தில் இருந்தவர். அவர் ஒருபோதும் இனவாத அடிப்படையில் பேசியது கிடையாது. சபையின் மாண்பை பேணி சிறப்பான நடத்தையை வெளிப்படுத்தியவர். சபையை சந்தையாக மாற்ற அவர் ஒருபோதும் முயற்சிக்கவில்லை. அதனாலேயே அவரை நாங்கள் நேசிக்கின்றோம், மதிக்கின்றோம் என்றார்.

**தினேஸ் குணவர்தன**
அவர் தேர்தலில் போட்டியிடும் போது அவரைத் தோல்வியடையச் செய்வதற்காகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். ஆனால், மயிரிழையில் உயிர் தப்பித் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தார். கொலைக் குழுக்கள் இவ்வாறான நேர்மையான அரசியல் தலைவர்களை இலக்கு வைத்து நடத்தப்பட்டன. அச்சுறுத்தல்களுக்குப் பின்வாங்காது மக்கள் பணியில் ஈடுபட்டார். பன்னாட்டு நீதிபதிகளை இலங்கைக்குக் கொண்டு வந்து வழக்குகளை விசாரணை செய்வதை இல்லாமல் செய்ய சிறிமாவுடன் இணைந்து அரசமைப்பு ஒன்றினை உருவாக்கினார். மகாராணியின் கீழிருந்த இலங்கையை விடுவித்து தலைமை அமைச்சர், அரச தலைவர் முறையைக் கொண்டு வந்தனர்.
1977இல் தோல்வியடைந்தபோது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு சீல் வைக்கப்பட்டு, காரியாலயத்துக்குப் பூட்டு போட்ட காலம் எமக்கு நினைவிருக்கின்றது. அப்போது, ரட்ணசிறி விக்கிரமநாயக்க கட்சியின் பொதுச் செயலாளராகக் கட்சியைச் சட்டரீதியாக மீட்டெடுத்தார்.
அவர் உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். ஆனால், அவர் சோர்ந்து போகவில்லை. அதுவே அவர் எமக்கு வழங்கிச்சென்றுள்ளமுன்னுதாரணமாகும். அவர் மீது சுமத்தப்பட்ட பழிகளுக்கு அவர் குற்றவாளியாக நிரூபிக்கப்படவில்லை. எனினும், அவர் அக்காலப்பகுதியில் மிகவும் துன்பப்பட்டார். தினமும்புலனாய்வுப் பிரிவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். வரலாறு மீண்டும் தற்போது மீட்டப்படுகின்றது -என்றார்.

**லக்ஸ்மன் கிரியல்ல**
அரசை தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் மேலும் சில அமைச்சர்கள் இந்த பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்ற வேண்டியுள்ளதாலும், அவர்கள் இன்றைய தினத்தில் (நேற்று) இல்லாத காரணத்தினாலும் இவ்விவாதத்தை இரண்டு நாள் விவாதமாக நடத்துமாறு கேட்டுக்கொண்டபோது அதனைச் சபாநாயகர் கரு ஜயசூரிய ஏற்றுக்கொண்டார்.

**நிமல் சிறிபால டி சில்வா**
கொள்கை ரீதியான அரசியல் நடத்திய சிறந்த அரசியல் தலைவர். நாட்டின் சுயாதீனத்தன்மை மற்றும் தனித்துவத்தை பாதுகாக்கும் வகையிலேயே அவர் செயற்பட்டார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து பல்வேறு பதவிகளை வகித்து மக்களுக்கு சேவையாற்றியதுடன் கட்சியைப் பாதுகாக்கும் நிலைப்பாட்டிலேயே என்றும் இருந்தார்என்றார். (த4)

## மத்திய வங்கியின் பிரதி ஆளுநரிடமும் விசாரணை

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநரான பீ.சமரசிறியை நாளை மறுதினம் சாட்சியமளிக்கப் பிணைமுறி விசாரணை ஆணைக் குழுவின் முன் பிரசன்னமாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.
சர்ச்சைக்குரிய பிணைமுறி மோசடி நடந்த காலத்தில் மத்திய வங்கியின் பிரதி ஆளுநராகப் பணியாற்றிய அவரை 27ஆம் திகதி சாட்சியமளிக்கப் பிரசன்னமாகுமாறு ஆணைக் குழுவின் செயலாளர் சுமதி பால உடுகமசூரிய அழைப்பாணை விடுத்துள்ளார். (த-4)

## மகிந்த அணியின் பேரணி
## திட்டமிட்டவாறு நடந்தே தீருமாம்

காலி- ஹபராதுவ நகரில் பொது எதிரணியினர் இன்று ஏற்பாடு செய்திருக்கும் பேரணியைத் தடுத்து நிறுத்த அரசு எந்த முயற்சியை எடுத்தாலும் அது திட்டமிட்டபடி நடந்தே தீரும் என்று பொது எதிரணியின் காலி மாவட்டத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரமேஷ் பத்திரன திட்டவட்டமாகத் தெரிவித்தார்.
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் தலைமையில் நடக்கவுள்ள இந்தக் கூட்டத்தை ஹபராதுவ நகரிலுள்ள மோதரவத்தையில் நடத்த அனுமதி வழங்கியிருந்த காலி பொலிஸார், பின்னர் கொக்கல முதலீட்டு அபிவிருத்தி வலயத்துக்கு அருகிலுள்ள மைதானத்தில் நடத்துமாறு ஆலோசனை வழங்கினர். அந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்ட பொது எதிரணியினர் அந்த மைதானத்தில் கூட்டத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்து முடித்துள்ளனர். (த-4)



# காணாமற்போனோரின் உறவினர் கவனவீர்ப்பு தீர்வின்றித் தொடர்கிறது

கிளிநொச்சி, மார்ச் 25
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம் பல வாரங்கள் கடந்தும் தீர்வின்றித் தொடர்கிறது. அரச தரப்பிலிருந்து உறுதியான பதில் இன்னமும் கிடைக்காத நிலையில் மக்களும் தமது கோரிக்கையில் உறுதியாக இருந்து போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.
கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்ப உறவுகளின் தொடர் போராட்டம் 33 ஆவது நாளாகவும் நேற்றுத் தொடர்ந்தது.

**கிளிநொச்சி**
கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் கடந்த 20 ஆம் திகதி ஆரம்பமான இந்தப் போராட்டத்துக்குப் பல்வேறு தரப்பினரும் ஆதரவு வழங்கி வருகின்றனர்.

**முல்லைத்தீவு**
நம்பித்தானே எங்கள் உறவுகளை இராணுவத்திடம் கையளித்தோம். ஏன் இன்னும் விடவில்லை? ஒவ்வொருவரும் தமது அப்பா, அண்ணா எப்போது வருவார்கள் என்ற எதிர்பார்ப்பில் இன்றும் காத்துக் கொண்டிருக்கிறோம் என்று முல்லைத்தீவில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்தனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 17 நாள்களாகத் தொடர் அமைதிவழிப் போராட்டம் நடக்கிறது. தகவல் அறியும் சட்டத்தின் ஊடாகக் காணாமற்போனோர் குறித்துத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக 150 க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் மாவட்டச் செயலகத்தில் கையளிக்கப்பட்டுள்ளன.

**வவுனியா**
வவுனியாவில் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கடந்த 29ஆவது நாளாக தமது போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.
வவுனியா மத்திய அஞ்சல் அலுவலகத்துக்கு முன்னால் உறுதியுடன் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
யாழ்ப்பாணம் -மருதங்கேணியிலும் இவ்வாறே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (த-4- 6-7)

## எச்1என்1 வைரஸ் காய்ச்சல் முல்லைத்தீவில் கட்டுக்குள்

முல்லைத்தீவு, மார்ச் 25
முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்பட்ட எச்1என்1 வைரஸ் காய்ச்சல் ஓரளவுக்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டப் பொது வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.
முல்லைத்தீவு மாவட்டத்தில் பெப்ரவரி 14ஆம் திகதி தொடக்கம் இன்று வரை 62 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். இது தற்போது ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. குழந்தைகள், முதியவர்கள், கர்ப்பிணிப் பெண்களே இலகுவாகத் தாக்கத்துக்கு உள்ளாகின்றனர்.
எனவே, அவசியமில்லாமல் வைத்தியசாலைக்கு வருவதை இவர்கள் இயலுமான வரை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (த-7)

## சோலர் மின்விளக்கை சேதமாக்கிய விசமிகள்

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையால் தர்மக்கேணிப் பகுதியில் நிறுவப்பட்ட சோலர் மின் விளக்கு இனந்தெரியாத நபர்களால் சேதமாக்கப்பட்டுள்ளது.
நேற்று முன்தினம் இரவு ஒளிர்ந்து கொண்டிருந்த 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்தச் சோலர் மின்குமிழ், அதன் உபகரணங்கள் என்பன இனந்தெரியாத நபர்களால் சேதமாக்கப்பட்டுள்ளன.
இது தொடர்பாகப் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைச் செயலாளர் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.
பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையினால் பல இடங்களில் இந்தச் சோலர் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-6)

## ஈர நிலப் பாதுகாப்புக் குறித்து வவுனியாவில் விழிப்புணர்வு



யாழ்ப்பாணம், மார்ச் 25
'ஈரநிலத்தைப் பாதுகாப்போம்' என்னும் தொனிப் பொருளில் விழிப்புணர்வு நடவடிக்கையொன்றை மத்திய சுற்றாடல் அதிகார சபை, வவுனியா வடக்கு வலயக் கல்வி அலுவலகம் மற்றும் கனகராயன்குளம் மகா வித்தியாலயம் ஆகியன இணைந்து நேற்று மேற்கொண்டன.
கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஈர நிலப் பாதுகாப்பின் அவசியம் தொடர்பான கருத்துரைகள் வழங்கப்பட்டதோடு நிகழ்வின் இறுதியில் பாடசாலை வளாகத்தில் மரக் கன்றுகளும் நடப்பட்டன. (த)

நாமல் ராஜபக்சவின் வழக்கில்

## மோட்டார் போக்குவரத்துப் பிரிவு ஆணையர் மீது பிடியாணை

கொழும்பு, மார்ச் 25
பெரும் நிதிமோசடி தொடர்பில் முன்னாள் அரச தலைவரின் மகனான நாமல் ராஜபக்சவுக்கு எதிராக கடுவெல நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் சாட்சியமளிக்க வரத் தவறிய மோட்டார் போக்குவரத்து ஆணையாளருக்குக் கடுவெல நீதிவானும் மேலதிக மாவட்ட நீதிவானுமான பிரசன்ன அல்விஸ் பிடியாணை பிறப்பித்துள்ளார்.
நாமலின் பாவனையில் இருந்ததாகக் கூறப்படும் சுமார் 80 இலட்சம் ரூபா பெறுமதியான சொகுசு வாகனம் தொடர்பில் சாட்சியமளிக்கவே மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் அழைக்கப்பட்டிருந்தார்.
நாமல் ராஜபக்சவின் சார்பில் அன்றைய தினம் முன்னிலையான அவரது சட்டத்தரணி தனது கட்சிக்காரர் இந்த வாகனத்தை ஏற்கனவே களனியிலுள்ள சாந்தா வீரக்கொடி என்பவருக்கு விற்றுவிட்டதாகத் தெரிவித்தார்.
இந்த வாகனம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமைகளின் கீழ் நாமல் ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டிருந்தது எனவும், அது தொடர்பான சகல ஆவணங்களும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திலிருந்து காணாமல் போயிருப்பதாகவும் பொலிஸ் நிதிமோசடி விசாரணைப் பிரிவினர் தமது முறைப்பாட்டில் தெரிவித்திருந்தனர்.
இதனடிப்படையில் விளக்கமளிப்பதற்காகவே அழைக்கப்பட்டிருந்த மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் பிரசன்னமாகாததால் அவரைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு பிடியாணை பிறப்பித்த நீதிவான், வழக்கின் அடுத்த விசாரணையை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (த-4)

## சிறைவைப்பு அரசியலை தொடர்கின்றது ஐ.தே.க.

நாடாளுமன்றில் மகிந்த கொதிப்பு



கொழும்பு, மார்ச் 25
1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் 'நக்ஸலைட்' எனக் கூறி ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை ஐக்கிய தேசியக் கட்சி அரசு அன்று சிறையில் அடைத்தது.
சிறையில் அடைக்கும் அந்த அரசின் செயல் இன்றும் தொடர்கின்றது.
இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
முன்னாள் தலைமை அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
1960 ஆம் ஆண்டு அரசியல் களத்துக்கு வந்த ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுடன் நான் 1970 ஆம் ஆண்டு முதல் நெருங்கிப் பழகியுள்ளேன். அவர் நேர்மையான தலைவர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் பெரும் பங்காற்றியவர்.
1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தோல்வியடைந்தார். அதன் பின்னர் அவரை 'நக்ஸலைட்' எனக் கூறி ஐக்கிய தேசியக் கட்சி அரசு சிறையில் அடைத்தது. இன்று போன்றே அன்றும் சிறையில் அடைத்து வைத்தனர். இந்த நிலையில், எந்த மாற்றமும் இல்லை. அவர் சில மாதங்கள் சிறையில் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்காக அவர் குரோதத்துடன் ஒருபோதும் செயற்படவில்லை.
எனது ஆட்சிக் காலத்தில் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டபோது அவருடன் மேலும் நெருங்கிப் பழகக் கூடியதாக இருந்தது. அந்தக் காலத்தில் போர் இடம்பெற்றுக்கொண்டிருந்தது. விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்காக அவர் வழங்கிய பங்களிப்பு நினைவுடன் பாராட்டத்தக்கது. நாட்டுக்கு விசுவாசமாகவும் இரகசியங்களைப் பேணக்கூடியவராகவும் அவர் இருந்தார். அத்துடன், தன்னிடம் இருந்த நீண்ட கால அரசியல், சட்டத்தில் இருந்த அனுபவங்கள் மூலம் எமக்கு அவர் வழிகாட்டியதை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவு கூருகின்றேன்.
அவர் இனவாதி அல்ல. ஆனால், அவருக்கு இனத்தின் மீதும் தேசத்தின் மீதும் மிகுந்த பற்றிருந்தது. அதற்கமைவாகவே அவர் செயற்பட்டார். ஒன்றிணைந்த நாட்டைப் பாதுகாப்பதற்காக நாட்டின் ஐக்கியம் தொடர்பில் தெளிவான நிலைப்பாட்டில் அவர் இருந்தார் - என்றார். (த-5)

# இலங்கை – ரஷ்யா இடையே உறவு மேலும் வலுவடையும்

## இரு தரப்புச் சந்திப்பில் இணக்கம்

இலங்கை - ரஷ்யா இடையிலான புதியதோர் அத்தியாயத்தை ஆரம்பித்துவைத்துள்ள இரு தரப்புத் தொடர்புகளின் அனுகூலங்களை இலங்கை மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செய்படுவதாக ரஷ்யத் தலைமை அமைச்சர் திமித்ரி மெத்வதேவ் தெரிவித்தார் என அரச தலைவரின் ஊடகப்பிரிவால் அனுப்பிவைக்கப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ரஷ்ய அரச தலைவர் விளாடிமிர் புடினின் அழைப்பின் பேரில் ரஷ்யாவுக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், ரஷ்யத் தலைமை அமைச்சர் திமித்ரி மெத்வதேவ்வுக்கும் இடையில் நேற்று நண்பகல் இடம்பெற்ற உத்தியோகபூர்வச் சந்திப்பின் போதே ரஷ்யப் பிரதமர் திமித்ரி மெத்வதேவ் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது ரஷ்யப் பிரதமரால் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வரவேற்கப்பட்டார். அதன் பின்னர் தலைவர்கள் இருவருக்கும் இடையில் ஆரம்பமாகிய இருதரப்பு கலந்துரையாடல்களின்போது 60 வருடகால தொடர்புகளை வலுவுடன் முன்னோக்கிக் கொண்டு செல்லல் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

43 வருடங்களின் பின்னர் இலங்கை அரச தலைவர் ஒருவருக்கு கிடைத்த இந்த உத்தியோகபூர்வ வரவேற்பு ஒட்டுமொத்த இலங்கையர்களுக்கும் கிடைத்த கௌரவமாகும் என இதன்போது தெரிவித்த அரச தலைவர், இலங்கைக்குத் தேவையான பொருளாதார வர்த்தக ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொடுப்பதற்கு விளாடிமிர் புடினுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் உதவியது என்றார்.

அமைச்சர்களான மங்கள சமரவீர, எஸ்.பி.நாவின்ன, மகிந்த சமரசிங்க, சுசில் பிரேமஜயந்த, ஜோன் அமரதுங்க, தயாசிறி ஜயசேகர ஆகியோர் உள்ளிட்ட இலங்கையின் தூதுக் குழுவினர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(து-21)

# வேலையற்ற பட்டதாரிகளின் துறைசார்ந்த விவரங்களை கோருகிறார் வடக்கு முதல்வர்

யாழ்ப்பாணம், மார்ச் 25

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளின் துறைசார்ந்த ரீதியில் விவரங்களைத் தொகுத்து எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் வழங்குமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். அத்துடன் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் ஆடைத் தொழிற்சாலைகளின் முகாமைத்துவப் பணிகளில் சேவையாற்றுவதற்கு வடக்கு மாகாணப் பட்டதாரிகள் முன்வரவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.


வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளின் பிரதிநிதிகளுக்கும் முதலமைச்சருக்கும் இடையே நேற்று மாலை சந்திப்பு இடம்பெற்றது.

சந்திப்பில் பங்கேற்ற பட்டதாரிகளின் பிரதிநிதிகள் தமது கோரிக்கைகளை முதலமைச்சரிடம் முன்வைத்தனர்.

"வடக்கு மாகாணத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளின் முழுவிவரத்தையும் துறைசார்ந்த ரீதியில் தொகுத்து எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கையளிக்க வேண்டும். அந்த விவரங்கள் வடக்கு மாகாண அமைச்சுகளுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்படும் .

ஆடைத்தொழிற்சாலைகளில் காணப்படும் முகாமைத்துவப் பணிகள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் போன்ற வேலைவாய்ப்புக்களுக்கு பட்டதாரிகள் விண்ணப்பிக்க முன் வரவேண்டும். தொண்டர் ஆசிரியர் நியமனங்களில் உள்ள முறைகேடுகள் தொடர்பில் விரிவான விசாரணை நடத்தப்படும். மாகாண சபையின் கீழ் உள்ள வெற்றிடங்களை உடனடியாக நிரப்பவும் கொழும்பு அரசின் கீழ் உள்ள வெற்றிடங்கள் பெறப்பட்டு, அவற்றுக்கு வடக்கு பட்டதாரிகளை உள்ளீர்க்கப் பரிந்துரை செய்யப்படும்" என்று வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்தார்.

(வ-21)



# நாட்டைப் பாதுகாக்க பிக்குகள் அதிகாரத்தை கைப்பற்றவேண்டும்

## ஞானசார தேரர் அழைப்பு

கொழும்பு, மார்ச் 25

நாடு மிகவும் அடாவடி நிலைமைக்கு சென்றுள்ளது. இதனால், நாட்டைக் காப்பாற்ற பௌத்த பிக்குகள் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார். "நாடு அடாவடி நிலைமைக்கு சென்ற சகல சந்தர்ப்பங்களிலும் அதில் இருந்து நாட்டைப் பௌத்த பிக்குமாரே காப்பாற்றினர். நாட்டை நேசிக்கும் மன்னர்களை உருவாக்க பௌத்த பிக்குகளுக்கு வரலாற்றில் வழங்கப்பட்டுள்ள பொறுப்பில் இருந்து அவர்கள் விலகிச் செல்ல முடியாது" என்றும் அவர் கூறினார்.

(வ-5)

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழர்...

இந்திய கம்யூனிசக் கட்சி உறுப்பினர் டி.ராஜா எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளித்தார். இலங்கையில் தமிழர்களின் நலன்களைப் பாதுகாப்பதே இந்தியாவின் இலக்கு, நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் 2015இல் நிறைவேற்றப்பட்டது போன்றதொரு தீர்மானமே இப்போதும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள தமிழர்களின் நலன்களைப் பாதுகாப்பதே இந்தியாவின் இலக்கு, நோக்கம். இதனை இரு வழிகளில் அடைய முடியும். பலவந்தப்படுத்துவதன் மூலமாக அல்லது நட்பு நாட்டோடு இணக்கப்பாட்டுடன் செயற்பட்டு ஊக்குவித்தல் மூலமாக அதைச் செய்ய முடியும்.

இங்கே பிரச்சினை (போர்க்குற்றங்கள்) தொடர்பில் உறுப்பினர்கள் எழுப்பிய வேதனைகளுடன் அதேயளவு வலியோடு அரசும் இணைந்துகொள்கிறது.

### ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இந்தியாவின் நிலைப்பாடு

இலங்கையிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டதன் அடிப்படையிலும் இலங்கை வாக்குறுதி வழங்கியதன் அடிப்படையிலும் உருவாகிவரும் அபிப்பிராயத்தோடு சேர்ந்தே பயணிக்கின்றோம் என்று நினைக்கின்றேன். அந்த அபிப்பிராயத்தை உடைப்பதற்கு நாங்கள் விரும்பவில்லை. அதனால் சேர்ந்து பயணிப்பது என்று முடிவு செய்கிறோம்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றியும், அவர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களை நிறுத்தும் படியும் முன்னைய இந்திய அரசுகளும் குரல் எழுப்பியிருந்தன. இந்தப் பிரச்சினை எழுப்பப்படாமல், இலங்கை இந்திய இரு தரப்புகளுக்கும் இடையில் எந்தவொரு பேச்சும் நடந்ததில்லை.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை தொடர்பான தீர்மானத்தால் நாம் திருப்திப்படுகிறோம் என்று சொல்லமுடியாது. அதனால்தான் மற்றொரு தீர்மானம் மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ளது. அதனால்தான், 2015 முதல் 2017 வரையான காலப்பகுதியில் அவர்களுக்கு வழங்கப்பட்ட இலக்குகளைப் பூர்த்தி செய்வதற்கு மேலும் இருவருட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

ஐ.நா. ஒரு கால எல்லையை வகுத்துள்ளது. அந்தக் காலப் பகுதிக்குள் குறித்த விடயங்களை இலங்கை செய்து முடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆக்கபூர்வமான ஒத்துழைப்புச் செயற்பாடுகள் மூலமாக உரிமைகளைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் முடியும் என்கிற உறுதியான நம்பிக்கையின் அடிப்படையில்தான் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இந்தியாவின் அணுகுமுறை அமைந்தது.

தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியிருப்பதன் மூலம், தான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கும் தமிழ் மக்களின் நலன்களைப் பாதுகாப்பது தொடர்பான அக்கறைகளைப் பூர்த்தி செய்வதற்கும் இலங்கை உறுதியளித்துள்ளது. ஒரு பக்கத்தில் பார்த்தால் இது ஓர் எதிர்பார்ப்பு. மறுபுறத்தில் ஐ.நா.வுக்கு முன்பாக வழங்கப்பட்டுள்ள வாக்குறுதி - என்றார்.

முன்னதாக, இலங்கையில் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை நிறுத்துவது, தமிழர்களுடைய நலன்களைப் பாதுகாப்பது ஆகியவற்றில் இந்திய அரசின் நிலைப்பாடு என்ன என்று இந்தியக் கம்யூனிசக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டி.ராஜா கேள்வி எழுப்பினார். "பிரச்சினை (போர்க்குற்றங்கள்) குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிப்படுத்திய வேதனைகளை அதே வலியுடன் இந்திய அரசும் பகிர்ந்துகொள்கிறது. எமது இலக்கு, நோக்கம் தமிழர்களின் நலன்களைப் பாதுகாப்பதே. பலவந்தமாகச் செய்வதன் ஊடாகவோ நட்பு நாட்டோடுஒருங்கிணைந்து செயற்படுவதன் மூலமாகவே அதனைச் செய்யமுடியும்" என்றார்.

இலங்கையில் சாதகமான மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன என்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். இலங்கையின் எதிர்க் கட்சித் தலைவராக தமிழ்க் கட்சி (கூட்டமைப்பு) ஒன்றின் தலைவர் தெரிந்தெடுக்கப்பட்டமை அதில் முக்கியமானது என்றும் சுட்டிக்காட்டினார்.

இலங்கை இந்தியாவின் நெருங்கிய அயல் நாடு என்பதால், அங்கு நடக்கும் மாற்றங்கள் தொடர்பில் கண்டுகொள்ளாமல் இருக்கமுடியாது என்றும் அவர் கூறினார். "ஒன்றிணைந்த இலங்கைக்குள் தமிழ்ச் சமூகம் சமத்துவத்தோடும் பாதுகாப்போடும் அமைதியோடும் மகிழ்சியோடும் தங்கள் வேணவாக்களை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் இலங்கையை பல்லின பல மத பல மொழிச் சமூகமாக நிலைநிறுத்துவதற்கான முயற்சிகளுக்கு இந்தியா எப்போதுமே ஆதரவு வழங்கி வந்திருக்கின்றது" என்றார் அவர்.

தலைவர்களுடைய மதிநுட்பம் மற்றும் அரசியல் விருப்பத்தோடும் மக்களுடைய ஆதரவோடும் உண்மையான நல்லிணக்கத்தையும், வளர்ச்சியையும் அடையும் என்று இந்தியா எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

மனித உரிமைகள் தொடர்பான உலகின் கவலைகள் மீது இலங்கை நவடிக்கை எடுப்பதைக் காண இன்னும் எவ்வளவுகாலம்தான் இந்தியா காத்துக்கொண்டேயிருக்கும் என்று டி.ராஜா இடையீட்டுக் கேள்வி ஒன்றை முன்வைத்தார். அதற்குப் பதிலளித்த சுஸ்மா, மனித உரிமைகள் மீறல்களை மூடி மறைப்பதற்கு இலங்கைக்கு உதவிவரும் இந்தியா அதனுடைய ஒரு பங்காளி மாதிரி நடந்துகொள்ளக்கூடாது என்று டி.ராஜா வலியுறுத்தினார். "தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு சண்டையிடுவதற்கு இந்தியா உதவியிருக்கின்றது. இலங்கையின் செயற்றிறனின்மையை வெளிப்படுத்தாமல் விடுவதன் மூலம் அதனை மூடி மறைக்க முயற்சிக்கும் இந்தியாவுக்கு குற்ற உணர்ச்சி இல்லையா?" என்றும் அவர் சாடினார்.

"2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்தது. ஆனால் ஆயுதம் தரிக்காத தமிழர்களுக்கு எதிரான போர்க்குற்றங்களுக்கு காரணமானவர்களைத் தண்டிப்பதற்கு இலங்கை அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. உலகத்தின் ஏனைய பகுதிகளில் இதுபோன்ற வன்முறைகள் இடம்பெற்றிருக்கின்றன. அங்கெல்லாம் போர் முடிந்த பின்னர் நல்லிணக்கமும், பொறுப்புக்கூறலும் இடம்பெற்றிருக்கின்றன. இலங்கை விடயத்தில், உலகின் கவலையை அது கவனத்தில் கொள்ளவில்லை" என்றார்.

(உ-5)

## போரை...

நீதித்துறையின் ஊடாக விசாரணை செய்து தண்டனை வழங்குவதற்கு நாம் எதிராக இருக்கப்போவது இல்லை. அதனைச் செய்ய வேண்டும்"

இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் செய்தியாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் எங்கள் முடிவில் தெளிவாக இருக்கின். றோம். எமது நீதித்துறை எமக்குப் போதுமானது. இந்த நாட்டில் நடைபெற்றதாக கூறப்படும் பிரச்சினைகள் தொடர்பில் விசாரணை செய்வதற்கான இயலுமையை இந்த அரசு கொண்டுள்ளது. அதேபோல் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் எவ்வாறான தீர்மானம் கொண்டு வரப்பட்டாலும் சுயாதீனமான அரசு என்ற வகையில் நாம் முடியுமான மற்றும் செய்ய வேண்டிய விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

போர்க்குற்றங்கள் தொடர்பில் ஆராயும் போது, நாட்டில் நிலவும் அமைதியையும் நல்லிணக்கத்தையும் குழப்புவதற்கு வாய்ப்பளிக்க முடியாது. இராணுவத்தினர் சட்டத்துக்கு உட்பட்டு தீவிரவாதத்துக்கு எதிராகப் போரிட்டனர். இன்றைய சூழ்நிலையில் தீவிரவாதத்தின் தீவிரத்தன்மை உலக நாடுகளில் உணரப்பட்டுள்ளது. பிரிட்டன் நாடாளுமன்ற வளாக தாக்குதல், பிரான்ஸ் தாக்குதல் போன்றன இதற்கு உதாரணம். விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் 12 ஆயிரம்பேர் இன்றுநாட்டில்வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றார்கள்.

போர்க்குற்றம் பற்றி யாராவது பேசுவார்களாயின் முதலில் முன்னாள் போராளிகளைத் தான் கைது செய்ய வேண்டும். அது முடியுமா? என்பது தொடர்பில் முதலில் அரசு சிந்திக்க வேண்டும். மகிந்த ராஜபக்ச செய்த மிகப்பெரிய முட்டாள்தனம் அவர்களை விடுதலை செய்தமையே. 12 ஆயிரம் பேரையும் கைது செய்ய வேண்டும் அது முடியுமா?

ஜனநாயகத்தை பாதுகாக்க போரில் ஈடுபட்டவர்களை நாம் ஒருபோதும் விசாரணை செய்ய அனுமதிக்கப்போவது இல்லை. அவர்களை நாம் பாதுகாக்க வேண்டும். புலிகளுக்கு எதிரான போரில் ஈடுபட்ட பாதுகாப்புத் தரப்புக்குத் தண்டனை வழங்குவதை நாம் ஏற்றுக்கொள்ளப்போவது இல்லை. இந்த அரசுக்கு அந்த அதிகாரம் இல்லை.

சிலர், சில இடங்களில் வாக்குறுதிகளை வழங்கினாலும், அதனை இந்த நாட்டுக்குள் செய்ய முடியாது என்பதை நாம் ஏற்கனவே தெளிவாகக் கூறிவிட்டோம். போரை வெற்றி கொண்ட இராணுவத்துக்கு மேலும் கௌரவத்தை வழங்குவோமே தவிர, தண்டனை வழங்கப்போவது இல்லை. முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, பான் கீ மூனுக்கு வழங்கிய வாக்குறுதிகளாலேயே இந்த பிரச்சினை ஆரம்பமானது. அதேபோல் இந்த அரசும் 2015ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியது. யார் எவ்வாறான வாக்குறுதிகளை வழங்கினாலும் தீவிரவாதத்தை ஒழித்துக்கட்டிய இராணுவத்தை விசாரணை செய்ய அரசமைப்பின் ஊடாகவும் வாய்ப்பில்லை.

யார் என்ன சொன்னாலும் போரை வெற்றி கொண்ட இராணுவத்தை பன்னாட்டு நீதிமன்றில் விசாரிக்க அனுமதிக்கப்போவது இல்லை. எனினும் சாட்சிகள் காணப்படும் சில குற்றச்சாட்டுகள் தொடர்பில் உள்நாட்டு நீதிபதிகள் ஊடாக விசாரணை செய்வதற்கான பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதனூடாக இராணுவத்தின் கௌரவம் மேலும் உயர்வடையும். புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் ஊடாகவோ வேறு வழிகளிலோ வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்டுவந்து விசாரணை செய்ய இடமளிக்கப்போவது இல்லை - என்றார்.

(வ-5)

# கத்தியுடன் நடமாடிய நபர் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

## சரசாலையில் நேற்றிரவு சம்பவம்




யாழ்ப்பாணம், மார்ச் 25
சாவகச்சேரி, சரசாலை வடக்கு பகுதியில் கத்தியுடன் நடமாடிய ஒருவர், அந்தப் பகுதி இளைஞர்கள் சிலரால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.
இந்தச் சம்பவம் நேற்றிரவு 7:30 மணியளவில் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.
"சந்தேகத்துக்கு இடமாக நபரைச் சரசாலைப் பகுதி இளைஞர்கள் சிலர் பிடித்து சோதனை செய்தனர். அவரிடம் இரு கத்திகள் இருந்ததை அவர்கள் அறிந்தனர். இதுதொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கப்பட்டது.
சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்தனர்" என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-8)

# கிளிநொச்சியில் தீயணைப்பு பிரிவுக்கு 97 மில்லியன் ரூபா

## கரடிப்போக்குச் சந்தியில் விரைவில் வாகனம் மற்றும் கட்டட வசதிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 25
கிளிநொச்சி மாவட்டத்தின் தீயணைப்புப் பிரிவுக்கு 97 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.
கிளிநொச்சி மாவட்டத்தில் போருக்குப் பின்னர்

>> 24

## தொழிற்பயிற்சிகளுக்கு விண்ணப்பம் கோரல்

தென்மராட்சி, மார்ச் 25
தென்மராட்சி கல்வி வலய முறைசாராப் பிரிவினரால் 2017ஆம் ஆண்டுக்கான தொழிற் பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
"வீட்டு மின்சுற்று அமைத்தல் பயிற்சிகள் நுணாவில்மேற்கு அ.த.க.பாடசாலையிலும், உடையமைத்தல் பயிற்சிகள் மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்திலும், தோல் பொருள்கள் உற்பத்திப் பயிற்சிகள் சாவகச்சேரி விடிவெள்ளி சமூக மேம்பாட்டு நிறுவனத்திலும் நடாத்தப்படவுள்ளன.
பயிற்சி நெறிகளை மேற்கொள்ள பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தவர்கள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் வலய கல்வி முகாமைத்துவப் பிரிவில் அல்லது பயிற்சி நடைபெறவுள்ள நிலையங்களில் பதிவு செய்ய முடியும்" என்று வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்தார். (வ-9)

## கல்வாரி யாகம்

யாழ்ப்பாணம், மார்ச் 25
தவக்காலத்தை முன்னிட்டு யாழ். திருமறைக் கலாமன்றத்தால் வருடா வருடம் மேடையேற்றப்படும் இயேசு கிறிஸ்து நாதரின் திருப்பாடுகளைச் சித்திரிக்கும் 'கல்வாரி யாகம்' எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6,7,8,9 ஆம் திகதிகளில் (வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு) யாழ். திருமறைக்கலாமன்ற அரங்கில் இடம்பெறும்.
அதற்கமைவாக வியாழன், சனி, ஞாயிறு தினங்களில் மாலை 6.45 மணிக்கும், வெள்ளிக்கிழமை மாலை 7.15 மணிக்கும் காட்சிகள் ஆரம்பமாகும். இந்த ஆற்றுகையில் பெருமளவு கலைஞர்கள் நடிப்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-51)


**வீடு வாடகைக்கு தேவை**

சிறிய குடும்பம் ஒன்று வசிப்பதற்கு யாழ்ப்பாணத்திலிருந்து இருந்து 3km எல்லைக்குள் வீடு தேவை.

077 474 4153

**வேலையாள்கள் தேவை**

ஹோட்டல் ஒன்றிற்கு சகல விதமான வேலையாள்களும் உடன் தேவை. அனைத்து வசதிகளும் செய்துகொடுக்கப்படும். ஹோட்டல் ஒன்றும் வாடகைக்கு விடப்படும்.

077 719 6405, 076 916 9492

**யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகின்றது**

ஸ்ரீகௌசிக அகஸ்திய
நாடி சோதிட நிலையம் (pvt)Ltd
P.ஜெய்சங்கர்

கொழும்பில் கடந்த 25 வருடங்களாக கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம் தங்களின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள், தொழில்வாய்ப்புக்கள், வெளிநாட்டுப்பயணம்போன்றவற்றைக்கூறிப்புகழ்பெற்ற சோதிடர்களால் தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி கீழ் கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகின்றது.

தொடர்புகளுக்கு.
384 A, நாவலர் வீதி, (கைலாசபிள்ளையார் கோயில் சந்தி,நல்லூர்.)
021 2217944.

கொழும்பு முகவரி .19,1/1, கொத்தலாவல மாவத்தை, பம்பலப்பிட்டி.
தொலைபேசி . 011 258 6180 , 011 258 6208

**முற்றிலும் இலவசம்**

G.C.E O/L மற்றும் G.C.E A/L படித்த மாணவர்களுக்கு தமது உயர்கல்வியை தொடர நல்ல ஆலோசனைகள் குறைந்த பட்சம் IELT.S 5.00 புள்ளி உடனடியாக விரையுங்கள்.

குறைந்த செலவில் கொழும்பில் அல்லது வவுனியாவில் வகுப்புக்களை ஒழுங்கு செய்ய முடியும்.

திரு. நவின் - 0766673326 (வவுனியா)
திரு. யோகேஸ்-0774238215 (யாழ்ப்பாணம்)

**SB Travels and Tours Pvt Ltd.**

சகல நாடுகளுக்குமான விமானப் பயணச் சீட்டுக்களையும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். இந்தியாவுக்கான Ticket களை 25,800/= இற்கும் அத்துடன் இந்தியாவிற்கான வீசா விண்ணப்பப்படிவம் இலவசமாக பூர்த்தி செய்து தரப்படும். அத்தோடு மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கான வீசாக்களும் மிகக்குறுகிய காலத்தில் செய்து தரப்படும். பிரயாணகாப்புறுதி, திகதி மாற்றமும் செய்து வழங்கப்படும்.

SB Travels and Tours Pvt Ltd.
021 222 9555, 021 222 8555,
076 691 1080, 81, 82, 83

IIS இன் 22 வருட கால கல்வி அனுபவத்துடன் இணைந்து எதிர்காலத்தை உங்களுடையதாக்குங்கள்

PEARSON BTEC
**HND**



CIVIL ENGINEERING
BUSINESS MANAGEMENT
COMPUTING & SYSTEMS DEVELOPMENT

புதிய பிரிவுகள் ஆரம்பம் : 15.04.2017

IISன் தனித்துவம்......
- மூன்றாம் நிலைக்கல்வி, தொழில்கல்வி ஆணைக்குழுவின் (TVEC) அனுமதி
- PEARSON பிரதிநிதிகளின் நேரடி கண்காணிப்பு
- உயர்கல்விக்கே உரித்தான வளாகம்
- தொழில்சார் பயிற்சியுடனான கற்கைநெறி
- இலகுதவணை முறையிலான கட்டண வசதி
- வேலைவாய்ப்புக்களை இலகுவாக பெறக்கூடிய சந்தர்ப்பங்கள்

IIS CITY CAMPUS
200, சிவன் பண்ணை வீதி
யாழ்ப்பாணம்
021 222 8060 , 021 4900 900
iis@iis.edu.lk , info@iis.edu.lk
Hotline: 071 777 5666
info@iis.edu.lk



**சிவன் ஜோதிடம்**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
**பண்டித் ஜெயதேவ் சுவாமிகள்**
076 585 9977 , 077 835 7307

துல்லியமாக கணித்து சொல்லப்படும் விடயங்கள்

மெய்யன்பர்களே !

இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர் இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கணவன் மனைவி சண்டை பிரிவு, காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள் பிள்ளைகள், பெற்றோர் சொல் கேளாமல் திரிவது, வேலை தொழில் உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். பணம் பெறாமையால் தொழில் பாதிப்பு பலன் சொல்வதோடு பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் பலன்களை சொல்வார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் கொழிக்க உதவும் லட்சுமி பூசை செய்து தருவார்.
தமிழ் மொழிகளில் ஜோதிடம் சொல்லப்படும்.

100% உத்தரவாதம்

இல.394, 1/1 மணிக்கூட்டு வீதி,
(பெருமாள் கோயில் வீதி, லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகில்)
யாழ்ப்பாணம்.
நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை


## இந்துப் பொதுமக்களுக்கு ஓர் அறிவித்தல்
## காரைநகர் சிவன்கோயில் அடியார்கள் சபை (லிமிட்டெட்)

01. மேற் குறிப்பிடப்பட்ட காரைநகர் சிவன்கோயில் அடியார்கள் சபையின் (வரைவுள்ளது) பொதுக்கூட்டம் ஒன்று 26.03.2017 ஆம் திகதி நடைபெறும் என ஓர் விளம்பரம் 05.03.2017 ஆம் திகதிய உதயன் பத்திரிகையின் 53 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப் பட்டுள்ளது.

02. குறிப்பிட்ட விளம்பரம் தங்களை ஆதீன கர்த்தா சபை என விபரிக்கும் திரு. ஆ.அம்பலவி முருகனாலும், திரு.மு.சுந்தரலிங்கத்தினாலும் பெயர் குறிப்பிடப்படாத செயலாளராலும் செய்யப்படுவதாக கூறப்பட்டுள்ளது.

03. a. குறிப்பிடப்பட்ட காரைநகர் சிவன்கோயில் அடியார்கள் சபை சபைகள் சட்டத்தின் கீழ் சபை இல.6396 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பனி போன்ற சபையாகும்
    b. குறித்த சபைக்கு ஒரு பதிவுசெய்யப்பட்ட யாப்பு உண்டு.
    c. குறித்த யாப்பின் கீழ் ஒவ்வொரு வருடமும் சட்ட முறையாக கூட்டப்பட்ட ஆண்டு பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட செயற்குழுவின் தீர்மானத்தின் மீது மாத்திரமே சபையின் எக் கூட்டத்தையும் கூட்டலாம்.
    d. 06.03.2011 இல் ஒரு கூட்டம் நடைபெற்றது.
    e. அவ்வாறு 06.03.2011 இல் தெரிவு செய்யப்பட்ட செயற்குழுவின் பதவிக்காலம் 31.03.2012 இல் முடிவுற்றது.
    f. 2012, 2013, 2014, 2015, 2016, 2017 ஆம் ஆண்டு பொதுக்கூட்டங்கள் நடைபெறவில்லை. வருடாந்தக் கணக்குகளும் சமர்ப்பிக்கப்படவில்லை.
    g. எனவே 01.04.2012 இன் பின் சட்ட முறையான சபையின் செயற்குழுவோ செயலாளரோ இல்லை.

04. a. எனவே 26.03.2017 இல் நடைபெறும் எனக் கூறப்பட்ட கூட்டத்தை நடத்துவதற்காக எந்தச் செயற்குழுவும் தீர்மானம் எடுக்கவில்லை.
    b. செயலாளரும் இல்லை.

05. a. காரைநகர் சிவன்கோயில் அடியார்கள் சபை ஒரு அங்கத்தவர்கள் சபை.
    b. அங்கத்தவர்கள் மாத்திரம் சபையின் கூட்டங்களில் பங்கு பற்றலாம். பொதுமக்கள் பங்குபற்ற முடியாது.
    c. குறித்த விளம்பரத்திற்கு பொது மக்கள் யாவரையும் அழைக்கப்பட்டுள்ளது.

06. a. அல்லாமலும் அங்கத்தவர்கள் எல்லோருக்கும் தனித்தனியே பதிவுத்தபாலில் கூட்டத்தைப் பற்றி 21 நாள்கள் அறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும்.
    b. அங்கத்தவர் எவருக்கும் எவ்வித அறிவித்தலும் கொடுக்கப்படவில்லை.

07. எனவே 26.03.2017 இல் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட காரைநகர் சிவன்கோயில் அடியார்கள் சபைக்கூட்டம் சட்டவிரோதமானது.

08. குறித்த கூட்டத்தை நடத்த இடம் அளிப்பவர்கள் மீதும், நடத்துபவர்கள் மீதும், பங்குபற்றுபவர்கள் மீதும் மற்றும் தீர்மானங்கள் எடுப்பவர்கள் மீதும் செயற்படுத்துபவர் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

S. மந்திரிப்பிள்ளைஸ்
கொழும்பு -05
077 771 4291

S. உருத்திரமூர்த்தி சட்டத்தரணி
காரைநகர் சிவன்கோயில்
அடியார்கள் சபை (லிமிடெட்)
ஸ்தாபகரும் அங்கத்தவரும்

# ஆசிரியையிடம் நகைகள் கொள்ளை; சந்தேகநபர் பிணையில் விடுவிப்பு

தென்மராட்சி, மார்ச் 25

தென்மராட்சி, கொடிகாமம் பகுதியில் கடந்த புதன்கிழமை நள்ளிரவு வேளையில் வீட்டுக்குள் புகுந்து அங்கிருந்த ஆசிரியை கத்தியால் வெட்டிக் காயப்படுத்தி பணம் மற்றும் தங்க நகைகளைக் கொள்ளையிட்ட தவசிகுளம் வாசியை சாவகச்சேரி நீதிவான் மன்று நேற்று பிணையில் விடுவித்தது.

கொடிகாமம் கச்சாய் சாலையில் தனித்திருந்த ஆசிரியையின் வீட்டுக்குள் கடந்த 22ஆம் திகதி நள்ளிரவு 1.30 மணியளவில் உட்புகுந்த கொள்ளையர், உறக்கத்திலிருந்து ஆசிரியை கத்தியால் வெட்டிக் காயப்படுத்திவிட்டு அவர் அணிந்திருந்த நகைகள் உட்பட எட்டுப் பவுண் தங்க நகைகளையும் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றனர்.

கொடிகாமம் பொலிஸார் அன்றைய தினம் மேற்கொண்ட விசாரணையில் மோப்ப நாயின் உதவியுடன் ஆசிரியையிடம் கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்த 54 வயது நபர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபரை சாவகச்சேரி நீதிவான் மன்றில் பொலிஸார் நேற்றுமுன்தினம் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேகநபரை எதிர்வரும் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த நிலையில் சந்தேகநபர் சார்பில் அவரது சட்டத்தரணி நேற்று நகர்த்தல் பத்திரம் அணைத்து மன்றில் பிணை விண்ணப்பம் செய்தார்.

பிணை விண்ணப்பத்தை விசாரித்த சாவகச்சேரி நீதிவான், சந்தேகநபரை தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள்பிணையில் செல்ல அனுமதித்தார். (வ-9)

## 31 ஆம் நினைவுநாள் அழைப்பு

கடந்த 26.02.2017 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த எங்கள் அன்புத் தாயார்



**அமரர்**
**நாகம்மா குமாரவேலு**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (26.03.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும். வீட்டுக்கிருத்திய கிரியைகள் 28.03.2017 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத் தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். தயவுசெய்து இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இல. 1/1,
திருவையாறு,
கிளிநொச்சி.

குடும்பத்தினர்.
கு.பகீரதன் (நேசன்)
KPKகட்டட ஒப்பந்ததாரர்,
கிளிநொச்சி.

## 2 ஆம் ஆண்டு நினைவேந்தல்



அமரர்
**சிவக்கொழுந்து செல்வமாணிக்கம்**
(கொம்மாந்துறை வல்வெட்டித்துறை)

பிறப்பு
01.03.1932

இறப்பு
18 .03.2015

"மனிதரில் மாணிக்கமாம் செல்வமாணிக்கம்
அறம் செய்ய விரும்பு என்பதற்கு
இலக்கணமாய் அமைந்தவரே
உள்ளத்தால் உயர்ந்தீர் - எம்
உள்ளமதில் உறைந்தீர்"

(AJA0087) (13.17)

மந்துவில் வடக்கு,
கொடிகாமம்.

உறவினர்கள்.

# விபத்தில் காயமடைந்த மூதாட்டி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 25

சாலையால் சென்ற இளைஞனின் மோட்டார் சைக்கிள் மோதி சுயநினைவு அற்ற நிலையில் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மூதாட்டி நேற்றுமுன்தினம் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

நல்லூர் கோவில் சாலையைச் சேர்ந்த தம்பித்துரை செல்வலக்சுமி (வயது-84) என்ற மூதாட்டியே உயிரிழந்தார்.

நல்லூர். கோவில் சாலையிலுள்ள கடைக்குச் சென்ற மூதாட்டி, வீடு திரும்பும் பொழுது கைலாசபதி ஆலய சாலையின் ஊடாக வேகமாக வந்த இளைஞனின் மோட்டார் சைக்கிள் மோதி சுயநினைவு இன்றி கீழேவிழுந்தார். அவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை வழங்கப்பட்ட மூதாட்டி நேற்று முன்தினம் மாலை சிகிக்சை பயனின்றி உயிரிழந்தார்.

இறப்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி பிரேமகுமார் மேற்கொண்டார். (வ-21)

## நீங்கா நினைவுகளில்

### ஒன்பதாம் ஆண்டு



அன்னை மடியில்
30.08.1930

ஆண்டவன் அடியில்
25.03.2008

**அமரர் முருகேசு துரைராஜா**

திதி: சதுர்த்தி

அன்பின் பிறப்பிடமாக பாசத்தின்
உறைவிடமாக குடும்பத்தின்
ஒளி விளக்காய் திகழ்ந்த
எங்களின் அன்புத் தெய்வமே
ஆண்டுகள் பல சென்றாலும் உங்கள்
நினைவுகள் எங்கள் மனதில்
நிலையாக வாழ்கின்றன.

### இருபத்தாறாம் ஆண்டு



சிவனாய்
01.01.1939

சிவமாய்
12.04.1991

**திருமதி கோணேஸ்வரி துரைராஜா**

திதி: திரயோதசி

ஆண்டுகள் இருபத்தாறு ஆனாலும் ஆறவில்லை
உங்கள் நினைவு
நீங்கள் இல்லாமல் எங்கள் வாழ்வு
நீர்க்குமிழி ஆனதம்மா
நாள் தோறும் சோகம் எனும் கடல் தனில்
மூழ்கின்றோம்
நித்தம் நித்தம் கண்ணீர்
மல்கி நிற்கின்றோம் அம்மா! அம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கண்ணீருடன்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
95,சிவன்பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

# சிவலிங்கம் நிறுவுதலும் தமிழ் நூல்கள் வெளியீடும்

யாழ்ப்பாணம், மார்ச் 25

தமிழ் உலகு நன்கறிந்த வித்துவ சிரோன்மணி சி.கணேசையரின் தமிழ்த்தொண்டைப் பாராட்டும் வகையில் திருவூர் வறுத்தலைவிளானில் உள்ள அவரது நினைவாலயத்தில் காசி பாணசிவலிங்கம் ஒன்று அவரது உறவினர்களால் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணிக்குறிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து கணேசையரின் தமிழ் நூல்களின் வெளியீடும் இடம்பெறும். இந்த நிகழ்வில் தமிழ் ஆர்வலர்கள், கணேசையரின் மாணவர்கள் உள்ளிட்ட அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (வ)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **வேலன் தெய்வேந்திரம்**
(பட்டு)

மண்ணில்
09.05.1959

விண்ணில்
08.04.2013

இல்லக வாழ்விற்கு இலக்கணமாய் மிளிர்ந்தீரே !
இப்பாரிடை நீக்கி ஆண்டுகள் நான்காச்சோ....? ஐயகோ
சொல்லொணாத்துயரோடு - உம் சுவடுகள் தேடுகின்றோம்....?
ஒருமுறை வாறீரோ.....

மடத்துக்கடவை,
அல்வாய்மேற்கு, அல்வாய்.
077 926 5941

மனைவி - தெ.வரதராணி
பெறாமகன் - S.J.சத்தியராஜன்

## Church of the American Ceylon Mission

Cordially solicit your presence & prayers at the Celebration of Thanksgiving for The Lite & Services of

**Dr.Chandra Ambalavanar**
(Bishop Amma)



To be held on Saturday the 25th March 2017 at 4.30 PM in the CACM Church, Uduvil.

**Rev.Antony Suthagar Secretary, CACM.**

# பன்னங்கண்டியில் தொடரும் போராட்டம்

கிளிநொச்சி, மார்ச்25
கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரி வுக்குட்பட்ட பன்னங்கண்டி கிரா மத்தில் சரஸ்வதி, ஜொனி குடியிருப்புகளில் வாழ்ந்துவரும் மக்கள் தாம் குடியிருக்கும் மத்திய வகுப்புக் காணிகளுக்கு அனுமதிப்பத்திரம் கோரி முன்னெடுத்து வரும் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் இடம் பெற்றது.



சிவா பசுபதி கிராம மக்களின் போராட்டத்துக்குச் சுமுகமான தீர்வு எட்டப்பட்டுள்ள நிலையில், மேற்படி இரு கிராமங்களின் மக்களும் தாம் குடியிருக்கும் காணிகள் தொடர்பான சர்ச்சையைத் தீர்த்து வைக்குமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தென்னிலங்கையில் ஏற்பட்ட கலவரங்களால் அங்கிருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களுக்கு 1990 ஆம் ஆண்டு மத்திய வகுப்பு திட்டத்தின் கீழ் இந்தக் காணிகள் வழங்கப்பட்டன. இவற்றில் சுமார் 116 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்ததாவது:

"மத்திய வகுப்புத் திட்டத்தின் கீழ் எமக்கு வழங்கப்பட்ட இந்தக் காணிகளில் சுமார் 25 வருடங்களுக்கு மேல் நீண்டகாலமாக வசித்து வரும் எமக்கு, காணி அனுமதிப்பத்திரம் இன்மையால் வீட்டுத்திட்டம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

எமக்குத் தீர்வைப் பெற்ற தருவதற்கு காணி உரிமையாளர் முன்வரவேண்டும். அரசியல்வாதிகளை நம்பி நாம் ஏமாந்து போனோம்.

தேர்தல் காலங்களில் தீர்வு பெற்றுத் தரலாம் என்று அவர்கள் வாக்குறுதிகள் வழங்கிய போதிலும், தேர்தலின் பின்னர் அவர்கள் எதையும் செயற்படுத்தவில்லை. எங்களுக்குக் கோழிக் குஞ்சுகளையே வழங்கினார்கள்.

எனவே எமது பிரச்சினைக்குக் காணி உரிமையாளர்கள் செவிசாய்த்து, தீர்வு ஒன்றை வழங்க வேண்டும் - என்றனர். (ஐ-ய-06)

## தவக்கால பாத யாத்திரை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச் 25
குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்கால் சாட்டி புனித சிந்தாத்திரை மாதா ஆலயத்தை நோக்கி வருடா வருடம் முன்னெடுக்கப்படும் தவக்காலப் பாத யாத்திரை இன்று சனிக்கிழமை காலை ஆரம்பாகும் என்று குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தால் பங்கு மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தில் இன்று காலை நடைபெறும் திருப்பலி நிறைவு பெற்றதும் ஆலய முன்றிலில் இருந்து யாழ்ப்பாணம் முதன்மைச் சாலையூடாக, பண்ணை சாலையூடாக இந்தப் பாத யாத்திரை நடைபெறும். பாத யாத்திரையில் கலந்து கொள்பவர்கள் சாட்டிக் கோவிலில் நடைபெறும் தவக்காலச் சிலுவைப் பாதையில் கலந்து கொண்டு தமது பாத யாத்திரையை நிறைவு செய்வர் என்று தெரிவிக்கப்பட்டது.
(வ-51)


## மரண அறிவித்தல்

### சூசைப்பிள்ளை பிறிஜிற்றம்மா



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிறிஜிற்றம்மா 23.03.2017 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - மரியம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான செபமாலை - பிறிஜிற்றம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செபமாலை சூசைப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சவிரிமுத்து செபமாலையின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து, ஜேற்றூட் ஆகியோரின் மைத்துனியும், அன்ரனிதாஸ் (Textile), ஜோசப் ஞானரத்தினம் (Textile), மேரிகெலன் (ஆசிரியை - யா/ மயிலணி சைவ மகா வித்தியாலயம்), ஞானபுஸ்பம், இருதயநாதன் (ஆசிரியர் - யா/ இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியலாயம்), டேவிட் பேடினன் (Textile), காலஞ்சென்ற யஸ்தஸ் சின்னப்பு ஆகியோரின் பாசமிகு தாயும், மாக்கிரட்றாணி, மாசில் மனோகரி, கியோமர் மரியதாஸ் (ஓய்வுநிலை பாதுகாப்பு உத்தியோகஸ்தர் - யா/ பல்கலைக்கழகம்), பரமநாயகம் (Textile), மிரியம் கொன்செப்ரா (ஆசிரியர் - யா/ கோட்டைக்காடு அ.த.க. பாடசாலை), சகாயநாயகி, மரீனா ஆகியோரின் அன்பு மாமியும், ஜோநிறோஜன் (ஆசிரியர் - யா/அராலி இந்துக் கல்லூரி), நிஷாலினி, ஜோகலஸ்ரின் - யஸ்ரின் பெனாட் (ஆசிரியர் - யா/ இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்), ஜோபசில்டா - றெஜினோல்ட் (ஆஸ்திரோலியா), ஜோகிறேசியன் - ஆன் பெளலீனா, அனோஜ் டிலக்சன் - அமெண்டா (அபிவிருத்தி உத்தியோகஸ்தர்), அனோஜ் பிறிஜிற் - அன்ரன் பிரபுறாஜ் (ஜேர்மனி), அனோஜ் லெனோஜினி - ஜேசப் கமில்ரன் (ஜேர்மனி), அனோஜ்கிறுசாந், அனோஜ் றொசிற்றா, லீனஸ் சகாயதாஸ், லூட்ஸ் லிபிந்தா - அன்ரனி கியூபேட், லைனஸ் சூசைதாஸ், அன்று அனோஜ், அனிஸ் புளோரிடா, ருலக்ஸ்ரியா - யூட்திலீபன், றோய் மேவின், றோய் அன்ரனி, பவுஸ்ரீனா, லியோ பயஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அபிக்கேல், கலிஸ், கெலன்றொக், டக்றியஸ், ஷெப்றின், ஷெபோறா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி இன்று (25.03.2017) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித அந்தோனியார் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புனித அந்தோனியார் வீதி,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 238 0180/ 077 563 2146


தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம்

## நிரந்தர மருத்துவரை நியமிக்கவேண்டும்

### யாழ்ப்பாணத்தில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 25
யாழ்ப்பாணம் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்துக்கு நிரந்தர மருத்துவரை நியமிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

"சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் வாகன உரிமம் பெறுவதற்கான மருத்துவ சான்றிதழ் பெறுவதற்குச் செல்லும் போது மருத்துவ நிறுவகத்தில் பல மணித்தியாலயங்கள் காத்திருக்க வேண்டியுள்ளது.

யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் சாலையில் அமைந்துள்ள தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தில் நிரந்தரமாக மருத்துவர் நியமிக்கப்படவில்லை. வேறு வைத்தியசாலையில் பணியாற்றும் மருத்துவர் நியமிக்கப்பட்டுள்ளதனால், அவர் மதிய உணவு வேளையில் மாத்திரமே தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்துக்கு வருகை தருகிறார்.

இதனால் மருத்துவ அறிக்கை எடுப்பதற்கு மணித்தியாலக் கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டது.

சுமார் 10 அல்லது 15 நிமிடங்களில் பெறப்படும் மருத்துவ சான்றிதழ்களுக்காக காலை 8 மணிமுதல் மதியம் வரை காத்திருக்க வேண்டியுள்ளது. இவ்வாறு நேரத்தைச் செலவு செய்வதனால், மருத்துவச் சான்றிதழ் பெறுவதற்குச் செல்வோர் பல சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவித்தனர். (வ-106)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 25
கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் பழைய மாணவர் சங்கத் தலைவர் ந. கருணாகரன் தலைமையில் பாடசாலை அரங்கத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்துக்கு பழைய மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (வ-288)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கமலாவதி செல்லத்துரை

மலர்வு 16.07.1934
உதிர்வு 05.04.2016

திதி: பங்குனி மாத அமாவாசை திரயோதசி (25.03.2017)

05.04.2016 இல் சிவபதமடைந்த உங்கள் ஆத்மாவை
எம் நெஞ்சமதில் வணங்கி
உங்கள் ஆத்மா இறைவன் திருப்பாதங்களில் நிலைத்திருக்க
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்

பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளோடு
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



மலர்வு 12 . 06 . 1948
உதிர்வு 22 . 03 . 2017

### திருமதி வனஜா நாகராசா

சங்கடந்தனை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி வனஜா நாகராசா 22.03.2017 புதன்கிழமை சிவதபமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகராயர் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத் துரை - பார்வதியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், நாகராசா அவர்களின் ஆசை மனைவியும், சங்கீரணி அவர்களின் பாசமிகு தாயும், சங்கரப்பிள்ளை, பத்மஜா, பங்கஜா மற்றும் கதிர்காமசேகரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நகுலேஸ்வரி, இந்திரகேஸ்வரன் மற்றும் நாகேந்திரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.03.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக தெல்லிப்பழை கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு பூதவுடல் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கடந்தனை
கே.கே.எஸ். பிரதான வீதி,
தெல்லிப்பழை.

தகவல்:
கணவர்:
(செ.நாகராசா)

## மரண அறிவித்தல்

### கலாநிதி அருள் கணேசலிங்கம்

(முன்னாள் சட்டபீட விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக்கழகம்,
Solicitor. London. UK. யாழ் இந்துக் கல்லூரி 1982 A/L Batch)



யாழ் மீசாலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, லண்டன், கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட அருள் கணேசலிங்கம் 21.03.2017 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் மீசாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கணேசலிங்கம் (இளைப்பாறிய கொத்தணி அதிபர்), புஸ்பலதிகவதி(இளைப்பாறிய பிரதிக்கல்வி பணிப்பாளர், தென்மராட்சி) தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் மீசாலையை சேர்ந்த காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும் சுகுணாவின் அன்புக் கணவரும் அர்சுன்(University of Waterloo) அஸ்மிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் வளர்மதி(கனடா), கலாநிதி சிவமதி (சிரேஸ்ட விரிவுரையாளர், விவசாயபீடம், யாழ் பல்கலைக்கழகம்), வைத்திய கலாநிதி அருள்மொழி(வைத்திய நிபுணர் யாழ் போதனா வைத்தியசாலை) கலாநிதி அருள்ராஜ் (Scientist,UK) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுவர்ணா (இலங்கை), கிருஷ்யந்தன்(பிரித்தானியா), விவேகானந்தன் (கனடா), சிவநேசன்(Research officer Paranthan), சுகல்யா (இலங்கை), சுகிர்தா(கனடா), சிவசந்திரன் (உதவித்திட்ட பணிப்பாளர், மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்), ஜானகி (வைத்திய நிபுணர் யாழ்போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.03.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணிக்கு Chapel Ridge Funeral Home & Cremation Center, 8911 Woodbine Ave, Markham, ON L 3R 5G1, Canada இல் இடம் பெற்று தகனக்கிரியைக்காக பி.ப 1.30 மணிக்கு Highland Hills Crematorium,12492 Woodbine Ave, Gormley, ON LOH 1GO,Canada இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குமாரசாமி வீதி,
கந்தர்மடம்.

தகவல்: அருள்மொழி
(சகோதரன்)

வளர்மதி - கனடா +16475692328

## மு. நவரத்தினசாமியின் நினைவு தினம் இன்று


யாழ்ப்பாணம், மார்ச் 25
பாக்குநீரிணையை முதலில் நீந்திக் கடந்த அமரர் முருகுப்பிள்ளை நவரத்தினசாமியின் 63ஆவது ஆண்டு நினைவு தினம் தொண்டமானாறில் அமைக்கப்பட்டுள்ள அவரது உருவச் சிலையடியில் இன்று மாலை 5 மணிக்கு நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர்.
அமரர் முருகுப்பிள்ளை நவரத்தினசாமி 1954ஆம் ஆண்டு பாக்குநீரிணையை நீந்திக் கடந்து சாதனை புரிந்தமையையிட்டு அவரது நினைவாக பாக்குநீரிணையை கடக்கப் புறப்பட்ட இடத்தில் சிலை அமைக்கப்பட்டுள்ளது. (வ - 9)

## பொருளாதார பங்களிப்பு திட்டம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 25
யாழ்ப்பாண மாவட்டத்தில் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலக நிதி ஒதுக்கீட்டின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் பொருளாதார பங்களிப்பு நிகழ்ச்சித் திட்ட ஆரம்ப விழா தெல்லிப்பழை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இன்று மு.ப.10.30 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
முன்னாள் அரச தலைவரும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலக தலைவியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே ஆகியோரின் ஏற்பாட்டில் நடத்தப்படும் ஆரம்ப விழாவில் தலைமை விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# யாழ்ப்பாணம் பொது நூலக வளாகத்தில் கழிவுநீர் தேக்கம்

### அகற்றுமாறு மாநகர சபையிடம் கோரிக்கை



யாழ்ப்பாணம், மார்ச் 25
யாழ்ப்பாணம் பொது நூலக வளாகத்துக்குள் அமைந்துள்ள உணவகத்தின் அருகில் தேங்கியுள்ள கழிவு நீரை அகற்றி, நுளம்பு பெருக்கத்துக்கு ஏதுவாக உள்ள பகுதியை சீராக்க யாழ்ப்பாணம் மாநகர சபையினர் முன்வரவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் பொது நூலக வளாகத்துக்குள் உணவகத்தின் அருகே கழிவு நீர் வெளியேறும் பகுதியில் நீர் தேங்கி நின்று நுளம்புப் பெருக்கம் காணப்படுகின்றது. எனினும் அதற்குரிய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு தினமும் பல நூற்றுக் கணக்கானோர் ஒன்று கூடும் இடம் என்பதால் இது தொடர்பில் அனைவரும் சிறப்புக் கவனமெடுத்து அந்தப் பகுதியை சீர் செய்ய முன்வரவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (வ-101)

## சீனத் தூதரக பாதுகாப்பு அதிகாரி கடற்படைத் தளபதியுடன் சந்திப்பு

கொழும்பு, மார்ச் 25
புதிதாகநியமனம்பெற்றசீனத்தூதரகத்தின் பாதுகாப்பு அலுவலர் ஜியாங் வெய், இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.
இலங்கைக்கான சீனத் தூதரகத்தால் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அலுவலர், இலங்கைக் கடற்படைத் தளபதியை மரியாதை நிமித்தம் சந்தித்தார்.
இந்தச் சந்திப்பு இலங்கை கடற்படைத் தலைமையகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.
இரு தரப்பினருக்குமிடையிலான சந்திப்பில் இரு தரப்பு பரஸ்பர நிலைப்பாடுகள் நோக்கங்கள், சிந்தனைகள் போன்றன பகிரப்பட்டதுடன் நினைவுச்சின்னங்களையும் பரஸ்பரம் பரிமாறிக்கொண்டமை குறிப்பிடத் தக்கது. (ஐ-4)

## காசநோய் வினாடி வினாவில் வெற்றிபெற்றோருக்கு பரிசில்

யாழ்ப்பாணம், மார்ச் 25
மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்தால் நடத்தப்பட்ட காசநோய் வினாடி வினாப் போட்டியில் பாடசாலை மட்டத்தில் வேம்படி உயர்தரப் பாடசாலை மாணவி நா.கஜனி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவி இ.அபிரா, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவன் நா.துவாரகன், வேம்படி உயர்தர பாடசாலை மாணவி க.ஜனனி ஆகியோர் வெற்றி பெற்றனர். அவர்களுக்கு தலா 2, 500 ரூபா பணப்பரிசில்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.
திறந்த மட்ட வினாடிவினாப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட செல்வி தி. சிறிரஜீவினிக்கு 5,000 ரூபாவும் இரண்டாம் இடம் பெற்றுக் கொண்ட செல்வி க.யாழினிக்கு 3,000 ரூபாவும் மூன்றாம் இடம் பெற்றுக் கொண்ட செல்வி சு.நிலானிக்கு 2,000 ரூபாவும் பணப் பரிசாக வழங்கப்பட்டது என்று மார்பு நோய்ச் சிகிச்சை நிலைய மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி மருத்துவர் ஆர்.மணிவாசகன் தெரிவித்தார். (வ)

## ஆண்டு விழாவும் கால்கோல் விழாவும்

யாழ்ப்பாணம், மார்ச் 25
கொக்குவில் பொற்பதி அறிவாலயத்தின் 5ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வும், சரஸ்வதி முன்பள்ளியின் 32ஆவது கால்கோல் விழாவும் நாளை ஞாயிற்று கிழமை மாலை 2. 30 மணிக்கு இடம்பெறும் என்று நிர்வாகத்தினர் அறிவித்தனர்.
அறிவாலயத்தின் தலைவர் சண். வாமதேவன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனும், சிறப்பு விருந்தினர்களாக சங்கானை பிரதேச செயலாளர் சோதிநாதன், பொறியியலாளர் லிங்கேசன், யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவர் திருமதி சசிகலா, கிருபா லேணர்ஸ் உரிமையாளர் அ.கிருபாகரன் ஆகியோர் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-21)

யாழ் - காரை சிவதர்மவள்ளல் சிவத்திரு சண்முகம் சிவஞானம் அவர்களின்

Congratulations **மணிவிழா வாழ்த்து** Congratulations




25.03.2017 இல் அகவை அறுபது காணும் பாரி வள்ளல் தம்பதிகளே! பெற்ற தாய் - தந்தையரின் மான சீகமான ஆசிகளுடன் அறப்பணிகள் நன்கொடைகள்,சற்சங்க கள நிகழ்வுகளை சமூகம் நோக்கிய பார்வையுடன் நடத்தி வரும் சிவதரும வள்ளலே! தங்கள் அருங்கொடைக்கு உந்து சத்தியாக விளங்கும் தங்களின் அன்பு மனையாளுடனும் மக்களுடனும் தங்கள் சமூகசேவையை அன்புத் தாய் தந்தையர் நினைவாக சண்முகம் - மனோன்மணி அறக்கட்டளையூடாகச் செய்து வரும் சமயப் பணிகளை யும் பெரும் மனதுடன் வாழ்த்துகின்றோம். "கோ" தானம் செய்து குலம் காக்கும் தங்கள் பொன்மனதை வாழ்த்தி தங்கள் அறப்பணிகளும், சமூகப் பணிகளும் சிறக்கவும் நூற்றாண்டு கண்டு நோய் நொடியின்றி வாழ காரை ஈழத்துச் சிதம்பர நடராசரையும் சௌந்தராம்பிகையையும் சமேதராக வணங்கி வாழ்த்துகின்றோம்.

**இவர் பெற்ற விருதுகள்:**
சிவதர்மவள்ளல், கலைமாடக் கோனார், அறப்பணிச் செம்மல், சிவநெறிக் காவலர், காரை பாரி வள்ளல், அறப்பணி வேந்தன், சமூகசேவகமாமணி, சமூக சேவக சிரஞ்சீவி, சிவப்பணி வித்தகர்.

**வாழ்த்துவோர்:**
அமைப்பாளர் - சைவமணி
திரு.திருமதி செல்வ சண்முகரத்தினம் கிரிஜா (சோதிடமணி)
**தலைவர்:**
**கலாபூஷணம் மார்க்கண்டு சிவஞானம்**
அறநெறிப் பாடாலை ஆசிரியர்கள், மாணவர்கள்,
**திரு.கு.சரவணபவானந்தன்**
(முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி வேலணை கோட்டம்)
**யாழ். இந்து அறப்பணி மன்றம் யாழ்ப்பாணம்.**

**செயலாளர்**
சமூகசேவகமணி
**சிவானந்தம் உமாசிவம்**

**அறப்பணி சேவகர்**
**திரு. ஆ. நந்தகுமார்**

## ஐ.நா.வின் பரிந்துரைகளை நிறைவேற்ற

# இனிமேலாவது காலத்தை இழுத்தடிக்க வேண்டாம்

## வியாழேந்திரன் எம்.பி. தெரிவிப்பு

செங்கலடி, மார்ச் 25

போர்க்குற்ற விசாரணை மற்றும் போருக்குப் பின்னரான நல்லிணக்கம் தொடர்பாக ஐ.நா. மனித உரிமை சபையின் பரிந்துரைகள் தொடர்பில், இனி மேலும் காலத்தை வீணடிக்காமல் அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

செங்கலடி விவேகானந்தா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

ஐ.நா. மனித உரிமைப் பேர வையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைச் செயற்படுத்துவதற்கு இலங்கை அரசுக்கு 2015 ஆம் ஆண்டு 18மாதங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் அரசு எந்த விடயத்தையும் முழுமையாக நிறைவேற்றவில்லை.

இலங்கை அரசு போர்க்குற்ற விசாரணை மற்றும் பொறுப்புக்கூறல் விடயத்தில் இன்னும் கால இழுத்தடிப்புச் செய்யாமல் உடனடியாக செயற்பட வேண்டும் மற்றும் கலப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டு போர்க்குற்ற விசாரணகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும்போன்ற கருமங்களைச் செயற்படுத்த அரசுக்கு தற்போது மீண்டும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களிடையே அமை தியின்மை நிலவி வருகிறது. இதில் அரசு அதிக கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் செயிட் அல் ஹூஸைன் எச்சரித்துள்ளமை வரவேற்கத்தக்கது.

மட்டக்களப்பு நகரில் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனினால் 90 மில்லியன் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பொதுநூலக கட்டடம்



முழுமை பெறாமல் கைவிடப்பட்ட நிலையிலுள்ளது. இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். -என்றார். (ஐ-ய-47)

## மட்டக்களப்பில் இன்று ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, மார்ச் 25

மட்டக்களப்பு கல்குடா பகுதியில் மதுபான உற்பத்தித் தொழிற்சாலை ஊழியர்களால் இரு ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமையைக் கண்டித்து, மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு முன்பாக இன்று ஆர்ப்பாட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா.கிருஷ்ணகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"ஊடகவியலாளர்கள் தமது செயற்பாடுகளைச் சுதந்திரமாகசெயற்படுத்தும்நிலைமை உருவாக்கப்பட வேண்டும், தாக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் விசாரணைகளைத் துரிதப்படுத்தி குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும், உள்ளீட்ட மூன்று கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது." என்றுள்ளது. (ஐ-ய-46)

## நாட்டில் சகல பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்படும்

நாட்டில் உள்ள சகல பாடசாலைகளிலும் ஆளணி மற்றும் பௌதிகவளங்களை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது "நாடு முழுவதும் உள்ள பத்தாயிரத்து 161 பாடசாலைகளில் ஏழாயிரம் கல்விக்கூடங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களில் 50 சதவீத மானவர்கள் சித்தி பெறத் தவறுகிறார்கள். இதற்குத் தீர்வாகத் தொழிற்சந்தையை இலக்காக வைத்து 26 புதிய பாடங்கள் அறிமுகம் செய்யப்படும்." என்றார். (ஐ-4)

## பள்ளிவாசல் காணியை அபகரிக்க படையினர் முயற்சி

### அமைச்சர் ஹக்கீம் கண்டனம்



மட்டக்களப்பு, மார்ச் 25

திருகோணமலை கருமலையூற்று எனும் இடத்தில் அமைந்துள்ள முஸ்லிம்களின் பாரம்பரிய வணக்கஸ்தலத்தை படையினர் அபகரிக்கும் நடவடிக்கை உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் .

இவ்வாறு நகர அபிவிருத்தி மற்றும் நீர் விநியோக அமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நன்கொடை உறுதிகளை கைமீட்டல், குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல், குற்றவியல் சட்டக்கோவை தொடர்பிலான விவாதத்தில் பிரஸ்தாபித்த தாகவும் அவர் தெரிவித்தார்.

படையினரால் கையப்படுத்தப்பட்டுள்ள திருகோணமலை கருமலையூற்று பள்ளிவாசல் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, இந்தப் பள்ளிவாசல் முற்றாக உடைக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ள நிலையில், அது அமைந்துள்ள இடத்தைப் படையினர் சுவீகரிப்பதை தடுத்து நிறுத்த வேண்டும்.

கரிமலையூற்றுப் பள்ளிவாசல் 2015 ஆம் ஆண்டு முற்றாக இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. இந்த விவகாரம் அப்பொழுது பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், அதனை மீளக் கட்டித் தருவதாக படைத்தரப்பினால் தெரிவிக்கப்பட்டது.


இது இவ்வாறிருக்க, கடந்த சில நாள்களுக்கு முன்னர், பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி யிடப்பட்டு, திருகோணமலை பட்டினமும் , சூழலும் பிரதேச செயலாளரால் வர்த்தமானி அறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

அதில், படையினருக்கு முகாம் அமைப்பதற்காக களப்பின் பேக் குடா பிரதேசத்தில் உள்ள 4.65ஹெக்ரேயர் நிலப்பரப்பைச் சுவீகரிக்கநடவடிக்கைஎடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

கரிமலையூற்று, நாச்சிக்குடா பிரிவில் உள்ள குறித்த இடம் யாருக்குச் சொந்தமானது என்பது தொடர்பான எந்த விவரங்களும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் இல்லை. முஸ்லிம்களின் பாரம்பரியமான பள்ளிவாசல் இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ள நிலையில்,

இவ்வாறு படையினருக்கு நிலச் சுவீகரிப்பு செய்வது என்பது நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டையாக அமையும். இதனை மிகமோசமான நடவடிக்கையாகவே நாங்கள் காண்கின்றோம். எனவே, இதற்கு நாங்கள் கடும் கண்டனம் தெரிவிப்பதுடன்,மக்களதுகாணிகளை மக்களுக்கு வழங்குவது சிறப்பான செயற்பாடாக இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என்றார். (ஐ-ய-46)

மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



திரு.சண்முகம் சிவஞானம் (பிரபலதொழில் அதிபர்)

ஆசிச் செய்தி

இன்று 60 ஆவது அகவையில் காலடி வைக்கும் "கலைமாடக் கோன்" காரைபாரிவள்ளல் கல்விக் கொடையரசு திருவாளர் சண்முகம் சிவஞானம் அவர்கள் உண்டோம் உறங்கினோம் என்றில்லாது வள்ளுவனின் வாக்குக்கு அமையவும் "தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற முது மொழிக்கு அமையவும் தாம் தேடிய செல்வத்தின் ஒரு பகுதியை சமயப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி,கலைப்பணி என பலதுறைகளில் உவந்தளித்துள்ளார். இந்த நற்காரியங்களில் தம்மை ஈடுபடுத்தி மண்ணில் பிறந்த ஒரு மனிதன் எவ்வாறு வாழ வேண்டும். என்பதற்கு உதாரண புருஷராக திகழ்கின்றார். அவரது இப்பணிகள் தொடரவும் அவரும் அவரது குடும்பத்தினரும் "நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம் " என்பதற்கேற்ப அவர்கள் நோய் நொடியின்றி சீரும் சிறப்பும் பெற்று சௌபாக்கியமாக வாழ எல்லாம் வல்ல அகில புவனமாதாவாகிய மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்பாளை பிரார்த்தனை செய்து எமது நல்லாசிகளை கூறி அமைகின்றேன் .

"லோக சமஸ்த்தா சுகினோ பவத்து"

பிரம்மஸ்ரீ கு. சரவணபவானந்த சர்மா
(பரம்பரை ஆதீன குரு நம்பிக்கைப் பொறுப்பாளர்.
மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம் வலந்தலை
காரைநகர்)

ஆசியுரை

திருவாளர் சண்முகம் சிவஞானம் (கல்விக்கொடையரசு கலைமாடக்கோன்) அவர்களின் 60 ஆவது அகவையினையொட்டி இன்றைய தினம் பிறந்தநாள் வாழ்த்தினை தெரிவித்து கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். காரை மண்ணில் பல நற்கருமங்களை செய்யும் பணியில் தன்னை ஈடுபத்திக் கொண்டு எமது மண்ணில் கல்வி, சமய, சமூகம் சார்ந்த பணிகளுக்கு தன்னால் வழங்கக் கூடிய கொடைகளை வழங்கு வதில் ஒரு நாளும் பின் நிற்பவரில்லை அவ்வாறான கொடை வள்ளலான சிவஞானம் அவர்கள் மேலும் பல சௌபாக்கியங்களை பெற்று அவரது குடும்பம் சீரும் சிறப்புடன் வாழ வேண்டும் என்றும் எல்லாம் வல்ல அவரின் குல தெய் வமாகிய காரைநகர் மடத்துக்கரை முத்துமாரியம்பாளின் பாத விந்தங்களை பணிந்து சகல சௌபாக்கியமும் கிடைக்க வேண் டும் என்று அம்பிகையின் ஆசியினை வேண்டி பிரார்த்தித்துக் கொள்வதோடு பிறந்த நாள் வாழ்த்தினை தெரிவித்துக் கொள் கின்றேன்.

பிரதமகுரு பிரம்மஸ்ரீ கு.சண்முகராஜக் குருக்கள்
காரைநகர் பயீரிக்கூடல் சிவசுப்பிரமணிய
கோயில்

கற்றவர் விளங்கும் காரையம் பதி
முற்பவம் அகற்றும் முன்னோர் உறைபதி
நற்றவர்கள் நாளும் நலனுண்டாக்கும் நற்பதி
சொற்பதங்களை செயல்படுத்தும் சுந்தரர்கள் தோன்றியபதி

நித்திலங் கொழிக்கும் நிமலன் நின்றிடும் ஊரில்
சித்திகள் தருவோன் சண்முகம் சிவஞானம் பிறப்பில்
எத்தனை எத்தனை செயல்கள் ஏணிகளாகவே
வித்தகா உன்முன் விரைவன நற்பணிகளே வாழ்க வாழியவே

சைவமும் தமிழும் கல்வியோடு கலையும் ஓங்கியுயர வைபவங்கள் அமைத்து வாரி வழங்கி காரைநகர் வளம் பெற சிவஞானம் பெற்ற சண்முகம் மனோன் மணியின் தவப்புதல்வன் தவமும் பணியும் ஒன்றென ஓதி அறுபதைக் கடந்த செல்வனை நாளும் பொழுதும் நம்கடனே தன் கடனாய் போற்றி போற்றி தோளும் கையும் தொடரும் கர்ணன் கொடையுமாகி சூழும் தடைகளைக் தொலைத்தகற்றி தொல்லைகளை இல்லையாக

வாழும் மகான் மனமிருக்கும் ஞான பல்லாண்டு வாழ்க வாழ்கவே
பெறாமகன்
எஸ். சுகந்தன் (ஆசிரியர்)

வாழ்த்துவோர்: பெறாமக்கள்

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்த அரசு சிறப்பு நடவடிக்கை

## தலைமை அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 25
நாடளாவிய ரீதியாக தற்போது வேகமாகப் பரவிவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் சிறப்பு நடவடிக்கைகள் தொடர்பில் அரசு கவனம் செலுத்தியுள்ளது. இவ்வாறு தலைமைஅமைச்சர்ரணில்விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் காலை பிரதிசபாநாயகர் திலங்க சுமதிபால தலைமையில் கூடியது. இதன்போது 23 இன் கீழ் 2 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் ஒன்றிணைந்த கூட்டு எதிரணியின்தலைவர் தினேஷ்குண வர்த்தனவால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

டெங்கு நோயின் தாக்கம் இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் அதிகரித்துள்ளன. நாடளாவிய ரீதியாக 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகிச் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இது தேசிய சுகாதாரத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாகக் காணப்படுகின்றது. எனவே, இதனைக் கட்டுப்படுத்த சுகாதார அமைச்சர் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் இந்தச் சபைக்கு அறிவிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் கேட்டுக்கொண்டார்.

இதன்போது, சபையில் சுகாதார அமைச்சரான ராஜித சேனாரத்ன பிரசன்னமாகாமையால், இதற்குப் பதிலளித்த சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல, "இந்த நோய்த் தாக்கமானது நாட்டில் கடந்த 20 வருடங்களுக்கு முன்னரே வந்து விட்டது. இதனைக் கட்டுப்படுத்த நாமும் பல சந்தர்ப்பங்களில் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்தோம். தற்போது டெங்கு நோய் அதிகமாகப் பரவும் கிண்ணியா மற்றும் திருகோணமலைப் பிரதேசங்கள் தொடர்பிலும் நாம் அக்கறை எடுத்துள்ளோம்" என்றார்.

இதனை அடுத்து இதற்குப் பதிலளித்த அமைச்சர் ரவூப் ஹக்கீம், "டெங்கு நோய் பரவும் பகுதிகளைக் கட்டுப்படுத்த தற்போது போதியளவு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. முப்படைகளும் , தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இதற்கு ஒத்துழைப்புக்களை வழங்குகின்றன. அத்தோடு, நோயாளர்களுக்குத் துரித சிகிச்சை வழங்கும் நோக்கில் கூடியளவிலான வைத்தியர்களும் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்" என்றார்.

அமைச்சர் ஹக்கீமின் பதிலை அடுத்து, எழுந்த தலைமை அமைச்சர், " டெங்கு நோயைக் கட்டுப்படுத்த திருகோணமலை போன்ற பிரதேசங்களுக்கு போதியளவு வசதிகள் இப்போதும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பில் அமைச்சர்களும் அவதானத்துடனேயே இருக்கிறார்கள்.

அரசென்ற ரீதியில் இந்த நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்பில், நாமும் தற்போது கவனம் செலுத்தியுள்ளோம். மாலைத்தீவில் பன்றிக்காய்ச்சல், பறவைக் காய்ச்சல், சீனாவில் பறவைக் காய்ச்சல் என பல்வேறு நாடுகளில் பல்வேறு நோய்கள் பரவியுள்ளன. எனவே, சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை தொடர்பிலும் நாம் அக்கறை கொண்டுள்ளோம்." என்றார். (ஐ-4)

# நியூசிலாந்து தூதரகம் கொழும்பில் திறக்கப்படும்



கொழும்பு, மார்ச் 25
இலங்கைக்கான நியூசிலாந்து தூதரகத்தைக் கொழும்பில் அமைப்பதற்கு, நியூசிலாந்து அரசு வரவு செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அதன்மூலமாக இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள் மேலும் வலுப்படும். இவ்வாறு நியூசிலாந்து அயலுறவு அமைச்சர் முரே மெக்கலி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது "உள்நாட்டுப் போரால் ஒரு தலைமுறை இடைவெளியின் பின்னர் இலங்கை மீளக் கட்டியெழுப்பப்பட்டு வருகிறது. இலங்கையின் இந்த முயற்சிக்கு அரசியல் ரீதியாகவும், விரிவாக்கப்பட்ட பொருளாதார ரீதியாகவும் உதவ நியூசிலாந்து விரும்புகிறது. பொருளாதார ரீதியில் அபிவிருத்தியடைந்து வரும் இலங்கையில் பாற்பொருள்களுக்கான சந்தை வாய்ப்புகள் அதிகமாக இருக்கிறன. இந்த நிலையில், நியூசிலாந்திடம் இருந்து பாற்பொருள்கள் மற்றும் விவசாயத் துறையில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் புதிய தொழில்நுட்பங்களைக் கற்றுக்கொள்ள இலங்கை விரும்புவதாகவும் தெரிவித்துள்ளது. நியூசிலாந்தில் இருந்து இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களின் அளவும் அதிகரித்து வருகிறது. இந்தச் சூழ்நிலையில் இலங்கையில் நியூசிலாந்தின் தூதரகம் ஒன்றை ஆரம்பிப்பது சிறந்ததாக இருக்கும். என்றார்.

இந்த வருடத்துக்கான நியூசிலாந்தின் வரவுசெலவுத் திட்டத்தில், இலங்கையில் தூதரகம் ஒன்றை அமைப்பதற்காகவும், அதன் அடுத்த நான்கு ஆண்டு காலச் செயற்பாட்டுக்காக முறையே 6.2 மில்லியன் மற்றும் 8.9 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் அந்த நாட்டின் அரசு ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ4)

யாழ்ப்பாணப் புரட்டஸ்தாந்து எண்ணிம ஆவணகம்
JAFFNA PROTESTANT DIGITAL ARCHIVE

எண்ணிம ஆவணகப் பயிற்சித் திட்டத்துக்கான விண்ணப்பம்

யாழ்ப்பாணப் புரட்டஸ்தாந்து எண்ணிம ஆவணகத்தின் அரிதான ஆவணங்களின் காப்புத் தொடர்பான திட்டம் யாழ்ப்பாணப் புரட்டஸ்தாந்து சமூகத்தினரின் அரிதான ஆவணங்களினைக் கண்டடைந்து எண்ணிமப்படுத்துவதற்கான முன்முனைவாக அமைகிறது. இது ஆக்காடியாவின் நிதியுதவியுடன் பிரித்தானிய நூலகத்தின் முகாமையின் கீழ் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக மரபுரிமைப் பேணுகை, எண்ணிமப்படுத்தல் ஆகியவற்றில் ஆர்வமுள்ள பன்னிரண்டு மாணவர்களுக்கான பயிற்சித் திட்டமொன்றை இவ்ஆவணகமானது ஆரம்பிக்கவுள்ளது. இப்பயிற்சித் திட்டமானது வரலாறு, மரபுரிமைகளினைப் பேணுதல் மற்றும் எண்ணிமப்படுத்தல் ஆகியன பற்றிய ஒன்பது அமர்வுகளை உள்ளடக்கியதாக அமையும். இவ்வமர்வுகள் தமிழ்மொழியில், யாழ்ப்பாணத்தின் மிகச்சிறந்த வல்லுநர்களினால் நடாத்தப்படும். இப்பயிற்சித் திட்டத்தின் நிறைவில் பங்குபற்றிய மாணவர்களுக்கு யாழ்ப்பாணப் புரட்டஸ்தாந்து எண்ணிம ஆவணகத்திடமிருந்து சான்றிதழ் வழங்கப்படும். அத்துடன் எதிர்காலத்தில் இடம்பெறும் தொழில்வாய்ப்பின் போது இவர்கள் உள்ளீர்க்கப்படலாம்.

**வகுப்பு நேரங்கள்: திகதி: 27. 04. 2017 – 20. 05. 2017**

- செவ்வாய்க்கிழமை மற்றும் வியாழக்கிழமைகளில் பி.ப 4.00 – மாலை 6.00 மணிவரை
- சனிக்கிழமைகளில் மு.ப 9.00 - பி.ப 4.00 மணிவரை

10. 05. 2017 - 14. 05. 2017 வரையான வெசாக் விடுமுறை நாள்களில் வகுப்புக்கள் நடைபெறமாட்டாது.

**வேண்டப்படும் கல்வி மற்றும் முன்னனுபவங்கள்:**

- க. பொ. த சாதாரணதரப்பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்
- ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் மிகஅவசியமற்றதாயினும் ஆங்கில அறிவிருப்பின் நல்லது.
- நூலகவிஞ்ஞானம், மரபுரிமை முகாமைத்துவம், வரலாறு மற்றும் சமூகவியற் துறைகளில் ஆர்வமிருப்பின் நல்லது.

**வேண்டப்படும் தகுதிகள்:**

- நேரமுகாமைத்துவம் மற்றும் மற்றவர்களை மதிப்பதோடு நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.
- கேட்டல் மற்றும் தெளிவாகத் தொடர்பாடத்தக்க தொடர்பாடற் திறமை இருத்தல் வேண்டும்.
- குழுச்சூழலோடு இணைந்து தொழிற்படத்தக்கவராகவும் சமத்துவமான பால்நிலைப் பங்குபற்றலினை ஊக்குவிக்கத்தக்கவராகவும் இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

ஆர்வமுள்ளவர்கள், எங்களது இணைய முகவரியான http:// jaffnapdl.org/ digitalarchives application ஊடாக விண்ணப்பிக்கலாம். தபால்மூலம் விண்ணப்பிப்பதற்கு http://jaffnapdl.org/ digitalarchivesdownload எனும் இணைய முகவரியில் விண்ணப்பப் படிவத்தினைத் தரவிறக்கம் செய்து "யாழ்ப்பாணப் புரட்டஸ்தாந்து எண்ணிம ஆவணகம் இல.9/4, பிளெச்சர் லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், இலங்கை" என்ற முகவரிக்கு ஏப்ரல் முதலாம் திகதிக்கு முன்னர் வந்தடையுமாறு அனுப்பிவைக்கலாம்.தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுடன் மாத்திரமே தொடர்பு கொள்வோம். மேலதிக தகவலுக்கு JaffnaEAP835@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியினூடாக தொடர்புகொள்ளவும்.

**விண்ணப்பமுடிவுத்திகதி 01. 04. 2017**

# கல்லகேயின் விசா அனுமதி; இன்னமும் இறுதி முடிவில்லை

கொழும்பு, மார்ச் 25
இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் சாஜி கல்லகேயின் நுழைவிசைவு விண்ணப்பம் தொடர்பாக இன்னமும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்று இலங்கையிலுள்ள ஆஸ்திரேலிய தூதரகம் தெரிவித்துள்ளது.

போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் சாஜி கல்லகேயின் நுழைவிசைவு விண்ணப்பத்தை ஆஸ்திரேலியா நிராகரித்திருப்பதாக நேற்று செய்திகள் வெளியாகியிருந்தன. இதுதொடர்பாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று ஆஸ்திரேலிய தூதரகத்திடம் எழுப்பிய கேள்விக்கு, "ஆதாரமற்ற போர்க்குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் எந்தவொரு இலங்கை இராணுவ அதிகாரிக்கும் நுழைவிசைவு மறுக்கப்படவில்லை" என்று பதில் அளிக்கப்பட்டுள்ளது. மேஜர் ஜெனரல் சாஜி கல்லகேயின் நுழைவிசைவு விண்ணப்பம் இன்னமும் பரிசீலனையில் இருப்பதாக ஆஸ்திரேலிய தூதரகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். 2016 டிசெம்பர் தொடக்கம், 2017 ஜனவரி வரையான காலத்தை, ஆஸ்திரேலியாவில் உள்ள தனது சகோதருடன் செலவிடுவதற்காகவே அவர் நுழைவிசைவு கோரியிருந்தார். அவருடன் நேர்காணலை நடத்திய பின்னர், ஆஸ்திரேலியாவின் குடிவரவு மற்றும் எல்லைப் பாதுகாப்பு திணைக்களம், "சர்ச்சைகளுக்குச் சாத்தியமான விருந்தினர்" என்ற தலைப்பில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்ததை அடுத்தே, கல்லகேயின் நுழைவிசைவு மறுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை இழைத்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் கொழும்பு ஆங்கில நாளிதழ் குறிப்பிட்டுள்ளது. (ஐ-4)

# பொது எதிரணியின் பேரணிப் பீதியால் தொகுதி அமைப்பாளர்களின் பதவி நீக்கம்

## ரமேஷ் பத்திரண எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 25
பொது எதிரணி நடத்தும் மாபெரும்பேரணி, அரசுக்குபீதியைக் ஏற்படுத்தியுள்ளது. அதன் பின்னனியாகவே தொகுதி அமைப்பாளர்களின் பதவிகள் பறிக்கப்பட்டன.இவ்வாறு பொது எதிரணியின் நாடாளுமன்றஉறுப்பினர்ரமேஷ்பத்திரண குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது
அரசுக்கு எங்களது ஹபராதுவ பேரணி பெரும் பீதியை ஏற்படுத்தியிருக்கிறது என்பது அதன் அவசர முடிவிலிருந்து தெரிய வந்திருக்கிறது. கட்சித் தலைவர் என்ற முறையில் எங்களது பதவிகளைப்பறிக்கஅரசதலைவருக்கு அதிகாரம் இருந்த போதிலும், காலம் காலமாக நாங்கள் மக்களிடம் பெற்றிருக்கும் நற்பெயரையும், ஆதரவையும் அவரால் பறிக்க முடியாது. நாங்கள் எப்போதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை ஆதரிப்போமே தவிர, ஐக்கிய தேசியக் கட்சியின் எதேச்சதிகாரத்துக்கு ஒருபோதும் அடிபணியப் போவதில்லை. நாங்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குவிரோதமானவர்கள் அல்லர். எனினும், அந்தக் கட்சியின் கட்டுக்கோப்பையும், நற்பெயரையும் களங்கப்படுத்திக்கொண்டு அரசியலைக் கொச்சைப்படுத்திக் கொண்டிருப்பவர்களுக்குத் துணைபோக மாட்டோம்.

இந்த அரசுக்கு எதிரான பொதுமக்களின் அபிப்பிராயம் நாள்தோறும் வலுத்துக் கொண்டே செல்கிறது. இதற்கிடையில் எங்களைப் போன்றவர்களின் பதவிகளைப் பறித்து மேன்மேலும் மக்களின் வெறுப்பை இந்த அரசு சம்பாதித்துக்கொண்டிருக்கிறது. என்றார். (ஐ-4)

# புலம்பெயர்ந்துள்ள பொறியியலாளர்கள் தாயகத்தில் பணியுரிய முன்வரவேண்டும்

## வடக்கு முதலமைச்சர் அழைப்பு



கொழும்பு, மார்ச் 25

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உலகவங்கியின்நிதிஉதவியில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்களுக்குரிய பொறியியலாளர்கள் பற்றாக்குறையாகவுள்ளமையால்புலம்பெயர்நாடுகளில் உள்ள எமது பொறியியலாளர்கள் இங்கு வந்து பணியாற்ற முன்வரவேண்டும்என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன்வேண்டுகோள் விடுத்தார்.

உலக வங்கியின் நிதியில் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளத் திட்டமிட்ட பணிகளுக்கான நிதி கிடைத்துள்ளதையடுத்து உலக வங்கிப் பிரதிநிதிகளுக்கும் வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையிலான குழுவினருக்கும் இடையில் அண்மையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இது குறித்துக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உலக வங்கியின்65மில்லியன்அமெரிக்க டொலர் நிதியில் மேற்கொள்ளப்படவுள்ள பலதிட்டங்களுக்குப் பொறியியலாளர்கள் பற்றாக்குறையாகவுள்ளது. திட்டங்களை ஆரம்பிப்பதில் உள்ள ஒரே தடை இதுவென உலக வங்கிப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியிருந்தனர். பொறியியலாளர்கள்எமது பிரதேசத்தில் குறிப்பிட்டளவில் மட்டுமேஉள்ளனர். அவர்களை இந்தப் பணிக்கு விடுவித்தால் அவர்கள் தற்போது ஆற்றும்பணிகள்பாதிக்கப்படும். அல்லது பகுதியளவில் பணியாற்றினாலும் குறித்த திட்டத்தை முழுமைசெய்யமுடியாதநிலமையே காணப்படும்.

புலம்பெயர் நாடுகளில் உள்ள எமது உறவுகளில்பலர்பொறியியலாளர்களாக பணிபுரிகின்றனர். இந்தநிலையில் அவர்கள் இங்கு வந்து எமது உறவுகளுக்காகப் பணியாற்ற முன்வரவேண்டும்என்றார். (த-101)



கேப்பாபிலவில் தனது காணியை விடுவிக்குமாறு கோரி தொடர் அமைதிவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெண் ஒருவர் தனது வாழ்வாதாரத்துக்காகக் கச்சான் செய்கையில் ஈடுபடுவதற்காக அதனை உடைக்கும் காட்சி இது. (த-7)

# இ.போ.ச. பஸ் மீது கல் வீசித் தாக்குதல்

## 5 பேர் காயமுற்று வைத்தியசாலையில்

வவுனியா, மார்ச் 25

கொழும்பிலிருந்து வவுனியாநோக்கிப்பயணித்த இலங்கைப் போக்குவரத்துச் சபைப் பேருந்து மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட தாக்குதலில் ஐவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினமிரவு இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம்மாலை 4.45 மணியளவில் வவுனியாநோக்கிப்பயணித்த இலங்கைப் போக்குவரத்துச் சபைப் பேருந்து இரவு 10.30மணியளவில்அநுராதபுரத்தை அண்மித்தது. இதன்போதுகொழும்பிலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த தனியார்பேருந்துக்கும் இலங்கைப் போக்குவரத்துச் சபைப் பேருந்துக்கும் இடையே போட்டி ஏற்பட்டது. அநுராதபுரம்உலுக்குளம் பகுதியில் வைத்து இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்தை தனியார்பேருந்துமுந்திச்சென்று 2நிமிடங்களில் இ.போ.ச. பேருந்தின்மீதுகல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பானமேலதிகவிசாரணைகளை அநுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-4)

# ஆலயங்களில் அர்ச்சனைக்கு பனையோலைப் பெட்டிகள்

## பயன்படுத்துமாறு கோருகிறது சுகாதாரத்திணைக்களம்

தென்மராட்சி, மார்ச் 25

தென்மராட்சி ஆலயங்களில் அர்ச்சனைப் பெட்டியாகப் பனையோலையில் செய்யப்பட்ட பெட்டிகளைப்பயன்படுத்துமாறுசுகாதாரத்திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து ஆலய வர்த்தக நிலையங்களில் பிளாஸ்ரிக் அர்ச்சனைப் பெட்டிகளுக்குப் பதிலாக பனையோலைப் பெட்டிகளில் அர்ச்சனைப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

ஆலயச் சுற்றாடலில் காணப்படும் அர்ச்சனைப் பொருள்கள்விற்பனைசெய்யம்நிலையங்களில் பிளாஸ்ரிக்அர்ச்சனைப்பெட்டிகளில்அர்ச்சனைப் பொருள்கள் வைத்து வழங்குவதைச் சுகாதாரத் திணைக்களத்தினர் தடை செய்துள்ளனர். இதனால்ஆலய அர்ச்சனைப்பொருள்கள்விற்பனை நிலையங்களில்பனையொலைப்பெட்டிகள்பெருமளவில் காண்ப்படுகின்றன.

அத்துடன்ஆலயவளாகங்களில்உள்ளஅனைத்து வர்த்தக நிலையங்களிலும் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பைகள் விற்பனை செய்வதையும் தடை செய்து முன்னரைப் போல கடுதாசிப் பைகளில் பொருள்களை வழங்குமாறும் அவர்கள் வர்த்தகநிலையங்களுக்குஅறிவுறுத்தியுள்ளனர் நாட்டில்பிளாஸ்ரிக்மற்றும்பொலித்தீன்பாவனையைக் குறைக்கும் வகையில் தென்மராட்சிப் பிரதேசத்தில் பங்குனித்திங்கள் பொங்கல் உற்சவம் நடைபெறும் ஆலயங்களின் சுற்றாடலில் உள்ள வர்த்தக நிலையங்களில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பைகள் விற்பனை நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தநடைமுறைபிரதேசத்தில்உள்ளஅனைத்து ஆலயங்களிலும்நடைமுறைப்படுத்தப்படுமெனச் சாவகச்சேரிசுகாதாரப்பகுதியினர்அறிவித்துள்ளனர். (த-9)

# பிலக்குடியிருப்பில் இருந்த வெடிபொருள்கள் அகற்றல்

முல்லைத்தீவு,மார்ச்.25

பிலக்குடியிருப்புப் பற்றைக்குள் காணப்பட்ட வெடிபொருள் மனிதநேயக் கண்ணிவெடி அகற்றுவோரால் நேற்று முற்பகல் 10 மணியளவில்அகற்றப்பட்டது. சந்தேகத்துக்கிடமான பொருள்கள் தென்பட்டால் உடன் அறிவிக்குமாறு அவர்கள்தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில்விமானப்படைத் தலைமையகம் அமைந்திருந்தபிலக்குடியிருப்பில் ஒருபகுதிக் காணி கடந்த முதலாம் திகதி பொதுமக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

மக்கள் தமது காணிகளில் உள்ள பற்றைகளைவெட்டித்துப்புரவு செய்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் வெடிக்காத நிலையில் வெடிபொருள்களைக் கண்ட பொதுமக்கள் உடனடியாக பொலிசாருக்கு அறிவித்தனர்.

நேற்று முற்பகல் 10 மணிக்குப் பிலக்குடியிருப்புப் பகுதிக்குச் சென்ற மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் வெடிபொருளைஅங்கிருந்து அகற்றினர்.

காணிகளைத் துப்புரவு செய்யும்போது சந்தேகத்திற்கிடமான வெடிபொருள்கள்தென்படின் உடனடியாக தமக்குஅறிவிக்குமாறு மனிதநேயக்கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பற்றைகளை எரிக்கும்போது அவதானத்துடன் இருக்குமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (த-7)

# ஒளிரும் வாழ்வு அமைப்பினால் செயற்கை உறுப்பு பழுதுபார்ப்பு

கிளிநொச்சி, மார்ச் 25

ஒளிரும்வாழ்வு அமைப்பின் புதுக்குடியிருப்பு அலுவலகத்தில்இப்போதுமாற்றுத் திறனாளிகளின் செயற்கை அவயவங்கள் பழுதுபார்த்துக்கொடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றுத் திறனாளிகளின் நலன்கருதிச் சேவை நோக்கோடு இந்த வேலைத்திட்டம்முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இங்குசக்கரநாற்காலிகள், ஊன்றுகோல்கள், லொக், சொக்கற், இடுப்புப்பட்டிகள், பாதங்களின் உடைவு, ஜொயின்ட் மற்றும்வெளிகவரிங்என்பன பழுதுபார்த்துக்கொடுக்கப்படுகின்றன.

மாற்றுத்திறனாளிகள் தமது அலைச்சலைத் தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு வருவதற்கு முன்னர் 0773528273 எனும்தொலைபேசிஇலக்கத்துடன்தொடர்புகொண்டுவிட்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (த-ய)

# அறநெறிப்பாடசாலைகளின் முன்னேற்றம் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம்,மார்ச். 25

அறநெறிப் பாடசாலைகளின் முன்னேற்றம்தொடர்பாகத்தனியார்கல்விநிறுவனஉரிமையாளர்கள் மற்றும் அறநெறிப்பாடசாலை நிர்வாகிகளுடனான கூட்டம்கடந்த17ஆம்திகதிவெள்ளிக்கிழமை நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக்கலந்துரையாடலில்அறநெறிப்பாடசாலைகளுக்குஇடம் வழங்கக்கூடிய நிலையில் தனியார் கல்வி நிலையங்கள் இயங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இந்து, கிறிஸ்தவ மதப்பெரியார்கள்தனியார்கல்விநிலையங்களுக்கு எதிராக முறைப்பாடுகள் செய்துள்ளதாகவும், அதற்கமைய தனியார் கல்வி நிலையங்கள் தமது கல்வி நடவடிக்கைகளுக்கான நேர அட்டவணையில் மாற்றம் செய்தல் இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றபடியால்பின்வரும் விடயங்களைப் பின்பற்றுவது எனத்தீர்மானிக்கட்டது.

அவையாவன,

தரம் 1தொடக்கம் 9 வரையான வகுப்புக்களை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்குப் பின்னரும் ஞாயிற்றுக்கிழமை நண்பகல்12 மணிவரையும் நிறுத்துதல்வேண்டும். தனியார் கல்வி நிலையங்கள் கட்டாயமாகநிறுவனப்பதிவை உள்ளுராட்சிச்சபையில்மேற்கொண்டிருத்தல் வேண்டும். சுத்தமான குடிதண்ணீர் மற்றும் மலசலகூடவசதிகள் இருப்பதை உறுதி செய்தல்வேண்டும். வகுப்பறைகளும் இருக்கைகளும் உடல் நலத்துக்கேற்றசௌகரியமான முறையில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். கட்டட வசதிகள் நிரந்தரமானதாக இருப்பதுடன் பாதுகாப்பான மின்னிணைப்பு இருத்தல்வேண்டும். மாணவர்களின்முள்ளந்தண்டைப்பாதிக்காத வகையில் இருக்கைகள் இருத்தல் வேண்டும்.

மேற்கூறிய இந்த நடைமுறைகள் யாவும் 20 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரவேண்டும் என்பதுடன் இந்த நடைமுறைகள் பின்பற்றுவதைப் பிரதேச செயலகம், சிறுவர்திணைக்கள உத்தியோகத்தர்கள், சுகாதாரப் பணிமனை உத்தியோகத்தினர், பிரதேசசபைமாநகரசபையினர் இணைந்து பரிசீலனை செய்து உறுதிப்படுத்துவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-ரி)

# தனியார் பேருந்து நிலையத்தின் நடைபாதைக்கடைகள் அகற்றல்

யாழ்ப்பாணம் மார்ச் 25

வெளிமாவட்டத் தனியார் பேருந்து நிலையம் அமைந்துள்ள வீதியில் அனுமதியின்றிச் செயற்பட்டுவந்த நடைபாதை வியாபார நிலையங்கள் நேற்று யாழ்ப்பாணம் மாநகர சபையினராலும் பொதுச்சுகாதாரப்பிரிவினராலும்அகற்றப்பட்டன. நேற்று முற்பகல் 9.30 மணியளவில் இந்த நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணநகரைஅண்டியபகுதிகளில்அனுமதியின்றிச் செயற்பட்டுவரும் நடைபாதை வியாபார நிலையங்கள் மாநகர சபையினராலும் பொதுச் சுகாதாரப் பிரிவினராலும் அகற்றப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் நேற்றுக் காலை வெளிமாவட்ட தனியார் பேருந்து நிலையம் அமைந்துள்ள வீதியில் அனுமதியின்றிச் செயற்பட்டுவந்த நான்கு நடைபாதை வியாபார நிலையங்கள் அகற்றப்பட்டன.

குறித்தவியாபாரநிலையங்களில்காட்சிப்படுத்தப்பட்டிருந்தபொருள்களும்பொதுச்சுகாதாரப்பிரிவினரால் பறிமுதல் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த)

# காணிகளைக் கடற்படை கையளிக்கும் வரையில் போராட்டம் தொடரும்

## முள்ளிக்குளம் மக்கள் உறுதி



மன்னார், மார்ச் 25

கடற்படையினரால் அபகரிக்கப்பட்டுத் தற்போது கடற்படைப் பயிற்சி முகாமாக உள்ள தமது நிலத்தை மீட்டு மீள்குடியேற்றம் செய்யுமாறு வலியுறுத்தி முள்ளிக்குளம் கிராம மக்கள் கடந்த 23ஆம் திகதி ஆரம்பித்த கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

தீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என அவர்கள் கூறியுள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு கடும் குளிரின் மத்தியிலும் மக்கள் போராட்ட இடத்திலேயே உறங்கினர். பெண்கள், ஆண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் இந்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களைக் கடற்படையினர் பல்வேறு வகையில் அச்சுறுத்தி வருவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மக்களின் கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து அருட்தந்தையர்கள், மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள், வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன், மன்னார் நகர சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.ஆர்.குமரேஸ் ஆகியோர் நேற்று வெள்ளிக்கிழமை காலை முள்ளிக்குளம் பகுதிக்குச் சென்றனர்.

கடற்படையினர் தம்மைத் தொடர்ச்சியாகப் ஒளிப்படம் எடுப்பதாகவும், ஊடகங்களுக்குக் கருத்துக்களை வழங்குபவர்களின் விவரங்களைத் திரட்டுவதாகவும் அந்த மக்கள் கூறினர்.

போராட்டத்தை உடனடியாகக் கைவிடாவிட்டால் நீங்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்படும் எனக் கடற்படை எச்சரிப்பதாகவும் மக்கள் மேலும் தெரிவித்தனர்

ஆயினும் தமது போராட்டம் தீர்வு கிடைக்கும் வரை தொடரும் எனவும் அவர்கள் உறுதியாகத் தெரிவித்தனர்.

போராட்டம் குறித்து வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் தெரிவிக்கையில்,

மக்களின் போராட்டமானது நியாயமானது. இரண்டாவது நாளாகவும் அவர்கள் தமது போராட்டத்தை அமைதியான முறையில் முன்னெடுத்துள்ளனர். கடற்படையினர் தொடர்ச்சியாக அச்சுறுத்தும் வகையில் நடந்து கொள்வதாக மக்கள் முறையிட்டுள்ளனர். பொலிஸார் அப்பகுதியில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் கடற்படைக்குப் பாதுகாப்பு வழங்குகின்றார்களா? அல்லது மக்களை அச்சுறுத்தும் வகையில் செயற்படுகின்றார்களா?என்பது தெரியவில்லை. கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களைப் பாதுகாக்க வேண்டியது பொலிஸாரின் கடமை என்றார். (கு - 56)

# 246 கிராம அலுவலர்களுக்கு வடக்கில் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், மார்ச் 25

வடக்கில் மொத்தம் 917 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ள நிலையில் தற்போது 671 கிராம அலுவலர்களே பணியில் உள்ளதால் 246 கிராம அலுவலர் பிரிவுகளில் பணிபுரிவதற்கு ஆள்கள் அற்ற நிலைமையே காணப்படுவதாக மாவட்டச் செயலகங்களின் தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

வடக்கின் 5 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டச் செயலகங்களின் தகவல்களின் படி கிராம அலுவலர் வெற்றிடங்கள் அதிகமாகவே காணப்படுகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மொத்தமாக 435 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ள போதிலும் தற்போது 333 கிராம அலுவலர்களே பணிபுரிகின்றனர். 102 கிராம அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன.

அதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் 136 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ள நிலையில் 85 கிராம அலுவலர்கள் மட்டுமே பணியாற்றுகின்றனர். இங்கு 51 கிராம அலுவலர்களுக்கான வெற்றிடங்கள்நிலவுகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 95 கிராம அலுவலர் பிரிவுகளில்75கிராமஅலுவலர்கள் பணியாற்றுகின்றனர். 20 கிராம அலுவலர்களுக்கான வெற்றிடம் காணப்படுகின்றது. வவுனியா மாவட்டத்தில் மொத்தமாக உள்ள 102 கிராம அலுவலர் பிரிவுகளில் 62 கிராம அலுவலர்கள் மட்டுமே பணியாற்றுகின்றனர். இதனால் இங்கும் 40 கிராம அலுவலர்களுக்கான வெற்றிடம் காணப்படுகின்றது. மன்னார் மாவட்டத்தின்153கிராம அலுவலர்பிரிவுகளிலும்123 கிராம அலுவலர்கள் பணியாற்றுகின்றனர். இங்கு 32 கிராமஅலுவலர்களுக்குவெற்றிடம் உள்ளது. மாவட்டச் செயலகத் தகவல்கள் இதனைத் தெரிவிக்கின்றன.

வடக்கின்5மாவட்டத்தின்917 கிராம அலுவலர் பிரிவுக்கும் 617உத்தியோகத்தர்கள்பணியாற்றும் நிலையில் 246 கிராம அலுவலர்களுக்கான வெற்றிடம்காணப்படுகின்றது.

இதேவேளை, கிராம அலுவலர்கள் வெற்றிடத்தை நிரப்புவதற்காகக் கடந்த ஆண்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டுப் போட்டிப் பரீட்சைகளும் இடம்பெற்றுள்ளநிலையில்நியமனம் வழங்குவதில் மட்டும் தாமதம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு - 101)

# கூட்டுறவுச் சங்கக் கிளையை உடைத்து பொருள்கள் திருட்டு

தென்மராட்சி, மார்ச் 25

தென்மராட்சி கிழக்குப் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் கடையொன்றை இரவுவேளையில் உடைத்து உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்து 32 ஆயிரத்து 900 ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகச் சங்க நிர்வாகத்தினர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை, கொடிகாமம் நகரப் பகுதியில் விடப்பட்டிருந்த புதிய பெண்களுக்கான சைக்கிளும் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளதெனப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த இரு சம்பவங்கள் தொடர்பாககொடிகாமம்பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர்.(கு - 9)

# ஜங்கரநேசனை கூட்டத்துக்கு அழைக்காமல் விட்டது ஏன்?

## மாவட்டக் கூட்டுறவுச் சபை விளக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

கொழும்பு அரசுடன் தொடர்புடைய விடயங்களை ஆராயும் கூட்டம் என்பதாலேயே வடக்கு மாகாணக் கூட்டுறவு அமைச்சர் பொ.ஜங்கரநேசனை அழைக்காமல், நாடாளுமன்ற உறுப்பினர்களை மாத்திரம் அழைத்தோம். அமைச்சர் ஜங்கரநேசனை அழைக்காமல் விட்டதற்கு வேறு எந்த நோக்கமும் எமக்கு இருக்கவில்லை என்று யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை, செய்தி வெளியாகி 2 தினங்களின் பின்னர் விளக்கம் அனுப்பி வைத்துள்ளது.

கூட்டுறவுசார் கலந்துரையாடல்களில் கூட்டுறவு அமைச்சரையும் அழையுங்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், கடந்த 18 ஆம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டுறவுசார் கலந்துரையாடலில் பேசிய விடயம் 'உதயன் பத்திரிகையின்' 9 ஆம் பக்கத்தில் 20 ஆம் திகதி வெளியாகியிருந்தது.

இது தொடர்பான விளக்கம் யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபையினால், 22 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளது. அதில் மேற்படி செய்தியானது வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சருக்கும், எமக்கும் இடையே இடைவெளி இருப்பதைப் போல் காட்டுகின்றது. அப்படி எதுவும் இல்லை என்று அழுத்தமாக விளக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கூட்டுறவுத்துறைக்கு வழங்கப்பட்டிருந்த வரிச் சலுகை கூட்டு அரசால் பறிக்கப்பட்டமை, மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் போர்ச் சூழலில் இழந்த பல கோடி இழப்புக்கள் ஈடு செய்யப்படாமை, அத்தியாவசியப் பொருள்களுக்கு அரசால் கொண்டு வரப்பட்ட கட்டுப்பாட்டு விலை நிர்ணயம். அது தொடர்பாக எழுந்துள்ள நெருக்கடிகள், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிகரிக்கப்பட்ட அனுமதிக் கட்டணம், வரிச்சுமை ஆகிய விடயங்கள் தொடர்பில் ஆராயவே கூட்டம் கூட்டப்பட்டதாகவும், இது நாடாளுமன்றத்தில் பேசப்பட வேண்டிய விடயம் என்பதால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டனர் என்று குறிப்பிட்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூட்டத்தில் மேற்படி விடயத்தைப் பேசிய பின்னரே அவர் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சரை அழைக்காமைக்கான மேற்படி காரணம் தெரியப்படுத்தப்பட்டதாகவும் விளக்கத்தில் குறிப்பி டப்பட்டுள்ளது. (கு - 5)

# முதிரை கடத்திய சாரதிக்கு 39 ஆயிரம் ரூபா தண்டம்

## பொலிஸாரின் மோ.சைக்கிளை சேதமாக்கியமைக்கு ரூ.25 ஆயிரம்

முதிரை மரம் கடத்திய வாகனச் சாரதிக்கு 39 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் பொலிஸாரின் மோட்டார் சைக்கிளுக்குச் சேதம் ஏற்படுத்தும் வகையில் வாகனத்தைச் செலுத்தியமைக்காக 25 ஆயிரம் ரூபா இழப்பீடும் செலுத்துமாறு உத்தரவிட்டார் சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான்.

கடந்த செப்ரெம்பர் 16 ஆம் திகதி கொடிகாமம் பகுதியில் வந்த பார ஊர்தியை நிறுத்துமாறு வீதிப் போக்குவரத்துக் கண்காணிப்பில் ஈடுபட்ட பொலிஸார் சமிக்ஞை காட்டியபோது வாகனச் சாரதி நிறுத்தாமல் சென்றுள்ளார். வாகனத்தைப் பொலிஸார் துரத்திச் சென்றவேளை கவனவீனமாகவும் ஆபத்தான முறையிலும் அதனைச் செலுத்திப் பொலிஸாரின் மோட்டார் சைக்கிளை முந்தவிடாமல் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்டுள்ளார். இதனால் பொலிஸாரின் மோட்டார் சைக்கிளுக்குச் சேதம் ஏற்பட்ட நிலையில் மட்டுவில் பகுதியில் வைத்துப் பார ஊர்தியைப் பிடித்தனர்.


பார ஊர்தியைப் பரிசோதனை செய்தபோது அதனுள் 3 லட்சத்து 24 ஆயிரத்து 330 ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு சாரதிக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டார் .இதனையடுத்து அனுமதிப் பத்திரமின்றி முதிரை மரக்குற்றிகள் ஏற்றி வந்தமைக்கு 30 ஆயிரம் ரூபாவும், பொலிஸாரின் சமிக்ஞையை மீறியமை, கவனவீனமாக வாகனம் செலுத்தியமை, ஆபத்தை விளைவிக்கக்கூடிய வகையில் வாகனம் செலுத்தியமை போன்ற குற்றங்களுக்காக தலா 3 ஆயிரம் ரூபா வீதம் 9 ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் 39 ஆயிரம் ரூபா தண்டமாகவும், பொலிஸாரின் மோட்டார் சைக்கிளுக்குச் சேதம் ஏற்படும் வகையில் வாகனம் செலுத்தியமைக்கு இழப்பீடாக 25 ஆயிரம் ரூபாவும் செலுத்துமாறு உத்தரவிட்டார். (கு - 9)

# இறைவனோடு பேரமா?

கடவுளோடு பேரம்பேசும் மனநிலையை நம்மையும் அறியாமல் வளர்த்து வருகின்றோம். கடவுளுக்கும் எமக்கும் இடையில் உள்ள உறவு பண்டமாற்று வர்த்தக முறையில் இடம்பெறுவது கவலைக்குரிய விடயமாகும். எமது வழிபாடுகள் வேண்டுதல்கள் காணிக்கைகள் எந்தவகையில் அமைந்துள்ளது?

என்தொழில் வெற்றிபெற்றால் இலட்சரூபாய் தருகிறேன், மகளுக்குத் திருமணம் நடந்தால் தங்கத்தாலி வழங்குவேன், பரீட்சையில் சித்திபெற்றால் பட்டுக்குடை தருவேன் என பேரம் பேசுவதும் நிபந்தனை விதிப்பதும் விசுவாச ஆழமின்மையையே காட்டுகிறது. சாகும் தறுவாயிலிருந்த தனது மகனுக்காக அரச அலுவலர் இயேசுவிடம் வேண்டியபோது. "நீர் புறப்பட்டுப் போம் உம் மகன் பிழைத்துக்கொள்வான் (யோவா : 4) என்று இயேசு கூறிய வார்த்தையை நம்பிவீடுதிரும்பினார்.




தனது பதவி அதிகாரம், சொத்தை முன்னிலைப்படுத்தி எவ்வித பேரமும் பேசவில்லை. மாறாக அவற்றையெல்லாம் மூடை கட்டி ஒதுக்கிவைத்துவிட்டு இயேசுவின் இரக்கத்தை நம்பி செயற்பட்டது இறை நம்பிக்கையின் உச்சக்கட்டமாகும். இறைவேண்டலில் பேரம்பேசி நேரத்தை, பணத்தை வீண டிப்பதைத் தவிர்த்து அவரின் வார்த்தைகளை மனதில் நம்பிக்கையோடு பதியவிட்டு பயணத்தை தொடரக்கற்றுக்கொள்வோம். நன்றியால் இறை உறவை ஆழப்படுத்துவோம்.

*எஸ்.யேசுதாஸ்.*

# ராணுவம் வசமுள்ள திணைக்களங்களை விடுவிக்கவேண்டும்

## இல்லையெனில் திங்களன்று பேராட்டம்

கிளிநொச்சி, மார்ச் 25
"கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் முன்னேற்றத்துக்கு உறுதுணையாகவுள்ள அரச திணைக்களங்களை அபகரித்துள்ள இராணுவம், அவற்றை உடன் விடுவித்து, விவசாயிகளின் முன்னேற்றத்துக்கு உதவ வேண்டும். இல்லையெனில் 500 இக்கும் மேற்பட்ட விவசாயிகளை ஒன்றிணைத்து மாபெரும் போராட்டதை எதிர்வரும் திங்கட்கிழமை முன்னெடுப்போம்".
இவ்வாறு மாவட்ட விவசாயிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.
இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயிகளுடன் நேரடியாகத் தொடர்புபட்ட அரச திணைக்களங்களின் அலுவலகங்கள் மற்றும் இதர காணிகளில் மட்டும் 4 முக்கிய இடங்களை இராணுவத்தினர் அபகரித்து வைத்துள்ளனர். அவ்வாறு ஆக்கிரமித்துள்ள இராணுவம், போர் முடிந்து 8 ஆண்டுகளாகின்ற போதும் அவற்றை விடுவிக்கும் எந்தவித நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. இதனால் மாவட்ட விவசாயிகள் பெரிதும் பாதிப்படைகின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தில் படையினரின் பிடியில் உள்ள விவசாயத்துடன் தொடர்புபட்ட திணைக்களங்களுக்குச் சொந்தமான வட்டக்கச்சியில் உள்ள 415 ஏக்கர் விவசாயப் பண்ணை, அதேபோன்று இரணைமடுக் குளத்தின் அருகில் உள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கண்காணிப்பாளர் அலுவலகம், ஏ - 9 வீதியில் உள்ள விவசாயத் திணைக்களத்தின் சேவைக்காலப் பயிற்சி நிலையம் மற்றும் காக்கா கடைச் சந்திக்கருகில் உள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அலுவலகக் கட்டடம் ஆகியவற்றைப் படையினர் தொடர்ந்தும் ஆக்கிரமித்தே வைத்துள்ளனர்.
இவ்வாறு படையினரின் பிடியில் உள்ள இடங்களில் உடனடியாக வட்டக்கச்சிப் பண்ணையை இராணுவம் விடுவிக்க வேண்டும் என்று இரணைமடு விவசாயச் சம்மேளனத்தில் தீர்மானம் நிறைவேற்றி, அதனை அரச தலைவருக்கும் அனுப்பி வைத்தோம். எந்தவிதமான சாதகமான பதிலும் கிடைக்கவில்லை. எனவே அடுத்த கட்ட நடவடிக்கையாக மாபெரும் கவன ஈர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். இதன் பிரகாரம் விவசாயிகளின் மேம்பாடு கருதி குறித்த கட்டடங்களிலிருந்து படையினரை உடனடியாக விடுவிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு இடம்பெறும் ஆர்ப்பாட்டத்தையும் கவனமெடுத்து, குறித்த அரச திணைக்களங்களில் இருந்து படையினரை வெளியேற்றா விட்டால் மூன்றாவது கட்ட நடவடிக்கையை இறுக்கமான வழியில் முன்னெடுக்கவும். விவசாயிகள் தீர்மானித்துள்ளதோடு அது தொடர்பில் ஆர்ப்பாட்டத்தின் பின்னர் தீர்மானிக்கப்படும் - என்றனர்.
(ஜ - 101)



காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின்

# போராட்டம் திருமலையில் 20 நாள்களையும் கடந்தது



மூதூர், மார்ச்25
"எனது மகனைப் பொலிஸாரும் சி.ஐ.டியினருமே கைது செய்தனர். அவரைக் கைதுசெய்த சிலரை அடையாளம் காட்டிய போதும் எமக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய நீதி இதுவரை கிடைக்க வில்லை."
இவ்வாறு திருகோணமலை தம்பலகாமம் 98 ஆம் கொலனியைச் சேர்ந்த தங்கவேல் பூமணி (56) தெரிவித்தார்.
கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் நீதிகோரிய உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்றுடன் 20 ஆவது நாளாக திருகோணமலையில் தொடர்கிறது. சுழற்சி முறையாக இடம்பெற்றுவரும் இந்தப் போராட்டமானது திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் முன்னர் இடம் பெற்றுவருகிறது.
இதன்போது அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்ததாவது:
"எனது மகன் தங்கவேல் விஜியராஜ் (25) 2008.09.04 அன்று தம்பலகாமம் கோயிலடிக்கு அருகில் வைத்து பொலிஸ் ஜீப்பில் அவரையும், இன்னொருவரையும் ஏற்றிச் சென்றார்கள். பக்கத்தில் கருணா அலுவலகம். அடுத்த பக்கம் பொலிஸ் நிலையம். சாதாரணமாக பொலிஸ் வீதியில் நிற்பவர்களைப் பிடித்து விசாரிப்பதற்காக அழைத்து செல்வது போல், கைது செய்யப்பட்ட எனது மகன் இன்று வரை எங்கு இருக்கிறான் என்று தெரியவில்லை - என்றார்.
இதன்போது கருத்துத் தெரிவித்த கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கபட்ட உறவுகளின் அமைப்பின் தலைவி ஜெ. நாகேந்திரன் ஆசா தெரிவித்ததாவது:
கடந்த மார்ச் மாதம் 4ஆம் திகதி இந்தப் போராட்டம் ஆரம்பமான போது, கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்னாண்டோ எம்முடன் பேச்சு நடத்தியபோது, காணாமல் போனோருக்காக அரசின் சிறப்பு அலுவலகமானது பணிகளை ஆரம்பித்துள்ளது எனத் தெரிவித்தார். இந்தப் பதில் எமக்கு திருப்தி அளிக்கக் கூடிய நிலையில் இருக்கவில்லை என்ற போதும், எம்முடைய மனநிலையை மதித்து அவர் எம்மை அழைத்துப் பேசியது தாய்மாருக்குச் சற்று ஆறுதல் அளிக்கக் கூடியதாக இருந்தது. இதனைத் தொடர்ந்து முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஆர்.எம் அன்வர் வந்து எம்முடன் பேசினார்.
நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் அவர்களின் ஆதரவாளர்களும் வந்து எமது தாய்மாரிடம் பேசி அவர்களுடைய சோகங்களைப் பகிர்ந்து கொண்டனர். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் ஐயாவின் வீட்டுக்கு முன் நின்று ஆர்ப்பாட்டம் செய்து அவரை அவருடைய இல்லத்தில் சந்தித்தோம். அந்தச் சந்தர்ப்பத்திலேயே எமது கோரிக்கைக்கு அமைய அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சரையும், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளையும் ஒரே தளத்தில் சந்தித்து எமக்கான தீர்வைப் பெற்றுத்தர தாம் ஏற்பாடு செய்வதாகத் தெரிவித்துள்ளார் - என்றார். (ஜ - ய - 40)



வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் மணிக்கோபுரத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு ஆலயப் பூசகர் கந்ததாசக் குருக்கள் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 6.30 மணியளிவில் இடம்பெற்றது. பல கோடி ரூபா செலவில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய கட்டுமானப்பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ - 7)

# பாலம் இல்லாததால் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் சின்னடம்பன் மக்கள்

வவுனியா, மார்ச் 25
"கனகராயன் ஆற்றுப்பகுதியில் ஒரு பாலம் அமைத்துத் தராதமையால், ஒவ்வொரு மழை காலத்திலும் 5 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கிராமத்துக்கு 24 கிலோ மீற்றர் சுற்றுப் பயணம் மேற்கொண்டே பயணிக்கும் அவலம் ஏற்பட்டுள்ளது."
இவ்வாறு கரப்புக்குத்தி கிராம அபிவிருத்திச்சங்கச்செயலாளர் செ.செல்வராஜா சுட்டிக்காட்டியுள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
வவுனியா மாவட்டம் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் வரும் சின்னடம்பன் கிராம சேவகர் பிரிவின் கீழ் போருக்கு முன்னர் 463 குடும்பங்களுடன் செல்வச் செழிப்புடன் விளங்கிய கரப்புக்குத்தி, விஞ்ஞான குளம், சின்னடம்பன் ஆகிய கிராமங்களில் இன்று 206 குடும்பங்கள் மட்டுமே வாழும் நிலையில் பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்டு வருகின்றனர்.
"சின்னடம்பன் கிராமசேவகர் பிரிவின் கீழ் உள்ள கரப்புக்குத்தி கிராமத்தில் இருந்து மாணவர்கள் முதல் பயணிகள் வரையில் 5 கிலோ மீற்றரில் உள்ள பிரதான கிராமமான கனகராயன் குளத்துக்குப் பயணிக்கும் பாதையின் குறுக்கே செல்லும் கனகராயன் ஆற்றுப்பகுதியில் இன்று வரையில் ஒரு பாலம் அமைத்து தராதமையால், ஒவ்வொரு மழை காலத்திலும் 5 கிலோ மீற்றர் தொலை வில் உள்ள இந்தக் கிராமத்துக்கு 24 கிலோ மீற்றர் சுற்றுப் பயணம் மேற்கொண்டே பயணிக்கும் அவலம் நிகழ்கின்றது.
இவ்வாறு எமது கிராமத்தில் உள்ள இந்தப் பெரிய பிரச்சினையை நாம் சுட்டிக் காட்டாத அதிகாரிகளே கிடையாது என எம்மால் துணிந்து கூறமுடியும். ஆனால் இன்று வரை பாலம் மட்டும் கட்டப்படவே இல்லை.
இதேபோன்று சின்னடம்பன் கிராம சேவகர் பிரிவில் போருக்கு முன்னர் வாழ்ந்த குடும்பங்கள் பல பகுதிகளில் சிதறி வாழ்கின்ற போதும் இன்றுவரை ஊர் திரும்ப முன் வர மறுக்கின்றனர். அதற்குக் காரணம் எமது கிராமத்தில் அடிப்படை வசதிகள் கிடையாமையாகும்.
இந்தப் பகுதிகளில் வாழ்பவர்களின் முக்கிய தொழில் விவசாயம். மூன்று கிராமங்களிலும் சிறிய குளங்கள் 7 உள்ளன. இவற்றில் இரண்டு குளங்களே சீரமைக்கப்பட்ட நிலையில் உள்ளன. அதே நேரம் குளத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்ட வயல் நிலங்கள் போர் காரணமாக செய்கை பண்ணப்படாமையால் காடாக வளர்ந்துள்ளன. ஏனெனில் இந்தப் பகுதிகளில் இருந்து 1997 ஆம் ஆண்டிலேயே இடம்பெயர்ந்து சென்று விட்டோம். இப்போது இந்த மரங்கள் வளர்ந்த நிலையில் உள்ளதால் இவற்றை அழிக்க முனைந்தால் வன திணைக்களத்தினர் கைது செய்வர். இதன் காரணமாகவும் வாழ்வாதாரம் பாதிப்படைகின்றது " - என்றார்.
சின்னடம்பன் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் பவான் தெரிவித்ததாவது:
எமது இந்த 3 கிராமங்களுக்கும் இன்றுவரை ஒரு பேருந்துச்சேவை கூடக் கிடையாது. இருக்கும் பாடசாலைகளுக்குப் போதிய ஆசிரியர்கள் கிடையாது. மாலை 6 மணி என்றால் யானைகள் குறித்த அச்சத்தால் காய்ச்சல் ஏற்படுவது போன்று உணர்கிறோம். இவற்றை அதிகாரிகளிடம் தெரிவித்தால் மின்சார வேலி அமைத்துத் தருவதாக கடந்த 5 வருடமாக கூறுகின்றனரே தவிர, இன்றுவரையில் வேலி மட்டும் அமைக்கப்படவில்லை. இதனால் பருவத்துக்குப் பருவம் விளைச்சல் கிடைக்கின்றதோ இல்லையோ யானைகளால் அழிவு மட்டும் ஏற்படுகின்றது.
இவை ஒரு புறமிருக்க எமது வாழ்வாதார நிலங்களை அபகரிக்கும் வனத் திணைக்களத்தினர் வாழ்வாதாரத்தின் முக்கிய மூலமான குளங்களையும் விட்டு வைக்கவில்லை. இந்த வகையில் எமது கிராமத்தில் உள்ள 3 குளங்களையும், தமது ஆளுகையின் கீழ் எடுத்து விட்டனர் வனத் திணைக்களத்தினர். அதனால் அந்தக் குளங்களுக்குரிய சீரமைப்புப் பணிகளைக் கூட மேற்கொள்ள முடியாத தன்மையே காணப்படுகின்றது. உண்மையில் குளங்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குத் தான் சொந்தமானவை. இங்கே வனவளத் திணைக்களத்தினர் இவ்வாறு நடந்து கொள்கின்றனர். இவைகள் தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி ஆவன செய்ய வேண்டும் - என்றார்.
(ஜ - 101)



செக்குடியரசில் உள்ள மிருகக் காட்சிச் சாலை ஒன்றில் உள்ள காண்டாமிருகங்கள் சிலவற்றின் கொம்புகள் நிர்வாகத்தால் வெட்டப்பட்டுள்ளன. காண்டாமிருகத்தின் அபாயத் தன்மையைக் குறைப்பதற்காகவே இந்த நடவடிக்கை என்று மிருகக் காட்சிச் சாலையின் நிர்வாகம் தெரிவித்துள்ள போதிலும் குறித்த நடவடிக்கைக்கு எதிராக மிருகநல ஆர்வலர்களால் குரல்கொடுக்கப்படுகிறது. (ம)

# அல் பக்தாதியின் விரைவில் முடி

## ரெக்ஸ் டில்லர்சன் ஆணித்தர

வொஷிங்டன். மார்ச் 25

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அல் பக்தாதியின் ஆட்டம் விரைவில் முடிவுக்கு வரும் என்று அமெரிக்காவின் அயலுறவுத்துறை அமைச்சர் ரெக்ஸ் டில்லர்சன் தெரிவித்தார்.

உலகின் பொது எதிரியாக உருவெடுத்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பைஒழிப்பது தொடர்பாக 68 நாடுகளைக் கொண்ட மிகப்பெரும் கலந்தாலோசனைக்கூட்டம் அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் அண்மையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே டில்லர்சன் இவ்வாறு தெரிவித்தார்.



ஐ.எஸ். ஆயுதக் குழுவின் துணைத்தளபதிகள் அனைவரும் கொல்லப்பட்டு விட்டனர். குறிப்பாக பெல்ஜியத்தின் பிரசல்ஸ் நகரில் நடந்த தாக்குதலில் மூளையாக செயற்பட்டவரும் சாகடிக்கப்பட்டுவிட்டார். எந்த நேரத்திலும் அந்த அமைப்பின் தலைவனான அல் பக்தாதி கொல்லப்பட்டு விடுவார். அதற்காக எமது படைகளும் ஈராக்கின் படைகளும் இணைந்து செயலாற்றி வருகின்றன என்று டில்லர்சன் மேலும் தெரிவித்தார்.



ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக்கைப்பற்றிஅவற்றைஇணைத்து அது ஒரு தனி இஸ்லாமிய நாடு என்று (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) பக்தாதி அறிவித்திருந்தார். ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரும் முக்கிய வர்த்தக நகருமான மோசூலும் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் பிடியிலேயே இருந்தது. அதனை மீட்கும் போர் தற்போது ஆரம்பித்து நடைபெற்று வருகிறது. மோசூலின் கிழக்குப் பகுதி மீட்கப்பட்டு விட்டாயிற்று. மேற்கு மோசூலின் பாதிக்கு மேற்பட்ட பகுதிகள் தற்போது அரச படையிடம் வந்துள்ளன. பக்தாதி மோசூல் நகரிலேயே உள்ளார்.

அவர் தப்பிச் செல்ல
டுள்ளார் என்று முன்
குறிப்பிடத்தக்கது.

# காஷ்மீரில் அமைதிகாண இந்தியாவை அழைக்கிறது பாகிஸ்தான்

இஸ்லாமபாத், மார்ச் 25

காஷ்மீர் விவகாரத்தில் இணக்கம் காண்பதற்கு இந்தியாவுக்கு அழைப்பு விடுத்துள்ளது பாகிஸ்தான். பாகிஸ்தானின் தேசிய தினத்தில் வைத்தே இந்த அழைப்பு விடுக்கப்பட்டது.

பாகிஸ்தானின் தேசியதினம் இஸ்லாமபாத் நகரில் நேற்றுமுன்தினம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றிய பாகிஸ்தான் ஜனாதிபதி மமூன் ஹூசைன் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தின் படி இந்தியாவுடன் பேச்சுவார்த்தை மூலம் காஷ்மீர் பிரச்சினையில் தீர்வு காணத் தயாராக உள்ளோம். ஜம்மு-காஷ்மீர் மக்களுக்கு நீதி கிடைக்க பாகிஸ்தான் தொடர்ந்து துணை நிற்கும். காஷ்மீர் பிரச்சினையில் அமைதி ஏற்படுத்த உலக நாடுகள் தங்களது பங்களிப்பை வழங்க வேண்டும். பாகிஸ்தான் பல ஆண்டுகளாக தீவிரவாதத்துக்கு எதிராக போரிட்டு வருகிறது. பாகிஸ்தான் மக்கள் தற்போது முன்பைவிட பாதுகாப்பாக உள்ளனர். இதற்காக பாதுகாப்புப் படைகள் தியாகங்களை செய்துள்ளன என மமூன் மேலும் தெரிவித்தார். (ம)





# இன்னும் ஆறு மாதத்தில் முதல்வராவார் ஸ்டாலின்

## துரைமுருகன் கணிப்பின்படி

சென்னை, மார்ச் 25

தி.மு. கழக செயல்தலைவரும் தமிழக சட்டசபையின் எதிர்கட்சித் தலைவருமான ஸ்டாலின் இன்னும் ஆறு மாதங்களில் முதல்வராவார் என்று தி.மு. கழகத்தின் முதன்மைச் செயலாளர் துரைமுருகன் தெரிவித்தார்.

சென்னை - ஆர்.கே. நகரில் இடைத் தேர்தல் நடைபெறவுள்ளதை அடுத்து அந்த நகரில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே துரைமுருகன் இவ்வாறு தெரிவித்தார்.

ஆர்.கே. நகர் தொகுதியில் இதற்கு முன்பு முன்னாள் முதல்வர் ஜெயலலிதா வெற்றி பெற்றிருந்தார். அவர் சாவடைந்ததால் இடைத்தேர்தல் வந்துள்ளது. ஜெயலலிதா இதற்கு முன்பு பர்கூரிலும், சிறிரங்கத்திலும் போட்டியிட்டார். அவர் முதல் அமைச்சரான பிறகும் அந்த தொகுதிகள் முன்னேற்றம் அடையவில்லை.

ஜெயலலிதா சாவடைந்த 3 மாதத்தில் அ.தி.மு.க. மூன்றாக உடைந்து விட்டது. மேலும் கட்சியின் இரட்டை இலைச் சின்னம் முடக்கப்பட்டுள்ளது. அ.தி.மு.க. கட்சிப் பெயரையும் தேர்தல் ஆணையம் முடக்கி விட்டது.

தமிழ்நாட்டில் இன்னும் 6 மாதத்தில் ஆட்சி மாற்றம் ஏற்படும். தி.மு.க. செயல் தலைவர் மு.க. ஸ்டாலின் 6 மாதத்தில் முதலமைச்சர் ஆவது உறுதி. அதற்கு அச்சாரம்தான் ஆர்.கே. நகர் தொகுதி இடைத்தேர்தல். இதில் வெற்றி பெறுவதன் மூலம் தி.மு.க. நிலை உயரும் என துரைமுருகன் மேலும் தெரிவித்தார். (ம)

# எகிப்தில் ஐ.எஸ். தாக்குதல் 12 சிப்பாய்கள் உயிரிழப்பு

கெய்ரோ, மார்ச் 25

எகிப்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கு எதிரான தேடுதல் வேட்டையின்போது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களில் 12 சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

எகிப்தின் மத்திய சினாய் பகுதியில் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் பதுங்கியிருக்கின்றனர் என்று வெளியான தகவலை அடுத்து அந்த இடத்தை இராணுவம் சுற்றிவளைத்து சோதனை செய்தது. இதன்போது ஆயுததாரிகளுக்கும் சிப்பாய்களுக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கிச் சமரில் 12 சிப்பாய்கள் சாவடைந்தனர். 15 ஆயுததாரிகளும் கொல்லப்பட்டனர் என்று எகிப்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# செலவு கூடியது சிங்கப்பூர் நகரம்

சிங்கப்பூர், மார்ச் 25

உலக அளவில் அதிக செலவினம் கூடிய நகரமாக சிங்கப்பூர் பட்டியலிடப்பட்டது.

உலக அளவில், குறைந்த செலவினம் மற்றும் கூடிய செலவினம் உள்ள நகரங்களை எக்கனாமிஸ்ட் இன்டெலிஜென்ஸ் யூனிட் என்ற நிறுவனம் பட்டியலிட்டது.


செலவினம் கூடிய நகர்களின்



பட்டியலில் சிங்கப்பூர் முதலிடம் பிடித்தது. இந்த வரிசையில் ஹொங்கொங் இரண்டாவது இடத்திலும், சூரிச் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

நான்கு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே, டோக்கியோ, ஒசாகா, சியோல், ஜெனிவா, பரிஸ், நியூயோர்க், கோபன்ஹேகன் ஆகிய நகர்கள் உள்ளன. (ம)


ன் கதை
டிவுறும்
தரம்


பக்தாதி


டில்லர்சன்

ச் செல்ல இயலாதவாறு சுற்றிவளைக்கப்பட் றாறு முன்னதாக செய்திகள் வெளியாகியமை க்கது. (ம)

# 300 சிறுவர்களைக் காவுவாங்கிய கப்பல் தூக்கி நிறுத்தப்பட்டது



சியோல், மார்ச் 25

300 சிறுவர்கள் உட்பட 304 பேரை காவு வாங்கிய தென்கொரியக் கப்பல் பொதுமக்களின் கோரிக்கைக்கு ஏற்ப கடலுக்கு அடியில் இருந்து மீண்டும் தூக்கி நிறுத்தப்பட்டது.

தென்கொரியாவில் மாணவ, மாணவிகள் உல்லாசப்பயணம் மேற்கொண்ட கப்பலொன்று, ஜிண்டோ தீவில் கடந்த 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி மூழ்கி விபத்துக்குள்ளானது. இதில் 304 பேர் சாவடைந்தனர். அவர்களில் 300 பேர் குழந்தைகள். இந்த சோகத்தில் இருந்து குழந்தைகளின் பெற்றோர் இன்னும் மீள முடியாமல் தவிக்கின்றனர். 6 ஆயிரத்து 825 தொன் எடையுடைய அந்த கப்பல், கடலுக்கு அடியில் மூழ்கியது. ஆனால் இந்தக் கப்பலை தூக்கி நிறுத்தி மீட்க வேண்டும் என்ற கோரிக்கை அங்கு வலுத்தது. இதையடுத்து அதற்கான நடவடிக்கையை அந்த நாட்டு அரசு மேற்கொண்டது.

அதன் விளைவாகக் கடுமையான முயற்சிக்குப்பின்னர் அந்த கப்பல் தற்போது தூக்கி நிறுத்தப்பட்டுள்ளது. இந்த கப்பல் இன்னும் 2 வாரங்களில் துறைமுகத்துக்கு கொண்டு வந்து நிறுத்தப்படும் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. சாவடைந்த சிறுவர்களின் குடும்பத்தினர் கப்பலை பார்வையிட அனுமதிக்கப்படுவார்கள். (ம)

## ஆர்.கே. நகரில் சூடு பிடிக்கிறது தேர்தல் களம்

சென்னை, மார்ச் 25

சென்னை - ஆர்.கே. நகரில் தேர்தல் பரப்புரைகள் மற்றும் நகர்வுகள் மிகவும் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளன என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆர்.கே. நகரில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். அவரது சாவை அடுத்து அங்கு அடுத்த மாதம் இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது. தி.மு. கழகத்தின் சார்பில் மருதுகணேஸ் போட்டியிடுகிறார். அ.தி.மு. கழகம் மூன்றாக உடைந்து தீபா, தினகரன், மதுசூதனன் ஆகியோர் போட்டியிடுகின்றனர். தேர்தல் பரப்புரைகள் தற்போதிருந்தே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தினகரனுக்கு தொப்பி சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது. தினகரனும் அவரின் ஆதரவாளர்களும் தொப்பியுடன் சென்று வாக்குச் சேர்க்கத் தொடங்கியுள்ளனர். மதுசூதனன் மற்றும் தீபா ஆகியோரும் இன்று முதல் தீவிர பரப்புரையில் ஈடுபடவுள்ளதை உறுதிப்படுத்தியுள்ளனர். (ம)

# மத்திய தரைக்கடலில் மூழ்கின படகுக 200 மேற்பட்ட அகதிகள் சாவு என அச்ச

உரோம், மார்ச் 25

மத்திய தரைக்கடல் பகுதியில் இரு வேறு படகுகள் கடலில் மூழ்கி விபத்துக்குள்ளானதில் 200 மேற்பட்ட அகதிகள் சாவடைந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

ஈராக், சிரியா நாடுகளில் நடைபெற்று வரும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர் காரணமாகவும், சூடான், சோமாலியா, எத்தியோப்பியா, சிம்பாப்வே, ஆப்கானிஸ்தான், ஈரான், ஏமன் உள்ளிட்ட நாடுகளில் நிலவும் உள்நாட்டுப் போர்சூழல் மற்றும் வறுமை காரணமாகவும் பல்லாயிரக் கணக்கான மக்கள் லிபியாவுக்குச் சென்று அங்கிருந்து இத்தாலிக்கும் இத்தாலியின் கடல்பரப்பின் ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்கும் அகதிகளாகச் செல்கின்றனர். அவ்வாறு கிட்டத்தட்ட 200 இற்கும் மேற்பட்ட அகதிகளுடன் செல்ல எத்தனித்த இரு படகுகள் நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளானதில் 200 இற்கும் மேற்பட்டவர்கள் சாவடைந்திருக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. 5 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. ஏனையவர்கள் நீண்டநேரமாகியும் மீட்கப்படாததை அடுத்து இந்த அச்சம் வெளியிடப்பட்டது.



ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் அகதிகளின் எண்ணிக்கை இது வரை 25 லட்சத்தை எட்டியுள்ளது. கடந்த வருடம் மட்டும் கிட்டத்தட்ட 6 ஆயிரம் அகதிகள் இத்தாலிக் கடற்பரப்பில் பாதுகாப்பற்ற பயணங்கள் காரணமாகச் சாவடைந்துள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் முன்னைய அறிக்கையொன்று சுட்டிநிற்கிறது. (ம)





பிரிட்டன் நாடாளுமன்றம் அருகே நடத்தப்பட்ட தாக்குதலில் சாவடைந்தவர்களுக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு நேற்று அஞ்சலி செலுத்தினர். தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றது. இது ஓர் இஸ்லாமியப் பயங்கரவாதத் தாக்குதல் என்பதால் முஸ்லிம்களுக்கு எதிரான குரல் வலுக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டிருந்த போதிலும் அஞ்சலியில் கலந்துகொண்டவர்கள் முஸ்லிம்களுக்கு தமது ஆதரவைத் தெரிவித்தனர். அந்த நாட்டின் தேசியக் கொடிகள் பல இடங்களில் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டன. (ம)

# பிரிட்டன் தாக்குதலுக்கு பொறுப்பேற்றது ஐ.எஸ்.

பிரிட்டன் நாடாளுமன்றத்துக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலுக்கு ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றது.

லண்டனில் உள்ள பிரிட்டன் நாடாளுமன்றம் அருகே கடந்த புதன்கிழமை மர்மநபர் ஒருவர் மக்கள் கூட்டத்தினுள் காரைச் செலுத்தியதோடு பொலிஸ் அதிகாரி ஒருவரை கத்தியால் குத்தி கொலை செய்தார். இந்தத் தாக்குதலில், தாக்குதலை நடத்திய நபர் உட்பட 5 பேர் சாவடைந்தனர். கிட்டத்தட்ட 40 பேர் காயமடைந்தனர்.

தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் இது ஒரு தீவிரவாதத் தாக்குதல் என்பது தெரிய வந்தது. இந்த நிலையில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு நேற்றுமுன்தினம் தாக்குதலுக்குப் பொறுப்பேற்றது (ம)



# உருவாகும் முதலீட்டுச் சார்புகளை பன்னாடுகளும் பயனுறுதியாக்கிக் கொள்ளவேண்டும்

## நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க கருத்து




போர் முடிவுறுத்தப்பட்டதன் பின்பான காலத்தை சாதகமாக்கிமக்கள்மயப்பட்டதான அபிவிருத்தியையும் சுபீட்சத்தையும் நோக்கிச் செல்லும் இலங்கையில் உருவாகும் முதலீட்டுச் சந்தர்ப்பங்களை நழுவ விடாது பன்னாடுகளும் பயனுறுதியாக்கிக் கொள்ள வேண்டும் என்பதான கருத்துக்கூறல் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்குள்முதலீட்டாளர்களைஈர்க்கும்வகையிலான இலங்கை முதலீட்டு மாநாட்டில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றும் போதே நிதி அமைச்சர் பன்னாட்டு முதலீட்டாளர்களிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளதாக கூறப்படுகிறது.

அங்கு அவர் மேலும் கருத்துரைக்கையில்,

"நீண்ட நாள்களுக்கு பின்னர் நாடு உயிரோட்டமுள்ளதான பொருளாதார மறுமலர்ச்சியை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையிலே நாட்டினுள் உருவாகும் முதலீட்டு வாய்ப்புக்களை பன்னாடுகளும், முதலீட்டாளர்களும் பயனுறுதியாக்கிக்கொள்ள வேண்டும்.

இலங்கைக்குள்முதலீடுசார்நடவடிக்கைகளைமுன்னெடுத்துச் செல்வதற்கான ஆர்வத்தைக் கொண்டுள்ள முதலீட்டாளர்களுக்கு ஏற்கனவே பல்வேறு ஊக்கப்படுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. அதே வேளை அரச மற்றும் தனியார் கூட்டுத் தொழில் முயற்சியில் இரண்டு தரப்பினருக்கும் நன்மை பயக்கும்விதமானநடைமுறைச்சாத்தியமானதிட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தவிர, இலங்கையின் அரச நிறுவனங்கள் பலவற்றை எதிர்காலத்தில் பங்குச்சந்தையில் பட்டியலிடுவதற்கானமுன்னாயத்தநடவடிக்கைகள்எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக ஹயட் ஹோட்டல் உள்ளிட்டதான அரசநிறுவனங்கள் பல அடுத்துவரும் மூன்று மாத காலப்பகுதியினுள் பங்குச்சந்தையில் பட்டியலிடப்படவுள்ளன" - என்றார்.

இந்தமாநாட்டிலேஏறத்தாழ 200 இற்கும்மேற்பட்டதான உலகின் முன்னணி நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் முதலீட்டாளர்கள் கலந்துகொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

''கொழும்பில் உருவாகி வருவதான பன்னாட்டு நிதி நகரம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதுடன் மேலும் பல முதலீட்டு வாய்ப்புக்கள் உருவாவதற்கான சாத்தியப்பாடுகள் உருவாகியுள்ளது.''

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க



# 'வண்ஸ் ஸ்ரெப் குளோசர்' ஊக்குவிப்புத் திட்டம்

## எச்.எஸ்.பி.சி. வங்கி அறிமுகப்படுத்தியது.

புத்தாண்டில் வாடிக்கையாளர்கள் தங்களது கனவுகளைநனவாக்கிக்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் விதமான 'வண்ஸ் ஸ்ரெப் குளோசர்' ஊக்குவிப்புத் திட்டத்தைஎச்.எஸ்.பி.சி. வங்கி அறிமுகப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




இதன்படிஎச்.எஸ்.பி.சி. கடன் அட்டைக்கு வாடிக்கையாளர்கள் விண்ணப்பிப்பதன் மூலம் உலகளாவிய நன்மைகளையும் சலுகைகளையும் பெறுவதற்கானவாய்ப்புகள்கிடைக்கப் பெற்றுள்ளன.

அன்றாட அத்தியாவசியப் பொருள்களின் கொள்வனவு முதல் ஆடம்பர சாதனங்களின் கொள்வனவு வரை, குதூகல பொழுதுபோக்குகள் முதல் உல்லாசமான விடுமுறைப் பயணங்கள்வரை, சகலதேவைகளையும் இலகுவாகவும் செலவுச் சுருக்கமாகவும் நிறைவேற்ற எச்.எஸ்.பி.சி. கடன் அட்டைகள் உதவுமெனவும் வங்கி மேலும் தெரிவித்துள்ளது.

கடன்அட்டைகளைவைத்திருப்பவர்கள் பல்வேறு துறைகளிலும் ஏராளமான சேவைகள், விசேடசலுகைகள்மற்றும்பெறுமதிச் சேர்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியும். நீண்ட காலமாகக்கனவுகண்டஇடத்திற்குப் பயணத்தை மேற்கொள்ள விரும்பினால்அல்லதுஉங்கள் உடல் நலத்தைப் பரிசோதிக்க விரும்பினால்எச்.எஸ்.பி.சி.கடன் அட்டையைப் பயன்படுத்திக் கொள்ளவும் குறிப்பாக செலவிடும் பணத்தை வட்டி எதுவுமற்ற 12 மாத கால மாதாந்தத் தவணைகளில் மீள் செலுத்த முடியுமெனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

ஜனவரி மாதத்தின் ஒவ்வொரு வார இறுதியிலும் அன்றாட அத்தியாவசியப் பொருள்களை கீல்ஸ் சுபரில் ஆயிரத்து 500 ரூபாய்க்கு மேற்பட்ட தொகைக்குக் கொள்வனவு செய்யும் போது 20 பொருள்களுக்கு 20 வீதவிலைக்கழிவைப்பெற்றுக்கொள்ளமுடிவதாகவும். குறிப்பாக மார்ச் மாதத்தின் இறுதி வாரக் காலப்பகுதி வரை இந்த சலுகைகள் வழங்கப்படவுள்ளதுடன். ஒவ்வொரு வாரமும் ஒரு வெற்றியாளர் தெரிவு செய்யப்பட்டு வருகின்றமை நோக்கத்தக்கது.

இதுதொடர்பில்கருத்துரைத்துள்ள எச்.எஸ்.பி.சி. சிற்றளவு வங்கிச்சேவை மற்றும் செல்வ முகாமையின்தலைவர்நிலந்த பஸ்தியன்,

"எமது வாடிக்கையாளர்கள் தமது அபிலாஷைகளையும் விருப்பங்களையும்இலகுவாக நிறைவேற்றுவதற்கு உதவ வேண்டுமென நாம் எண்ணினோம். அதன்காரணமாகவே 'வண்ஸ் ஸ்ரெப் குளோசர்' என்ற ஊக்குவிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம். நாம் வழங்கும் கடன் அட்டைகள், பிரத்தியேகக் கடன்கள் போன்றதான வசதிகளைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்கள்தங்களது அபிலாசைகளை நிறைவேற்றிக்கொள்ளவேண்டும் என்பதே எமது நோக்கமாகும்" என்றார்.

# மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்கள் அதிகரிப்பு

*நிதிச் சபை தீர்மானம்*

நிதிக் கொள்கைகளின் பரிசீலனைக்கு அமைவானதாக இலங்கை மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதக் கட்டணங்களை அதிகரிப்பதற்கு நிதிச் சபை தீர்மானித்துள்ளதான தகவல் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படிஸ்ரண்டிங்டிபோசிட் பசிலிட்டி றோற் (எஸ்.டி.ஆர்.எவ்) 7 வீதத்தில் இருந்து 7.25 வீதமாகவும், ஸ்ரண்டிங் லெண்டிங் பசிலிட்டி றோற் (எஸ்.எல்.எவ்.ஆர்) 8.50 வீதத்தில் இருந்து 8.75 வீதமாகவும்அதிகரிக்கப்பட்டுள்ளது. தவிர சற்றியூற்றரி றிசேவ் றேசியோ (எஸ்.ஆர்.ஆர்) 7.5 வீதம் என்ற அடிப்படையில் மாற்றமின்றி இருக்குமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# வேகமான இணைப்பை வழங்கும் வைபை

*அகச்சிவப்புக் கதிர்களால் இயங்குநிலை பெறும் புதிய தொழில்நுட்பம்*

தொழில்நுட்பங்களின் விவேகம் மனித அறிவோடு முட்டிமோதி வெற்றிகொள்ளும் தாற்பரியங்கள் புதியவையாக மிளிர்கின்றன. தேவைகளோடு ஒன்றித்து பயனுறுதி அடைகின்றன. அந்தவகையிலேதற்போதுபாவனையிலுள்ளதானவைபை இணைய இணைப்பைவிடவும் நூறு மடங்கு வேகமான இணைப்பை வழங்குவதான புதிய தொழில்நுட்பத்தினை நெதர்லாந்து ஆய்வாளர்கள் உருவாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி வேகமான இணைப்பை வழங்குவதான அகச்சிவப்புக் கதிர்களால் இயங்குநிலை பெறும்வைபைசெயலியின்புதியதொழில்நுட்பத்தை கண்டுகொண்டுள்ளனர். குறிப்பாக வைபைஇணையஇணைப்பில்உள்ளவேகக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையிலேயே நெதர்லாந்தைச் சேர்ந்த இந்தோவன் தொழில்நுட்ப பல்கலைக்கழக ஆய்வாளர்கள் மேற்படிபரந்த ஆய்வினை மேற்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்தப்புதியதொழில்நுட்பத்தின்மூலமாகவினாடிக்கு 40 ஜி.பிக்கும் அதிகமான வேகத்துடன் இயங்குநிலை பெறும் இணைய இணைப்பினைப் பெற முடிவதாக அந்த ஆய்வில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று வைபை இணைப்பில் அதிக எண்ணிக்கையிலான இலத்திரனியல் சாதனங்கள் இணைப்புப் பெறும்போது வேகம் குறைவடைந்து போவதை இதன் மூலம் தவிர்த்துக்கொள்ளமுடியுமென ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்புதிய தொழில்நுட்பத்தின் மூலம் உருவாக்கப்படுவதானவைபை இணைப்பில்இணைக்கப்படும் ஒவ்வொரு புதிய சாதனத்துக்கும் பிரத்தியேகமான ஒளிக்கற்றை மூலம் இணைப்புப் பெறப்படும் காரணங்களால் இணைப்பின் வேகம் குறைந்து போக வாய்ப்பில்லைஎன்பதானதகவல்களும்அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# தோள்சாய்ந்து மகிழ்ந்திடுங்கள் பெண்களே!

உடுவிலூர்கலா

வாசலிடைக் கோலமதில்
வனப்பினை சேர்த்திடும்
வனிதையரே உணர்ந்திடுவீர்
உம் வாழ்வின் வசந்தங்களை
வரமாய வரைபடமாய்
வரைந்தனன் இறைவன் கைகளில்
வலுச்சேர்த்து வளமாக்கி
வசந்தமாய் வாழ்ந்திடுவீர்

பெண்களின் வாழ்க்கை என்பது கண்ணீரும் வேதனையும் நிறைந்ததாகவே உள்ளது. எதிர்பாலின ஆதிக்கம் ஒருகாரணமாய் இருந்தாலும், பலசந்தர்ப்பங்களில் பெண்களேதமது கண்ணீருக்கும் காரணமாகின்றனர். பெண் என்பவள் தியாகச் செம்மல். குறிப்பறிந்து செயற்படுவாள், தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கும், குடும்பத்துக்கும், சமுதாயத்துக்கும் தன்னிகரில்லா சேவை செய்பவள். இவ்வாறு பெண்ணின்பெருமையை அடுக்கிக்கொண்டேபோகலாம். பெண் குடும்ப வாழ்வில் பல வித துன்பங்களை சந்திக்கிறாள். மனதுக்குள்புலம்புகிறாள் உதட்டில்புன்னகையும், உள்ளத்தில் வேதனையுமாக நடைப்பிணமாக வாழ்கிறாள். இவையெல்லாம் நியாயமானதா? பெண்ணின்கண்ணீர், வேதனைகளுக்குகாரணங்கள்பலவற்றைச்சொன்னாலும், இன்றுபெண்களின் கண்ணீருக்குப் பெண்களே காரணமாகின்றனர் என்பதே உண்மை.

பெற்றோர் அரவணைப்பில் வாழ்ந்த பெண் பருவமதைஅடைந்ததும், வாழ்க்கைத்துணையுடன்வாழ முற்படுகிறாள். இங்குகுடும்பம்என்கிறகட்டமைப்பின் உறுதிமிக்க தூணாகிறாள். கணவன் என்னும் ஆணின் இன்பதுன்பங்கள், சுகதுக்கங்கள் யாவையும்பங்கிட்டுஅனுபவிக்கும்மனப்பக்குவத்தைஅடைகிறாள். அதேபோல், கணவனைபத்துமாதம்சுமந்து பெற்றுவளர்த்தஅன்னைக்குமருமகளாகவும், கணவனுடன் உடன்பிறந்தவர்களுக்குநல்லமைத்துனியாகவும் மாற்றம் பெறுகிறாள். ஒரு பெண்ணின் மகத்துவம்என்பதுபிறந்தவீட்டுக்கும், புகுந்தவீட்டுக்கும்பெருமைதேடித்தருவதில்தான் உள்ளது. உறவுகள் தொடர்கதை அல்லவா... திருமணம் என்கிற ஆத்மார்த்தமான உறவு தருகின்ற நல்லுறவுகளை அன்போடு அனுசரித்து நடக்க வேண்டியது ஒவ்வொரு பெண்ணினதும் கட்டாய கடமையாகும். திருமணபந்தத்தில்இணையும்பெண்புகுந்தவீட்டின் புதுவரவு. இந்தப்புதுவரவை மனைவியாக, மருமகளாக, மைத்துனியாக ஆசையோடுஎதிர்பார்த்து வரவேற்கும் புகுந்தவீட்டில் கொலுசின் ஒலி அழகாக ஒலிக்க வேண்டும்.

> பெண்ணின் பெருமை உறவுகளை பிரித்துப்பார்ப்பதில் அல்ல. உறவுகளை அரவணைத்து மேம்படுத்துவதில் தான் அடைக்கலம் கொள்கின்றது. மாமியை வஞ்சிக்கின்ற. வேதனைப்படுத்துகின்ற பெண்கள் தமது வாழ்க்கைத்துணையை பெற்றுத் தந்தவள் மாமி என்கிற நன்றி உணர்வோடு வாழவேண்டும்.

தாய்எப்போதும்தாயே. உடன்பிறப்புக்கள்எந்தநிலையிலும் உடன்பிறப்புக்களே. அதேபோல் மனைவி என்பவள்மனைவியே. பெற்றுவளர்த்ததாய், மரணபரியந்தம்துணையாகும்மனைவி, இதனை பெண் எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். தாயின் உறவுஎன்பதுதொப்புள்கொடிஉறவாகும். குருதியை பாலாக ஊட்டிய, பாசத்தை அரவணைப்பில் சுகமாக்கிய, மழலைமொழியில் மகிழ்ந்திருந்த உறவு என்பதை யாரும் மறந்துவிடலாகாது. அதேபோல், மனைவி என்பவள் நற்றுணையாக உடலாலும் உள்ளத்தாலும் இணைந்து வாழும் உன்னத பேறு பெற்றவள். திருமணத்தின்பின்பெற்றதாயை, உடன்பிறப்புக்களை பிரித்து கணவனை தம்வசமாக்கி மகிழும் பெண்களால் இன்று பல குடும்பங்கள் ஆட்டம் கண்டுள்ளன. தாயுள்ளங்கள் கண்ணீர் வடிக்கின்றன. உடன்பிறப்புக்கள் வலிசுமந்த மனங்களோடு வாழ்கின்றன.

பெண்ணின்பெருமைஉறவுகளைபிரித்துப்பார்ப்பதில் அல்ல. உறவுகளை அரவணைத்து மேம்படுத்துவதில் தான் அடைக்கலம் கொள்கின்றது. மாமியை வஞ்சிக்கின்ற. வேதனைப்படுத்துகின்ற பெண்கள் தமது வாழ்க்கைத்துணையை பெற்றுத் தந்தவள் மாமி என்கிற நன்றி உணர்வோடு வாழவேண்டும். அதேபோல, ஒருதாய்வயிற்றில்பிறந்தசகோதரசகோதரிகளை சதிசெய்து பிரிக்க நினைப்பதும் பாவமான காரியம். அறிவார்ந்தநிலையில் நாம் சிந்தித்தால் ஒவ்வொரு உயிருக்கும் மிகப் பெரிய உறவு என்பது பெற்றதாயும் உடன்பிறப்புக்களுமே. காரணம் இந்த உலகை காட்டிய சுட்டுவிரல். தாய் அல்லவா? ஒரேகருவறையில்பிறந்தவர்கள் அல்லவா? இந்தகுருதி உறவைபிரித்துப்பார்ப்பது என்பது எவ்வளவு கொடூரமானது?

இன்று பல குடும்பங்களில் நிகழும் கீழ்த்தரமானசெயல்மாமி, மருமகள் சண்டை. மாமியை கொடுமை செய்யும் மருமகளாலும், மருமகளைக் கொடுமை செய்யும்மாமியாலும் அப்பாவி ஆண்கள் இருதலைக்கொள்ளியாய்வாடும்நிலைஉருவாகியுள்ளது. மாமியை தாயாக நினைக்காத மருமகளாலும், மருமகளைதன்மகளாகநினைக்காதமாமிமாராலும் சந்தோசங்கள் கையசைத்து விடைபெறுகின்றன. ஒவ்வொரு பெண்ணுக்கும் மாமி இன்னொரு தாய் மட்டுமல்ல, மரணபரியந்தம் தொடர்கின்ற உறவை துணையாகபெற்றுத்தந்த உத்தமிஎன்பதைமறந்து விடலாகாது. அதேபோல், மருமகள் என்பவள் இன்னொரு பெண். பத்துமாதம் சுமந்து பெற்ற பிள்ளை மட்டுமல்ல, தன் மகனோடு வாழவந்தவள் என்கிற உண்மையை எப்போதும் சிந்திக்கவேண்டும்.

அன்பான பெண்களே, பெண்மை அளப்பரிய தியாகங்களின் காரணகர்த்தா. பெண்மை வியாபிக்கும் இடமெங்கும் தன் சக்தியை அன்பாக, பாசமாக, அரவணைப்பாக, விட்டுக்கொடுப்பாக பட்டுத்தெரிகிறது. ஒரு பெண்ணின் சக்தி வழங்கும்காத்திரமான இடம்குடும்பம்என்னும்கோயிலே மாமியைதுன்புறுத்தும்போது சற்றுச் சிந்தியுங்கள் எந்தநிலையில் பெற்றவர்களையோ, உடன் பிறப்புக்களையோ பிரித்துப்பார்த்து மகிழ்ச்சியடையாதீர்கள். ஐயிரண்டுமாதங்கள்தன்வயிற்றில்சுமந்ததாயைபிரித்துப்பார்க்கலாமா? ஒரே கருவறையில் குடியிருந்தவர்களைச் சதி செய்து பிரிக்கலாமா? என்பதை மனச்சாட்சியைக்கேட்டுக்கொள்ளுங்கள். மருமகளை இன்னொருபெண்ணின் மகள் என்ற நினைப்பை முதலில் விடவேண்டும். மகனுக்கு சரியாக ஈடுஇணையாக மருமகளைநினைக்கும்மாமியாரால்மகனின்சந்தோசம் தக்கவைக்கப்படுகிறது என்பதைப்புரிந்துகொள்ளுங்கள்.

ஆக, மருமகள்களே மாமியாரின் தோளில்சாய்ந்து மடியில் உறங்குங்கள் மாமியரே, மகள்களைப்போல்கட்டியணைத்து முத்தமிட்டுமருமகள்களை ஆசீர்வதியுங்கள், வசந்தம்உங்கள்வீட்டுவாசலில்மண்டியிடுவதைஉணர்வீர்கள். தென்றலும் உங்கள் கதவுகளைத் தட்டிச் செல்லும்.



# கலைஞர்களுக்கு "கலைமாமணிவிருது"

திருமதி மலர்விழி கனகசபை

யாழ். மாவட்டத்தின் கலை, கலாசார உயர்ச்சிக்காகவும், மக்களின் கலாசார மேம்பாட்டுக்காகவும் அர்ப்பணிப்போடுசேவையாற்றிய மக்கள் நலன் பேணும் கலை நேயமிக்கவர்களை கௌரவிக்கும் முகமாக யாழ்.மாவட் தேசோதயமும்,சர்வோதயமும்இணைந்து நடத்திய நிகழ்வு கடந்த மாதம் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். சர்வோதய மண்டபத்தில்காலை 9 மணிக்கு லயன் கலாநிதி நா.தனேந்திரன் (ஜே.பி) தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

காலை 9 மணியளவில் முதன்மை விருந்தினராக இலங்கைக்கான இந்தியத் துணைத்தூதுவர் ஏ.நடராஜனும் ஏனைய விருந்தினர்களும் மண்டப வாயிலிருந்து மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டார்கள். முதல் நிகழ்ச்சியாகத் தமிழ்த்தாய் வாழ்த்தை திருமதி மலர்விழி கனகசபை, (உதவிக் கல்விப்பணிப்பாளர்) மற்றும் செல்வி அ.தர்சினி ஆகியோர் இசைத்தார்கள். அடுத்ததாக சமூகதிலகம் லயன், சி.யுகேந்திராவே வரவேற்புரை வழங்கினார். அதன்பின்னர் சிறப்பு விருந்தினர்கள், முதன்மை விருந்தினர் உரைகள் இடம்பெற்றன. புரட்சித்தலைவர் எம்.ஜி.இராமச்சந்திரனின் நூறாவது பிறந்த நாளையொட்டி இந்த நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. பொன்மனச்செம்மலாகியஎம்.ஜி.ஆர் மக்கள் மனதில் என்றென்றும் வாழ்கிறார் என்றும், கண்டி மாநகரில் பிறந்து இந்தியாவில் மிகச்சிறப்பான முறையில்வாழ்ந்துபலபடிப்பினை ஊட்டும் படங்களிலும் புரட்சிகரமாக நடித்தும் உலகப்புகழ்பெற்ற உத்தமர் என்றும் அதனூடாக அரசியலில் கால்பதித்து தமிழக நாட்டுக்கும், எமது நாட்டுக்கும் அளப்பரிய சேவை செய்தவர் எனவும், எல்லோருடைய மனதைக் கவர்ந்தவர் எனவும் ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. முத்துலிங்கம் தனது உரையில் குறிப்பிட்டார்.

முதன்மை விருந்தினர் மற்றும் சிறப்பு விருந்தினர்களின் உரையைத் தொடர்ந்து கலைஞர்கள் கௌரவிப்பு விழா ஆரம்பமானது. கலைஞர்கள் மாலைஅணிவிக்கப்பட்டு,நினைவுச்சின்னம்வழங்கி "கலை மாமணி விருது பாராட்டுப் பத்திரம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள், மிகவும் அமைதியாகவும், சிறப்பாகவும் விழா இடம்பெற்றது. நாட்டில் இலைமறைகாய் போல் வாழ்ந்து வரும் கலைஞர்களை தேடிக் கண்டுபிடித்து அவர்களுடைய கலைச் சேவைகளுக்குப் புத்துயிர் அளிக்கப்படல் வேண்டும். இப்பேற்பட்ட முதுபெரும் கலைஞர்கள் பாராட்டப்பட்டால் நாட்டில் அருகி வரும் பண்டைய காலக் கலைகள் புத்துயிர் பெறும். எமது சமூகமும் கலைகளும், கலாசாரமும்மேன்மைபெறும்எனவழிகாட்டிய தேசோதய, சர்வோதயதலைவர்களின்வழிகாட்டல்கள் மிக நேர்மையானது. அவர்களின் பணி எமது நாட்டில் மேன்மேலும் சிறக்க இனிமை கலந்த நன்றியுணர்வோடு நினைவு கூர்ந்திடுவோம் என்பதே இந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்களின் விருப்பமாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஆச்சரியப்படுத்தும் புதுடில்லியின் மாற்றம்

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் இந்தியா ஆழ்ந்த வேதனையையும் வலியையும் வெளிப்படுத்தியுள்ளது. இந்திய நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் உரையாற்றிய அந்தநாட்டின் அயலுறவுத்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ் இந்தக் கருத்தை வெளிப்படுத்தினார்.

போரின் போதும் சரி, போர் முடிவுக்கு வந்த பின்னரும் சரி உலக அரங்கில் போர்க்குற்றங்கள் தொடர்பில் குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்ட போதெல்லாம் கவசமாக இருந்து கொழும்பைப் பாதுகாத்து வந்தது புதுடில்லி. காங்கிரஸ் அரசைத் தொடர்ந்து நரேந்திரமோடி தலைமையிலான பாரதீய ஜனதாக்கட்சி அரசும் அந்தப் பாதையிலேயே பயணித்தது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மோடி ஆட்சிக்கு வந்ததும் இலங்கை தொடர்பான புதுடில்லியின் நிலைப்பாட்டில் மாற்றம் வரும் என்ற பெரும் எதிர்பார்ப்பு தமிழர்கள் மத்தியில் நிலவியது. ஆனால், அப்படி நடைபெறவில்லை. தமிழர்கள் பெரும் ஏமாற்றம் அடைந்திருந்தனர். இந்தியா தன் நலன்களுக்கு அப்பால் சென்று தமிழ் மக்களின் நலன் குறித்துச் சிந்திக்காது என்கிற கண்டனங்கள் வெகுவாக முன்வைக்கப்பட்டன.

இத்தகைய நிலையிலேயே சுஸ்மாவின் கருத்து தீடீரென வந்துள்ளது. இலங்கை தொடர்பில் கடந்த 7 வருடங்களில் இந்தியா வெளிப்படுத்தியிருக்கக்கூடிய ஆகக்கூடுதலான விமர்சனம் இதுவாகவே இருக்கமுடியும். சுஸ்மாவின் நேற்றைய கருத்தைத் தொடர்ந்து இந்திய ஊடகங்கள் சிலவும் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளன.

போர் முடிந்த பின்னரும் போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களைத் தண்டிப்பதற்கு இலங்கை அரசுகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சுஸ்மா நாடாளுமன்றத்தில் கூறியிருக்கிறார். அதிலும் ''ஆயுதங்கள் தரிக்காத தமிழர்களுக்கு எதிரான" என்று அவர் தெளிவாகக் குறிப்பிட்டுக் கூறியிருக்கிறார். உலகின் பிற பகுதிகளிலும் இதுபோன்ற மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றாலும் அங்கெல்லாம் போரின் பின்னர் நல்லிணக்கமும் பொறுப்புக்கூறலும் இடம்பெற்றிருக்கின்றன, ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் உலகின் அக்கறையை கொழும்பு மதிக்கவேயில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

2015இல் தற்போதைய கொழும்பு அரசு ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு இந்தியாவும் தீவிரமாகப் பங்களித்தது. எனினும் தற்போதைய அதன் போக்கு புதுடில்லி விரும்பும் வகையில் இல்லை என்பதையே சுஸ்மாவின் பேச்சு உணர்த்துகிறது. உலகின் அக்கறையை கொழும்பு மதிக்கவில்லை என்பதன் ஊடாக இந்தியாவின் அக்கறையையும் கொழும்பு மதிக்கவில்லை என்று மறைமுகமாக அவர் சாடியிருக்கிறார்.

அதற்கும் மேலே, ''இலங்கைத் தமிழர்களின் நலன்களைப் பாதுகாப்பதுதான் எங்கள் இலக்கு, நோக்கம். இதனை இரு வழிகளில் அடையலாம். ஒன்று பலவந்தமாகச் செயற்படுத்தல், மற்றையது நட்பு நாடு என்கிற ரீதியில் இணக்கத்தோடு நடந்துகொண்டு செயற்படுத்துவதற்குத் தூண்டுதல்'' என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். கொழும்பு இனியும் தமிழர்கள் பிரச்சினையைத் தீர்ப்பதில் அக்கறையோடு செயற்படவில்லை என்றால், அதனைப் பலவந்தப்படுத்தவும் புதுடில்லி தயங்காது என்று இதற்குப் பொருள் கொள்ள முடியுமா என்பது தெரியவில்லை என்றாலும், இது ஓர் எச்சரிக்கை என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.

மைத்திரி, ரணில் கூட்டு அரசும் பொருளாதார நலன்கள் என்று கூறிக்கொண்டு சீனாவின் பக்கம் அதிகம் சாய்ந்து வரும் பின்னணியில், சுஸ்மாவின் இந்த அதிருப்தி அல்லது எச்சரிக்கை இந்தியாவிடம் இருந்து வெளிப்பட்டிருக்கிறது. இதனை உதாசீனப்படுத்துவது கொழும்புக்கு அவ்வளவு நல்லதல்ல. அப்படிச் செய்வது விளைவுகளை மோசமாக்கும். அதற்கான வரலாறும் பாடமும் ஏற்கனவே இருக்கிறது.

அதேநேரத்தில் இந்தியாவின் அழுத்தமும் அக்கறையும் இன்றி ஈழத் தமிழர் பிரச்சினைக்கு ஒரு தீர்வு வராது என்பதும் தெளிந்த யதார்த்தம். ஆனால், தனது நலன்களைப் பாதுகாப்பதற்காக மட்டுமே புதுடில்லி ஈழத் தமிழர் பிரச்சினையில் அக்கறைப்படும் போக்குத்தான் எப்போதுமே பிரச்சினைக்குரியது. சீன எதிர்ப்பு அரசியலில் ஈழத் தமிழர்களைக் கறிவேப்பிலையாக்காமல் இருக்கவேண்டும் என்பதுதான் தமிழர்களின் வழிபாடு. உரிய தொருதீர்வு அடையப்படும் வரை கொழும்பு மீதான புதுடில்லியின் கடும் அழுத்தம் மிக அவசியம்.

# காற்றுப்போன பலூன் போன்ற நிலையில் கூட்டாட்சி அரசின் நிர்வாக முன்னெடுப்பு

சிங்கள மூலம் - மாகாம்புத்ர (மவ்பிம)
தமிழில் - வீ.எஸ்.ரீ



எவ்வளவுதான் குப்பையை மூடி மறைக்க முயன்றாலும், எவ்வாறோ அது வெளிக்கிளம்பவே செய்யும் என்ற முதுமொழிக்கு ஒப்ப, நல்லாட்சி அரசின் பொட்டுக்கேடுகள் பரகசியமாகி வெளிவந்த வண்ணமுள்ளன. ஒரு சில ஊடகங்கள் அத்தகைய விவரங்களை இருட்டடிப்புச் செய்ய முயன்றபோதிலும், மகிந்த அதற்கு இடமளிக்காது, அண்மைய நாள்களில் ஊடகங்களுக்கு அந்தத் தகவல்களை விரிவாக வழங்கி அரசினது வாயை இறுக மூட வைப்பித்துள்ளார்.

அரசின் தேசத் துரோக நடவடிக்கை தொடர்பான ஐந்து ஆவணச் சான்றுகள் குறித்து, மகிந்த நோக்கமெதுவுமின்றித் தகவல்களை வெளிப்படுத்தவில்லை. அதன் பிரகாரம், நல்லாட்சி அரசு, நாட்டு மக்களுக்கு வழங்கிய முக்கிய வாக்குறுதிகளான நிறைவேற்று அதிகார நடைமுறையை ஒழித்தல், தேர்தல் முறைமையை மாற்றியமைத்தல் என்பவற்றை ஒரு புறத்தில் ஒதுக்கி வைத்துவிட்டு, நாட்டின் புதிய அரசமைப்பு மற்றும் சட்ட நடைமுறைகளில் மாற்றங்களை மேற்கொண்டது. மகிந்தவினது கருத்துப்படி இவை பன்னாட்டுத் தரப்புக்களைத் திருப்திப்படுத்த மேற்கொள்ளப்படும் மற்றும் தெரிவிக்கப்படும் நல்லாட்சி அரசின் வெளிப்படுத்தல்களே.

இதன் பாரதூரமான ஆரம்பம், அமெரிக்க ஒபாமா நிர்வாகம் மற்றும் 2015ஆம் ஆண்டின் நல்லாட்சி அரசு என்பவற்றுக்கிடையேயான இணக்கப்பாட்டின் காரணமாக அமைந்ததெனலாம். குறித்த அந்த இணக்கப்பாடு காரணமாகவே இலங்கை பன்னாட்டு ரீதியில் சிறைப்பட நேர்ந்துள்ளது. இரகசிய இரகசியமாக அரசமைப்புச் சபையின் ஆறு உபகுழுக்களை முன்னிறுத்தித் தயாரித்த உத்தியோகபூர்வ அறிக்கையும் வெளியிடப்பட்டது. அத்தோடு ரணிலினது நல்லிணக்கம் தொடர்பான செயலணியின் அறிக்கையும் ஜனவரி மாதத்தில் வெளியாகியது. அதன் .தொடர்ச்சியாக ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகை இலங்கைக்கு .வழங்கப்பட வேண்டுமானால், இலங்கை ஐரோப்பிய ஒன்றியம் விதிக்கும் 48 நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்ற கட்டுப்பாடும் விதிக்கப்பட்டது. அதற்கும் மேற்கொண்டு, பயங்கரவாத ஒழிப்புத் தொடர்பான சட்டத்துக்குப் பதிலாக தலைமை அமைச்சர் பரிந்துரை செய்யும் புதிய சட்டவரைவு ஊடகங்களால் பிரபல்யப்படுத்தப்பட்டது.

> உயிர்களைத் தியாகம் செய்து போரை வெற்றி கொண்டு உருவாக்கிய சுதந்திரமான சூழலைத் தொடர்ந்தும் பாதுகாக்க வேண்டுமெனத் தெரிவித்து மகிந்த, நாடு முழுவதும் பயணம் செய்து பயங்கரவாதிகளுக்கு ஒருபோதும் தலையெடுக்க இடமளிக்கக் கூடாதென நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தி வருகிறார்

### பயங்கரவாதம் குறித்து எச்சரிக்கும் மகிந்த

உயிர்களைத் தியாகம் செய்து போரை வெற்றி கொண்டு உருவாக்கிய சுதந்திரமான சூழலைத் தொடர்ந்தும் பாதுகாக்க வேண்டுமெனத் தெரிவித்து மகிந்த, நாடு முழுவதும் பயணம் செய்து பயங்கரவாதிகளுக்கு ஒருபோதும் தலையெடுக்க இடமளிக்கக் கூடாதென நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தி வருகிறார். பயங்கரவாத ஒழிப்புச் சட்டத்தை நீக்கி, அதற்குப் பதிலாக கடும் இறுக்கமற்ற சட்டத்தை அறிமுகப்படுத்தி, மீண்டும் விடுதலைப் புலிகள் தலையெடுக்கத்தக்க சூழலை அரசு உருவாக்கப் போகிறதா? என மகிந்த வினாவெழுப்புவது வெறுமனே ஒப்புக்காக அல்ல. அரசின் இந்தப் புதிய யோசனையை வென்றெடுக்க அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் தரப்புக்களுக்கு மேலதிகமாக, முன்னோக்கிச் செயற்பட்டு நல்லிணக்க நாடகத்தை அரங்கேற்ற அரச தரப்பினர் முயல்வதைப் புரிந்துகொண்டதனாலேயே மகிந்த அவ்விதம் செயற்பட விழைகிறார்.

அமெரிக்க அரசின் அழுத்தங்களுக்கு மேலதிகமாக, நல்லாட்சி அரசின் தேவையின் பேரிலேயே அரசின் இந்தப் பயணம் முன்னெடுக்கப்படுகிறதென மகிந்த கூறுவது இதனாலேயே ஆகும்.

இதிலுள்ள பாரதூரமான ஆபத்தை உணர்ந்து கொண்டதாலேயே மகிந்த இவ்விதம் எச்சரிக்கிறார்.

### ரணிலின் நல்லிணக்கம் தொடர்பான செயலணி குறித்து மகிந்த விமர்சிப்பு

ரணிலின் நல்லிணக்கம் தொடர்பான செயலணியின் அறிவுறுத்தலின்படி இலங்கை அரசு ஆயுத மோதல்களின் போது பாதிப்புற்ற தரப்பினரிடம் மன்னிப்புக் கோரி ஆக வேண்டும். இருப்பினும் பயங்கரவாத அமைப்புக்களுக்கோ, அவற்றுக்கு ஆதரவளிக்கும் வேறு அமைப்புகளுக்கோ இத்தகைய நிபந்தனைகள் ஏற்புடையவை அல்ல. அவை அத்தகைய மன்னிப்பு எதனையும் கோர வேண்டியதில்லை. அந்த வகையில் இது, பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டியதன் மூலம் இலங்கை அரசு தவறி

ழைத்துள்ளது என்பதை உலகத்துக்கு சத்தம் போட்டுச் சொல்வது போன்றதாகும்.

இவற்றுக்கு மேலாக ரணிலினது புதுமையான நல்லிணக்கக் கோட்பாட்டு யோசனைப்படி, புலிகளதுமாவீரர்மயானங்கள் மீண்டும் முன்பிருந்த விதத்தில் உருவாக்கிக் கொடுக்கப்பட வேண்டும். மாவீரர் தினத்தை கடைக்கொள்ள இடமளிக்கப்படுவதுடன் புலிகளது சீருடை அணிந்த நிலையில் கொல்லப்பட்ட புலி உறுப்பினர்களது ஒளிப்படத்தை அவரவர்களது வீடுகளில் வெளிப்படையாகக் காட்சிப்படுத்த வழி ஏற்படுத்தப்படுகிறது.

மற்றொரு யோசனைப்படி, குற்றச்சாட்டுச் சுமத்தப்படாத நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள புலிச் சந்தேக நபர்கள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும். அதற்குப் பதிலாக குற்றமிழைத்ததாகச் சந்தேகிக்கப்படும் சகல இராணுவ வீரர்களும் சிறை வைக்கப்பட வேண்டும் என அர்த்தப்படுத்தும் விதத்தில் அமைகிறது.

இலங்கை மக்களுக்கும் ஊடகங்களுக்கும் நாட்டின் அரசியல் நிலை குறித்து அரச தலைவரும் தலைமை அமைச்சரும் வெவ்வேறுபட்ட கருத்து வெளிப்பாடுகளையே வெளியிட்டு வருகின்றனர். போரின் இறுதி வேளையில் நாட்டில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து விசாரிக்க பன்னாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய பன்னாட்டு நீதிமன்றமொன்று நிறுவப்பட வேண்டுமென ரணிலின் தரப்பினர் வெளியிடும் யோசனையும் முக்கியத்துவம் வாய்ந்தமைகிறது. இலங்கையில் அதனை எதிர்ப்பதாகக் காட்டிக் கொள்ளும் அதேவேளை, பன்னாட்டுச் சமூகத்துக்கு அது குறித்து சாதகமாகக் கருத்து வெளிப்படுத்தும் இரட்டைப் போக்குச் செயற்பாடுகளே கடைக் கொள்ளப்படுகின்றது.

ரணிலின் இந்தப் புதுமையான நல்லிணக்கக் கோட்பாட்டின்படி, முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள், மற்றும் தற்போது புலிகளது கோட்பாடுகள் மீது நம்பிக்கை வைத்துச் செயற்படும் இளைஞர் தரப்புக்களுக்கு பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபாடு காட்டிச் செயற்பட்டு குற்றமிழைத்த பின்னர், மன்னிப்புக் கோரக் கிட்டும் வாய்ப்பு, புதிய பயங்கரவாதத் தடுப்புச் சட்ட விதிகளில் உள்ளடக்கப்படுவதாகக் கொள்ள முடிகிறது. குறித்த புலி உறுப்பினர் எத்தகைய கடும் குற்றத்தை மேற்கொண்டிருந்தாலும் சட்டமா அதிபரால் அந்தப் புலி உறுப்பினரை விடுதலை செய்ய இயலும். மற்றொரு புறம், பன்னாட்டு உத்தரவுகளை இலங்கையின் சட்ட நடைமுறைக்குள் உள்வாங்கும் நடைமுறையை மாற்றி அமைப்பதுடன், இலங்கையால் ஐ.நா.மனித உரிமைகள் சபைக்கும் மேன்முறையீடு மேற்கொள்ளவாய்ப்பமையும். இதன்மூலம் எமது உயர் நீதிமன்றுக்கிருந்த கௌரவம் பாதிப்புறும்.



இலங்கை மக்களுக்கும் ஊடகங்களுக்கும் நாட்டின் அரசியல் நிலை குறித்து அரச தலைவரும் தலைமை அமைச்சரும் வெவ்வேறுபட்ட கருத்து வெளிப்பாடுகளையே வெளியிட்டு வருகின்றனர். போரின் இறுதி வேளையில் நாட்டில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து விசாரிக்க பன்னாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய பன்னாட்டு நீதிமன்றமொன்று நிறுவப்பட வேண்டுமென ரணிலின் தரப்பினர் வெளியிடும் யோசனையும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது.



### ரணிலின் செயற்பாடுகளின் அபாயம் குறித்த எச்சரிக்கை

ஒரு யோசனையின் மூலம் மாகாண அமைச்சர்களுக்கான அதிகாரங்கள் ஒழிக்கப்படுவதுடன் மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்கும் இடையேயான தொடர்பு இதன்மூலம் ஒரே அரசென்ற நடைமுறை வீழ்ச்சியுற்று, சமஷ்டி முறைக்கு மாற்றமுறும். அது ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா விலகி சுயாதீனமடைந்தமை போன்ற நிலைக்குச்சமமானதாகும்.

அதேபோன்று மாகாண மட்டத்தில், மொழிவாரி மட்டத்தில் மாகாண பொலிஸ் பிரிவு உருவாவதுடன், அதற்கான தேர்வுகளும் குறித்த மாகாண பொலிஸ் பிரிவின் கீழ் அமையும். இத்தகைய நிலை அரசுக்கு எதிராக கெரில்லா தாக்குதல், ஆயுத ரீதியில் ஒன்றிணைதல் என்பவற்றுக்கு வழிவகுக்கும். இதனை பொலிஸ் மா அதிபராலோ அல்லது அரசாலோ கட்டுப்படுத்த இயலாத நிலை ஏற்பட வாய்ப்பமையும்.

அதேபோன்று சகல காணி அதிகாரங்களும் மாகாண அமைப்புக்கு கிட்டும். இந்த யோசனை ஏற்கப்பட்டு சட்டமாக்கப்பட்ட பின்னர் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கின் மாகாண அமைப்புக்களின் கீழ் வரும் காணியொன்றை தேசிய பாதுகாப்பு நடவடிக்கைக்கு மத்திய அரசு கையகப்படுத்துவதற்கான வாய்ப்பு அற்றுப் போகக் கூடும். இத்தகைய தகவல்களில் எவற்றையும் மூடி மறைக்காமல் மகிந்த நாட்டு மக்கள் தெரிந்து கொள்வதற்காக வெளிப்படுத்தியுள்ளார். இன மத பேதங்களை மறந்து நாட்டு மக்கள் இவை குறித்து கலந்தாலோசித்துக் கேள்வி எழுப்புவதற்காகவே மகிந்த அவ்வாறு செய்துள்ளார். இவை குறித்து சிந்திக்கும் .பொது மக்கள் இத்தகைய யோசனைகளிலுள்ள ஆபத்துக்கள் குறித்துப் புரிந்து கொள்ளக் கூடும்.

இவைகளில் எதுவொன்று குறித்தும் தமக்கு எதுவும் தெரியாது என்ற விதத்தில் நடந்து கொள்ளும் அரச தலைவர் மைத்திரி, இருந்திருந்தாற்போல் "பத்திரிகைகளில் வெளிவந்ததையடுத்தே நான் குறித்த செய்தி குறித்துத் தெரிந்து கொண்டேன்." எனக் கூறப் பழகியுள்ளார். மைத்திரி இவ்விதம் கூறுவது உண்மைதானா என மக்கள் சிந்திக்கத் தலைப்பட்டுள்ளனர்.


இந்த அரசு வீழ்ச்சியடையப் போகிறதென எவராவது எதிர்பார்த்திருந்தால் அதற்கு நான் இடமளிக்கப் போவதில்லையென மைத்திரிபால கூறுவதிலிருந்து அவர் இதனை எதிர்க்காது அரசு முன்னெடுக்கும்செயற்பாடுகளை அனுமதிப்பதாகவும் கொள்ள இயலும்.

ஆனால் ஐ.தே.கட்சியின் விருப்புப்படி மைத்திரிபால செயற்படவில்லை. சந்தர்ப்பத்துக்கு ஏற்ற விதத்தில் அவர் முடிவுகளை மேற்கொள்கிறார் என விட்டுக் கொடுக்காது மைத்திரிபாலவைக் காப்பாற்றும் நோக்கில் சுதந்திரக் கட்சியின் மைத்திரிபால அணியினர் பெருமையடித்துக் கொள்கின்றனர்.

### நல்லாட்சி அரசின் செயற்பாடுகளின் நலிவு நிலை

அதேவேளை மைத்திரிபால தலைமையிலானநல்லாட்சி அரசு தான் ஆரம்பித்த அதிவேக நெடுஞ்சாலைத் திட்ட வேலைகளை போதிய நிதி கையிருப்பில் இல்லையெனக் காரணம் காட்டித் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது. நிலமை இவ்வாறிருக்கையில் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவோ நாட்டின் பொருளாதார மேம்பாடு சாதகமான நிலையில் உயர்வு கண்டு வருகிறது எனத் தெரிவித்து வருகிறார்.

இத்தகைய பின்னணியில் அண்மையில் இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வுப் பிரிவு வெளியிட்டுள்ள தகவலில் கடந்த 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நவம்பர் மாதம் வரையான கால இடைவெளியில் நாட்டின் மொத்த ஏற்றுமதி, வருமானம் நூற்றுக்கு 2.8 வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் எந்தக் கோணத்தில் நோக்கினாலும் அரச நிர்வாகத்தில் எங்கும் சிக்கல்கள் மலிந்துள்ளன. நிச்சயமற்ற நிலை வெளித்தெரிகிறது. எதுவும் செய்ய இயலாத கையறு நிலை தோற்றம் பெற்றுள்ளது. நல்லாட்சி அரசின் நிர்வாகம் இவ்விதம் நலிவு நிலை காணுமாயின், நாட்டு மக்கள் நல்லாட்சி அரசின் செயற்பாடுகள் இவ்விதம் ஆவதேன்? எனக் கேள்வி எழுப்பும் நிலை உருவாகும் என்பதே யதார்த்தம்.



# வாசகர் திருமுகம்

## கோழிக் கழிவுகள் உரிய வகையில் அகற்றப்படல் வேண்டும்

கோழிகளை இறைச்சிக்காக வெட்டுபவர்கள் அவற்றின் கழிவுகளை பொது மக்கள் பயணிக்கும் வீதிகளிலும் ஒழுங்கைகளிலும் கண்டபடி கொட்டிவிடுவதால் அது சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்துவதோடு பொது மக்களுக்கு அசௌகரியத்தையும் ஏற்படுத்தி வருகின்றது.

தற்போது கோழிக் கடைகளில் மட்டுமல்லாது வீடுகளிலும் கோழி இறைச்சி வியாபாரம் இடம்பெற்று வருகின்றது. ஆனால் இதில் ஈடுபடுபவர்கள் கழிவுகளை அகற்றுவதில் அக்கறை கொள்வதில்லை. சிலர் வீதியோரங்களில் அவற்றை வீசி எறிந்து விட்டுச் சென்று விடுகின்றனர். நாய்கள் , காகங்கள் என்பவை இவற்றைக் கிண்டிக் கிளறிவிடுவதால் கோழிச் செட்டைகளும் ஏனைய கழிவுகளும் வீதிகளில் பரவிக் காணப்படுகின்றன. இவற்றிலிருந்து துர்நாற்றமும் வீசுகின்றது.

அதிகாரிகள் வீடுகளில் வைத்துக் கோழி இறைச்சி வியாபாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு அனுமதி வழங்கும்போது அவர்கள் கழிவுகளைச் சேகரித்து அப்புறப்படுத்துவதற்கான வசதிகளைக் கொண்டுள்ளார்களா? என்பதை ஆராய்ந்து பார்த்து அனுமதி வழங்குவதுடன் அவர்கள் உரிய முறையில் கழிவுகளை அகற்றுகின்றார்களா என்பதையும் கண்காணிக்க வேண்டும். இதில் கவனம் செலுத்தப்படாது விட்டால் கோழிக்கழிவுகளால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதுடன் பொதுமக்கள் அசௌகரியங்களையும் எதிர் கொள்ள நேரிடும்.

*ச.சரோஜா*
*குளப்பிட்டி*

## நாடு திருந்தினால் முதலீடுகள் தேடி வரும்

இலங்கையைத் தனது முக்கிய முதலீட்டு நாடாக ஆக்கிக் கொள்ள சீனா முயல்வதாக வெளிவரும் செய்தி ஆச்சரியமானதொன்றல்ல.

முதலில் இலங்கை தன்னை ஊழல் மோசடிகளற்ற, நீதி, நியாயம் பேணும், சமாதானத்தை நிலைநாட்டும் நாடாக ஆக்கிக் கொள்ளட்டும்.

அத்தகைய நிலையில் மேற்குலக நாடுகளில் பலவும் இலங்கையில் முதலீடுகள் மேற்கொள்ள இலங்கையை நாடி வரத் தயங்கா என்பது திண்ணம்.

*பொ.மாணிக்கம்,*
*யாழ்ப்பாணம்.*

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** அன்பால் அனைவரையும் அரவணைப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட வருமானம் உயரும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் நன்மதிப்பைப்பெற்று மகிழ்வர்.

**இடபம்:**அறிமுகம்இல்லாதவரிடம்நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரம் செழிக்க, கடின உழைப்பு தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**மிதுனம்:**வீண் பேச்சு பேசுபவரிடம் இருந்து விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் வருமானம்சீராக இருக்கும். பணியாளர்கள், பணிச்சுமைக்கு ஆளாகலாம். பெண்கள், செலவுக்காகக் கடன் வாங்குவர்.

**கடகம்:** இஷ்டதெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில்பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். பணியாளர்கள், சுதந்திர உணர்வுடன் பணியாற்றுவர். ஆரோக்கியம் பலம்பெறும்.

**சிங்கம்:** முக்கிய பணிகளை விரைந்து முடிப்பீர்கள். உறவினர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள், பணிவிடயமாக வெளியூர் செல்வர்.

**கன்னி:**பிறர்கூறும்குறைகளைபொருட்படுத்த வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சராசரி அளவில் இருக்கும். பெண்களுக்கு, வீட்டுச் செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும்.

**துலாம்:**உதவிபெற்றவர்கூட, நன்றிமறந்து செயற்படுவர். தொழில், வியாபாரத்தில் திடீர் பொறுப்பு அதிகரிக்கும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள்பணிச்சுமையைச் சந்திப்பர்.

**விருச்சிகம்:** வளர்ச்சிக்கான வாய்ப்புக் கிடைக்கப் பெறுவீர்கள். பிறர் வியக்கும் வகையில், தொழிலில் அமோக லாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.

**தனுசு:** நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. தொழிலில் உருவாகும் இடையூறைச் சரி செய்வீர்கள். லாபம் சுமார். பெண்கள், நகை, பணம் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**மகரம்:** நண்பரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் திருப்திகரமாகஇருக்கும். பணியாளர்களுக்கு பாராட்டு, வெகுமதி கிடைக்கும். பெண்கள், புகுந்த வீட்டினரால் பெரிதும் மதிக்கப்படுவர்.

**கும்பம்:**ஒருமுகத் தன்மையுடன் பணியில் ஈடுபடுவதுஅவசியம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணிச்சுமையைச்சந்தித்தாலும், வருமானம் வந்து சேரும்.

**மீனம்:** இனிய பேச்சால், பிறரைக் கவர்வீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பணியாளர்கள், பணிகளை விரைந்து முடிப்பர். பிள்ளைகளால் நன்மை உண்டாகும்.

வீட்டை விட்டு செல்லும் முன் உங்களை இப்படி தயார் செய்து கொண்டால்...



அக்கினி வெயில் உங்களை ஒன்றும் செய்யாது...

இன்றைய வானிலை...




முடியை சின்னதா வெட்டி விடுங்க... எவ்வளவு சின்னதா...?



பொண்டாட்டி கையில சிக்காத அளவுக்கு...

சாமிக்கு மொட்டை போடனுமுன்னு சொன்னாங்க... நம்பி கோயிலுக்கு போனா... எனக்கு மொட்டை போட்டுட்டாங்க...




வர்ர ... கோபத்துக்கு

# கவர்ச்சி வேண்டாம் என்கிறார் அருந்ததி நாயர்

விஜய் அன்ரனி நடித்த 'சைத்தான்' படத்தில் கேரளாவில் இருந்து வந்து நாயகியாக அறிமுகமானவர் அருந்ததி நாயர். இதில் இவருடைய நடிப்பு பேசப்பட்டது.



தமிழ்சினிமாபற்றிஅருந்ததிநாயரிடம்கேட்டபோது... 'சைத்தான்' படத்தில் அழுத்தமான வேடத்தில் நடித்தேன். நான்புதுமுகநடிகைஎன்றாலும், என்னைநம்பி அழுத்தமானவேடம்கொடுத்தார்கள். இயக்குநர், கதாநாயகன் ஆகியோரின் நம்பிக்கையைக் காப்பாற்றும் வகையில் நடித்தேன். படம் வெளியானதும் என் நடிப்பைப் பலரும் பாராட்டினார்கள்.

இப்போது மலையாளத்தில் ஒரு படத்தில் ஒப்பந்தமாகி இருக்கிறேன். தமிழில் ஜவஹர் இயக்கும் புதிய படத்தில் நடிக்கிறேன். இதன் படப்பிடிப்பு இன்னும் தொடங்கவில்லை. இதுதவிர மேலும் 3 பட வாய்ப்புக்கள் வந்தன. ஆனால் அதில் கவர்ச்சியாக நடிக்க வேண்டும் என்று சொன்னதால் அந்தப் படங்களில் நடிக்கவில்லை. கவர்ச்சியாக நடிப்பதில் எனக்கு உடன்பாடு இல்லாததால் அதை ஏற்கவில்லை.

என்னால், சவாலான எந்த வேடம் என்றாலும் நடிக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. எனவே, எனது திறமைக்கேற்ற வேடங்களில் மட்டுமே நடிக்க ஆசைப்படுகிறேன். 'வருத்தப்படாத வாலிபர் சங்கம்' 'ரஜினிமுருகன்'போன்றகதைகளில்நடிக்கஆர்வமாகஇருக்கிறேன். எனது திறமைக்குத் தீனிபோடும் நல்ல கதாபாத்திரங்களைஇயக்குநர்கள்எனக்குதரவேண்டும்என்பதுதான் எனது வேண்டுகோள்" என்றார்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 7 | 4 | 8 | 9 | 3 | 1 | 6 |
| 1 | 6 | 9 | 2 | 3 | 7 | 8 | 5 | 4 |
| 4 | 8 | 3 | 5 | 6 | 1 | 9 | 2 | 7 |
| 8 | 3 | 2 | 7 | 9 | 5 | 4 | 6 | 1 |
| 7 | 1 | 6 | 3 | 2 | 4 | 5 | 8 | 9 |
| 5 | 9 | 4 | 8 | 1 | 6 | 7 | 3 | 2 |
| 3 | 4 | 8 | 1 | 7 | 2 | 6 | 9 | 5 |
| 6 | 2 | 5 | 9 | 4 | 8 | 1 | 7 | 3 |
| 9 | 7 | 1 | 6 | 5 | 3 | 2 | 4 | 8 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 3 | | 7 | | | 8 | |
| 7 | 9 | 4 | | | | | | |
| 5 | 8 | 6 | | | 4 | 1 | | 7 |
| 1 | | 2 | | 6 | | | | |
| | | | | | | | | |
| | | | 2 | | | | 7 | |
| 3 | | | | | 8 | 7 | | |
| | | | 5 | | | 8 | | 3 |
| 9 | | 8 | 4 | | | 2 | | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும்1-9வரையானஎண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



## வரலாற்றில் இன்றைய தினம்

### 25.03.2017

1306 –ஸ்கொட்லாந்து அரசரானார் றொபேட்புரூஸ்.

1655 – சனிக்கிரகத்தின் பெரிய சந்திர னான டைட்டான் சந்திரன் கிறிஸ்ரியன் ஹீயென்சால் கண்டுபிடிக்கப் பட்டது.

1807 –அடிமை வியாபாரச் சட்டம் நடைமுறைக்கு வந்ததையடுத்து பிரிட்டன் பேரரசில் அடிமை வியாபாரம் ஒழிக்கப்பட்டது.

1911– நியூயோர்க் நகர் ட்றாங்கிள் ஷேட்வெயிஸ்ற் தொழிற்சாலைதீவிபத்தில்146ஆடைத்தொழில் வேலை செய்வோர் உயிரிழந்தனர்.

1948 –ரிங்கர் விமானப்படைத் தளத்தை சூறாவளி தாக்கும் என கூறப்பட்ட முதல் சரியான புயல் எச்சரிக்கை எதிர்வுகூறல் இதுவாகும்.

1957 –ஐரோப்பிய பொருளாதார சமூகம் மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ் , இத்தாலி, பெல்ஜியம், நெதர்லாந்து மற்றும் லக்ஸம்பேர்க் ஆகிய நாடுகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்டது.

1971– பங்களாதேஷ் விடுதலைப்போர், ஒப்பரேசன் சேச்லைற், எனும்பெயரில்பாகிஸ்தான் ஆயுதப் படையால் கிழக்கு பாகிஸ்தான் குடிமக்களுக்கு எதிரான நடவடிக்கை தொடங்கப்பட்டது.

1975 –சவுதி அரேபியா பைசால், அவரது உளநலம் பாதிக்கப்பட்ட மருமகனால்சுட்டுக் கொல்லப்பட்டார்.

1988 –செக்ஸ்லோவோக்கிய கம்யூனிஸ்ட் ஆட்சிக் கெதிரான மெழுகுவர்த்திப் போராட்டம் பிறடிஸ்லாவாவில் தொடங்கப்பட்டது.

1988 –அரசதலைவருக்கு குண்டுபாயாத இரண்டு பென்ஸ்கார்கள்இறக்குமதிப் பெறுமதிஒருகோடி 40லட்சம்.

1996– விசர் மாடு நோய் காரணமாக ஐரோப்பிய யூனியன் கால்நடைக் குழு, பிரித்தானிய மாட்டிறைச்சி மற்றும் உப தயாரிப்புகளுக்குத் தடை விதித்தது.

2002 –பாலசிங்கத்தின் இலங்கை வருகை குடிவரவுச்சட்டங்களுக்கு முரண்; செய்தியாளர்மாநாட்டில் வீரவன்ச ஆட்சேபம்.

2002–ஈழத்தமிழர் உரிமையை வலியுறுத்தி சுவிஸில் பெரும் எழுச்சிப் பேரணி.

2007 –கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீது நள்ளிரவு விடுதலைப் புலிகள் தாக்குதல்; விமான நிலையம் மூடப்பட்டது. சேவைகள் வேறு நாடுகளுக்கு மாற்றம்.

2007 –போர் அகதிகளைப் பாதுகாப்பதற்கு ஐ. நாவின் உதவி கோரப்படும். இந்திய அனுசரணையைப் பெற த.தே. கூட்டமைப்பு முயற்சி.

2009–உதயன் மீதான தாக்குதல் விசேட பொலிஸ் குழுக்கள் விசாரணை

2009 –சுடர்ஒளி ஆசிரியரின் கைது குறித்து உயர் நீதிமன்றில் உரிமைமீறல் மனுதாக்கல்செய்யப் பட்டது.

2009–பாதுகாப்புச்சபையில் இலங்கைவிவகாரம் உறுதி செய்யும் முயற்சியில் பிரிட்டன் தீவிரம் என அந்த நாட்டு அமைச்சர் நாடாளுமன்றில் தெரிவிப்பு.

2016 – போர்க்குற்ற விசாரணையை தடுப்பதற்கு சிலர் முயற்சியென சந்திரிகா குற்றச்சாட்டு.

2016 –மக்களுக்குப் பாதகம் ஏற்படின் சம்பூரில் அனல் மின் நிலையம் அமைக்கவிடோமென எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு.

2016 விகாரைகள் அமைப்பதை நிறுத்த சம்பந்தனின் அழுத்தம் வேண்டுமென சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு.

2016 பாடசாலை அனுமதியில் முறைகேடு; விசாரிக்க குழு அமைக்காதது ஏன் என எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா சபையில் கேள்வி.

## நாளை

**பங்குனி-13**
ஞாயிற்றுக்கிழமை -26.03.2017
திதி: திரயோதசி மு.ப.11.21
நட்சத்திரம்: சதயம் பி.ப.03.27
சுபநேரம்:09.15-10.45 வரை
ராகுகாலம்:04.45-06.15 வரை
பரமகுருசுவாமி குருபூஜை



## இது புதுசு

புதிய வடிவிலான கைப்பைகள் விற்பனையில் இருக்கின்றன. இவை சிவப்பு, நீலம், கறுப்பு நிறங்களில் விற்பனையில் உள்ளன. இந்தக்கைப்பை ஒன்று 700 முதல் 900 வரையிலான விலையில் விற்கப்படுகின்றன.

## நம் பிள்ளைகளை நாம் சரியாக வளர்க்கிறோமா?



சிறுவயதில் இருந்தே அக்கறை மற்றும் கண்டிப்போடு பிள்ளைகளை வளர்க்கும்போது கட்டாயமாக எதிர்காலத்தில் குற்றச்சம்பவங்களில் ஈடுபட விடாமல் தடுக்க முடியும்.

ஆண், பெண் பிள்ளைகளின் செயற்பாடுகளை, சிறுவயது முதலே கவனித்து வளர்க்க வேண்டும். எல்லை மீறிய சுதந்திரமும் அளவுக்கு அதிகமான கண்டிப்பும் தவறானது. பிள்ளைகள் அன்றாட செயற்பாடுகளில் ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின் வெளிப்படையாக பகிர்ந்துகொள்ளும் அளவுக்கு அவர்களுடன் இணக்கமான நட்பும் வளர்ப்பு முறையும் நம்மிடமும் மற்ற குடும்ப உறுப்பினர்களிடமும் இருக்க வேண்டும்.

பிள்ளைகளின் பிறந்த நாள் விழாவிற்கு செலவழிக்கும் நேரத்தைவிட பிள்ளை தேர்வில் தோல்வியடைந்த தருணம் அல்லது ஏதாவது பிரச்சினையில் சிக்கித் தவிக்கும் நேரங்களில்தான் அவர்களுடன் அதிக நேரத்தைச் செலவழித்து ஆறுதலாகவும்ஆக்கபூர்வமாகவும் பேசி பிரச்சினையைச் சரி செய்ய வேண்டும்.

பிள்ளைகள் கூறும் பிரச்சினையை எடுத்த எடுப்பிலேயே தவறாக கருதி கோபம் காட்டுவதைத் தவிர்த்து அந்தப் பிரச்சினையைச் சரிசெய்வதற்கான வழிமுறைகளையும் இனி அத்தவறை மீண்டும் செய்யாமல் இருக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுங்கள்.

தன் பிள்ளை தவறான வழியில் சென்றால் அதை ஆரம்பத்திலேயே கண்டறிந்து நல்வழிபடுத்த வேண்டியது பெற்றோரின் முதல் கடமை. பிள்ளை தவறு செய்யும்பட்சத்தில் அவரைத்திருத்தி நல்வழிபடுத்துங்கள். மாறாக காப்பாற்ற நினைத்தால் ஒவ்வொரு முறையும் நம்மை காப்பாற்ற பெற்றோர் வருவார்கள் என்ற எண்ணம் வருவதுடன் தொடர்ந்து தீய வழிக்குத்தான் செல்வார்கள்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளையும் சமூகத்தில் நடைபெறும் ஒவ்வொரு பிரச்சினைகளையும், விடயங்களையும் தங்கள் ஆண், பெண் பிள்ளைகளுக்கும் ஒரு பாடமாக எடுத்துக்கூற வேண்டும். இதுபோன்ற பிரச்சினை எதனால் நடந்தது என்பதை விளக்கி, அவற்றை எல்லாம் நாம் செய்யாமல் இருப்பதன் மூலம் நாம் தைரியமாகவும் நிம்மதியாகவும் வாழமுடியும் என்ற ஆலோசனைகளைக் கூறுங்கள்.

ஆண்பிள்ளை ஏதாவது பிரச்சினையில் சிக்கித்தவிக்கும் சூழலிலும் அழும் சூழலிலும் 'பொம்பள பிள்ளை மாதிரி அழாதே', 'நீ ஆம்பிளையடா' எனக்கூறி ஆண் பிள்ளைகளிடம் சின்ன வயதிலிருந்தே பெண்களை மட்டம்தட்டி பேசி ஆணாதிக்க உணர்வை நேரடியாகவும் மறைமுகமாகவும் வளர்க்க வேண்டாம்.

ஆண் பெண் இருவரும் சரிசமமானவர்கள் என்பதை உங்கள் பிள்ளைகளிடம் சிறுவயதில் இருந்தே அழுத்தமாக கூறுங்கள். ஒரு பெண்ணை எப்படி அம்மாவாக, சகோதரியாக, தோழியாக நினைத்து பழக வேண்டும் என்பதை மகனிடமும் ஓர் ஆணை எப்படி அப்பாவாக, சகோதரனாக, தோழனாக நினைத்துபழக வேண்டும் என்பதை மகளிடமும் சொல்லி வளர்க்க வேண்டும். ஒரு பெண்ணின் ஒப்புதலோடு ஆணும் ஓர் ஆணின் ஒப்புதலோடு பெண்ணும் காதலிக்க உரிமை இருக்கிறது; அதேபோல உன் காதலை மற்றொருவர் நிராகரிக்கவும் உரிமை இருக்கிறது. அதை நீயும் பக்குவமாக ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்தி வளர்க்க வேண்டும்.

இனி வரும்காலங்களில் நம் பிள்ளைகளை நல்ல மனிதர்களாக வளர்த்து சமூகத்தில் குற்றச் சம்பவங்கள் அதிகம் நிகழாமலும் அச்ச உணர்வில்லாமலும் வாழ்வோம்.




## 2017 நீங்கள் பிறந்த கிழமை உங்களுக்கு எப்படி?



## சனி


இந்தக் கிழமையில் பிறந்தவர்கள் பொறுமைசாலிகள். வேலை என்று வந்துவிட்டால் அதை முடித்துவிட்டே மற்ற வேலைகளைத் தொடங்குவர். சான்றோரிடமும் ஆன்றோரிடமும் மிகுந்த பக்தி உள்ளவர். எப்போதும் தான் உண்டு தன் வேலை உண்டு என நினைப்பவர்.

**நல்லன அருளும் திகதிகள்:**
8, 17, 26 ஆகிய திகதிகளில் சிறப்பான நன்மைகள் பல பெற்றிடுவீர்.

**ஏற்றம் தரும் வயது காலங்கள்:**
22, 26, 31, 35, 41, 50, 53, 58, 62, 67 ஆகிய வயதுகளில் வாழ்வில் இன்பம் சேரும்.

**வளம் தரும் கிழமை:** வியாழன்

**பரிகார வழிபாடு:** சனிக்கிழமை காலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்து, நல்லெண்ணெய்தேய்த்துக்குளித்து, நீலாம்பரம், நீல சங்குபூ, வில்வம் சாற்றி சிவனாரை வழிபடுவது சிறப்பு. சிவாலயங்களில் நல்லெண்ணெய் ஊற்றி விளக்கேற்றி வழிபட்டு வந்தால் தோஷங்கள் நீங்கும். வீட்டில் பூஜைக்கு பிறகு காகத்துக்கு எள் கலந்த நெய்சாதம் இடவேண்டும். கருட தரிசனமும் நலம்பயக்கும்.



## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை **திருமதி வ. கோமளா** அவர்களின் தந்நை **கதிர்காமு ஐயாத்துரை** அவர்களது மறைவுச் செய்திகேட்டு வருந்து வதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அழ்ந்த அனு தாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராா்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம் .யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்**

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் அரச மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றும் **செல்வி கி.தயாளினி** அவர்களின் அன்புத்தந்தை

**வெற்றிவேலுமுதலியார் கிட்ணபிள்ளை**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமதுஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**நல்லூர் பிரதேச செயலக,**
**உத்தியோகத்தர் நலன்புரிசங்கம்.**

## கண்ணீர் அஞ்சலி


நல்லூர் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி ர.றஜினா** அவர்களின் அன்புத் தாயார்.

**நாகேஸ்வரி இராமசேது**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமதுஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**நல்லூர் பிரதேச செயலக.**
**உத்தியோகத்தர் நலன்புரிசங்கம்.**

## 31 ஆம் நாள் நினைவலைகள்



எமது பாடசாலையின் ஆசிரியை **திருமதி குமாரதேவன் பாக்கியலஷ்சுமி** யின் அன்புத் தந்தையார்

**அமரர்**
**நாகமணி சண்முகம்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைசமூகம்**
**யா/கைதடிகுருசாமி வித்தியாலயம்**

## நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பூசை அழைப்பும்

தோற்றம்
21
.
11
.
1940



மறைவு
12
.
03
.
2017

**அமரர்(திருமதி) ஞானபூபதி தங்கவடிவேல்**

**ஆசை தனைச்சுருக்கி அன்புக் கயிற்றாற் பிணைத்து**
**ஆசைக்கதை பேசிப் பல அறநெறியும் புகன்று**
**பூசைப் பொழுதெல்லாம் வளைய வந்த மாதரசி**
**பூபதி அம்மையே நினைவெல்லாம் நீயே!**

கடந்த 12.03.2017 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் உற்ற எம் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகளும் ஆத்மசாந்திப் பூசையும் ஆலய வளாகத்தில் உள்ள எமது இல்லத்தில் 27.03.2017 திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் இடம்பெறவுள்ளன. அதன்பின்னர் மதியபோசன நிகழ்விலும் குடும்ப சகிதம் பங்குபெற அழைக்கின்றோம். அன்றைய நாளில் நோயுற்றிருந்தபோது பரிந்து நின்ற வைத்தியர்கள், தாதியர்கள், உறவினர்கள், நண்பர்களையும் துன்பக் கணங்களில் தொலைபேசி, பிரசுரங்கள் வாயிலாக ஆறுதல் கூறிய அனைவரையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

இந்த அறிவித்தலை எமது தனிப்பட்ட அழைப்பாக ஏற்று எம்மை மகிழ்விக்கும்படி அன்பர்கள், நண்பர்கள், உற்றார், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**சிவன் அம்மன் கோவில்,**
**புகையிரத நிலைய முன்புறம்,**
**கோண்டாவில்.**

குடும்பத்தினர்.
0212227948

ஐ.நா...

மேலும், தமிழ் மக்கள் தமது பொறுமையின் எல்லையை அடைந்து விட்டார்கள். அவர்களது இடர்களுக்கும், வேதனைகளுக்கும் கூடிய விரைவிலே ஒரு முடிவு காணப்படவேண்டும் என்பதனையும் நாம் வலியுறுத்துகிறோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் பத்திரிகை அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவிக்கும் முகமாக 2015 ஆம் ஆண்டின் பிரேரணை முழுவதுமாக நடைமுறைப்படுத்துவதனை வலியுறுத்தும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத.தே. கூட்டமைப்புவரவேற்கின்றது. இந்தப் பிரேரணையில், இலங்கை அரசுக்கும் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துக்கும் 2018 ஆம் மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் பிரேரணையின் வெற்றிகரமான நடைமுறை தொடர்பில் அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டும் என்று கொடுத்துள்ள கால வரையறையையும் வரவேற்கின்றோம்.

இந்தப் பிரேரணைகள் தொடர்பில் இலங்கை அரசு வழங்கிய தனது வாக்குறுதிகளை மதிக்கவேண்டும். இந்தப் பிரேரணைகளின் உள்ளடக்கங்களை அவற்றில் உள்ளவாறே நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் நாம் அரசை வலியுறுத்த விரும்புகிறோம். அரசானது காணி விடுவிப்பு, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமற்போனோரின் குடும்பங்களின் அங்கலாய்ப்புகள் மற்றும் புதிய அரசமைப்பை உருவாக்குதல் போன்ற விடயங்களில் இதய சுத்தியுடன் செயற்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்க விரும்புகிறோம்.

தமிழ் மக்கள் தமது பொறுமையின் எல்லையை அடைந்து விட்டார்கள். இந்த விடயங்கள் தொடர்பிலான அவர்களது இடர்களுக்கும், வேதனைகளுக்கும் கூடிய விரைவிலே ஒரு முடிவு காணப்பட வேண்டும் என்பதனையும் நாம் வலியுறுத்துகிறோம்.

மேற்குறித்த விடயங்களை அடைந்து கொள்வதில் பன்னாட்டுச் சமூகத்தின் தொடர்ச்சியான பங்களிப்பையும் ஒத்தாசைகளையும் நாம் வரவேற்கிறோம். தமிழ் பேசும் மக்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் என்ற வகையில் இலங்கையில் நிலைமாற்று நீதி மற்றும் நல்லிணக்கம் தொடர்பிலான ஐ.நாவின் பரிந்துரை மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளின் செயலாக்கம் தொடர்பில் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் பங்காற்றுவதிலும் கண்காணிப்பதிலும் ஆக்கபூர்வமாகச் செயற்படும் என்பதனையும் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம்.

இந்தப் பிரேரணை நடைமுறைப்படுத்துவதன் பயன்களை பாதிக்கப்பட்ட மக்கள் பெற்றுக் கொள்வதனை உறுதி செய்யும்படிக்கான அனைத்துத் தேவையான நடவடிக்கைகளையும் ஐக்கிய நாடுகள், மனித உரிமைகள் சபை மற்றும் பன்னாட்டுச் சமூகம் என்பன எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (த-5)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் பகுதித் தலைவர் **அருட்பணி மகன் அலோசியஸ்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி**
**மேரி மாகிறேற் அலோசியஸ்**

அவர்கள் 21.03.2017 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அடிகளாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றோம்.

**ஆசிரியர் சங்கம், யா/புனித பத்திரிசியார் கல்லூரி.**

## 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

**அமரர்**
**ஞானசேகரம் ரதீஸ்வரன்**



*முப்பத்தொரு நாள்கள் சென்றதையா*
*எம்மைப் பிரிந்து ஆறுமோ நம் துயரம்*
*உறவுகள் பல இருந்தென்ன ஆற்றுவோர்*
*யார் என எம்மைப் பிரிந்து சென்றீர்கள்.*
*மாண்டார் வருவாரோ என ஆறுதல்*
*அடைகின்றோம். காலங்கள் ஓடி*
*மறையலாம் ஆனால் உன் நினைவுகள்*
*மாறாது மாறாது.*

கடந்த 23.02.2017 வியாழக்கிழமை பிரான்ஸில் சிவபதமடைந்த **அமரர் ஞானசேகரம் ரதீஸ்வரனின்** 31 ஆம் நாள் நினைவு தின நிகழ்வு இன்று சனிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலை வீதி,
ஆறுகால்மடம்.

**தாய், சகோதரர்கள்.**

## மரண அறிவித்தல்

### பிறவுண் கிறிஸ்ரியன் அன்ரன் பரிதிமாறன்

**(ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர் ஊழியர்)**



கரம்பனைப் பிறப்பிடமாகவும் இல. 03, மூளாய் லேன், குருசோ றோட், சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட பிறவுண் கிறிஸ்ரியன் அன்ரன் பரிதிமாறன் 23.03.2017 வியாழக்கிழமை அகாலமரணமடைந்து விட்டார்.


அன்னார் காலஞ்சென்ற பிறவுண் கிறிஸ்ரியன் மற்றும் சூரியகுமாரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை மற்றும் ஞானாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும் மரினா மாலினியின் பாசமிகு கணவரும் ஸ்ராவினின் அன்புத் தந்தையும் தனக்குமார், தர்சன், மனோசுதன், ஜனா, திலகன், லாவணியா ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜயகுமார், சந்திரகுமார், வசந்தகுமார், சதீஸ்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர் உரிமையாளர் இம்மானுவேல் பிள்ளையின் நேசமிகு பெறாமகனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### நல்லதம்பி சீவரத்தினம்



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி, லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி சீவரத்தினம் (சித்தப்பா) 21.03.2017 செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி-நல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா -சோதிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற பூபதி (பூரணம்) இன் அன்புக் கணவரும் வாசுகி (கொலண்ட்), தேவா, சபேசன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சரவணபவன் (கொலண்ட்), கிரிகரன்(லண்டன்) ஆகியோரின் மாமாவும் கரிகரன், கருணியா, ஆக்மிகா, கபினயா ஆகியோரின் அன்புப் பேரனும் செல்வரத்தினம், ருக்குமணி, இரத்தினபூபதி, இந்திராதேவி, இன்பராணி, இன்பராசா, இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மகேஸ்வரி, இராசதுரை ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற தம்பையா மற்றும் சந்திராதேவி (சின்னக்கிளி) ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் ஜேர்மனியில் வசிப்பவர்களான பத்மாவதி, டிபா மற்றும் கனடாவில் வசிப்பவர்களான ஞானதீஸ்வரன் (அருள்), அம்பிகாவதி (வசந்தி), கலா, மகேந்திரம் (சிறி), மனோ ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.03.2017 திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மடத்தடி லேன்,**
**நீர்வேலி வடக்கு,**
**சிறுப்பிட்டி.**

**தகவல்**
**க.இராசதுரை(மைத்துனர்)**

## வாடகைக்கு

நல்லூரில் ஒரு அறை, சிறிய சமையலறை, குளியலறை, திறந்த விறாந்தை உடன் அனெக்ஸ் உண்டு.

**011 236 2611**

## தேவை

1. மில்வேலை செய்யக்கூடியவர்.
2. பொதி செய்யக் கூடியவர்கள்.
3. பணம் வசூலிப்பாளர்கள்.
4. மில் உபகரணங்களும் தேவை.

**077 77 222 15**

## பொன்னாலை ஸ்ரீ வரதராஜ பெருமாள் தேவாஸ்தனம் பணியாளர்கள் தேவை

மேற்படி தேவஸ்தானத்தில் பலவேலை செய்வதற்கு (20-50)வயதுக்குட்பட்ட ஆண் பணியாளர்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 15.04.2017க்கு முன்னராக செயலாளர் பரிபாலன சபை ,பொன்னாலை ஸ்ரீ வராதராஜ பெருமாள் தேவஸ்தானம் பொன்னாலை . சுழிபுரம் என்ற முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும். விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் ஒழுக்கம் மதப்பற்று தொடர்பாக 60 வயதுக்கு மேற்பட்ட கிராமத்து பெரியார் ஒருவரின் விதப்புரையுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

**ஆலய பரிபாலன சபை**
**077 340 0918**

## அமைச்சர்களுக்கு...

ரூபாவும், சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் அந்த அமைச்சின் பிரதி அமைச்சர் பைசல் காசிம் ஆகியோருக்கு 8கோடியே 20 இலட்சம் ரூபாவும்,பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸா நாயக்கவுக்கு4 கோடி ரூபாவும், விளையாட்டுத் துறைப் பிரதி அமைச்சருக்கு 3 கோடியே 80இலட்சம் ரூபாவும், ஊடகத்துறைப்பிரதி அமைச்சர் பரணவிதாரணவுக்கு 4 கோடியே 30 இலட்சம் ரூபாவும், அமைச்சர் ரிஷாத்பதியுதீன் மற்றும் அந்த அமைச்சின் பிரதி அமைச்சர் ஆகியோருக்கு 8கோடியே 60 இலட்சம் ரூபாவும் கோரப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் குழுக்களின் தவிசாளர் செல்வம் அடைக்கலநாதன் வாகனம் கொள்வனவு செய்வதற்காக 4கோடியே 20 இலட்சம் ரூபா கோரப்பட்டுள்ளது.

அதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனின் உத்தியோகபூர்வ வதிவிடத்தின்புனர் நிர்மாணத்துக்காக 2 கோடியே15 இலட்சம் ரூபா கோரப்பட்டுள்ளது. (த-4)

## மறியல்...

சிறைச்சாலையில் எவ் வாறு அனுமதி வழங்கப்பட்டது? என்றும் மன்று கேள்வியெழுப்பியது.

தனஞ்செயனின் அச்சுறுத்தலால் அச்ச மடைந்த சாட்சி கடந்த மாதம் 9 ஆம் திகதி அச்சுவேலி பொலிஸில் சந்தேகநபருக்கு எதிராக முறையிட்டார். ஆனால் அச்சுவேலி பொலிஸார் அந்த முறைப்பாடு தொடர்பில் உடனடியாக நீதிமன்றுக்கு அறிவித்திருக்கவில்லை. சுமார் ஒன்றரை மாதங்களின் பின்னர்தான் நேற்றுமுன்தினம் மல்லாகம் நீதிமன்றில் முதல் முறைப்பாட்டு அறிக்கையுடன் சாட்சிக்கு அச்சுறுத்தல் வழக்கைத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு மல்லாகம் நீதிவான் ஏ.ஜூட்சன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அச்சுவேலியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் தனஞ்செயன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் மீதான கொலை வழக்கு விசாரணை நாளைமறுதினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் விசாரணைக்கு வரவுள்ளது. இந்த நிலையில் தவறான வழிகளில் தனஞ்செயன் செயற்பட சிறைச்சாலை அதிகாரிகள் இடமளித்துள்ளதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இந்த வழக்கில் முக்கிய சாட்சி அச்சுவேலியில் உள்ளார். அவருக்கு அலைபேசியில் தனஞ்செயன் அச்சுறுத்தல் விடுத்து வந்துள்ளார்.

"யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குள் இருந்தவாறே சில மாதங்களாக அவர் அச்சுறுத்தல் விடுத்து வந்துள்ளார். முக்கொலை தொடர்பில் சாட்சி மேல் நீதிமன்றில் சாட்சியம் அளிக்கக்கூடாது என்பதனை முதன்மை விடயமாகக் கொண்டே அவர் அச்சுறுத்தல் விடுத்து வந்துள்ளார்" என்றும்

சிறைச்சாலைக்குள் இருந்தவாறு அலைபேசி பயன்படுத்தியமை அச்சுறுத்தியமை எவ்வாறு? என்றும் நீதிவான் கேள்வியெழுப்பினார். இரண்டு திணைக்கள அதிகாரிகளும் உரிய பதில் வழங்கவில்லை.

ஏற்கனவே, யாழ்ப்பாண சிறைச்சாலைக்குள்ளும் அலைபேசி பயன்படுத்தப்படுகிறது என்ற கருத்து இருந்து வந்த நிலையில் அதனை நிரூபிப்பதாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதனை மன்று சுட்டிக் காட்டியது. இது தொடர்பில் குறித்த இரண்டுதரப்பினருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்குமாறு நீதிவான் நேற்று பொலிஸ்மா அதிபருக்கும் சிறைச்சாலைகள் ஆணையாளருக்கும் தனித்தனியே பணித்தார். இந்த வழக்கு எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (வ-4)

# INVITATION FOR BIDS
## JAFFNA MUNICIPAL COUNCIL

1. The Chairman Local Authority Procurement Committee on behalf of the Municipal Council, Jaffna Northern Province, now invites sealed bids from eligible and qualified bidders for the Improvement Road works as described in the table below.

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of Road Construction for grade mentioned in the table below with the Institute for Construction Training and Development (ICTAD).

4. Qualifications requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) of the bidding document.

5. Interested bidders may obtain further information from the **Commissioner, Municipal.Council Jaffna. ( T.No: 021-2216468/ Fax 0212222334)** on any working day from **0900 hrs to 1400 hrs from 29 March 2017.**

6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Commissioner, Municipal Council , Jaffna from 29 March 2017 until 19 April 2017 from 0900 hrs to 1400 hrs upon payment of a non-refundable fees of Rs. 2000.00 + VAT.** The method of payment should be by cash.

7. Bids shall be delivered to the address below **The Commissioner, Municipal Council , Jaffna** on or before **1400 hrs on 19 April 2017.** Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

8. Bids shall be valid upto 77 days (Seventy seven) till 05 July 2017 after the deadline for bid submission.

9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table

| Se. no | Bid No | Description of Work | Engineer's Estimated Cost /(Rs in million) | Estimated Cost with all Taxes /(Rs in million) | Contract Period | Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Security Amount | Valid Period |
| 1 | JMC/WD/01/CF.Rd/ 2017/10 | Improvement of Vayalkarai Lane at Oodumadam. | 1.611 | 1.900 | 3 months | C 9 or above | 30,000.00 | 91 days (till 19.07.2017 ) |
| 2 | JMC/WD/01/CF.Rd/ 2017/11 | Improvement of Muththamil 4th, 5th & 8th Lanes. | 2.143 | 2.536 | 3 months | C 8 or above | 42,000.00 | 91 days (till 19.07.2017 ) |
| 3 | JMC/WD/01/CF.Rd/ 2017/12 | Improvement of Ceynor Road. | 0.825 | 0.974 | 3 months | C 9 or above | 15,000.00 | 91 days (till 19.07.2017 ) |
| 4 | JMC/WD/01/CF.Rd/ 2017/13 | Improvement of Ice Plant Road. | 0.919 | 1.084 | 3 months | C 9 or above | 18,000.00 | 91 days (till 19.07.2017 ) |
| 5 | JMC/WD/01/CF.Rd/ 2017/14 | Improvement of Kalaimagal Road. | 1.611 | 1.897 | 3 months | C 9 or above | 30,000.00 | 91 days (till 19.07.2017 ) |
| 6 | JMC/WD/01/CF.Rd/ 2017/15 | Improvement of Navanthurai Jetty Road | 0.871 | 1.027 | 3 months | C 9 or above | 17,000.00 | 91 days (till 19.07.2017 ) |
| 7 | JMC/WD/01/CF.Rd/ 2017/16 | Improvement of Thiruvalluvar Lane. | 0.722 | 0.855 | 3 months | C 9 or above | 14,000.00 | 91 days (till 19.07.2017 ) |
| 8 | JMC/WD/01/CF.Rd/ 2017/17 | Improvement of Valanpuram cross Road. | 2.185 | 2.590 | 3 months | C 8 or above | 44,000.00 | 91 days (till 19.07.2017 ) |
| 9 | JMC/WD/01/CF.Rd/ 2017/18 | Improvement of Penticost lane. | 2.334 | 2.752 | 3 months | C 8 or above | 46,000.00 | 91 days (till 19.07.2017 ) |

10. Pre bid meeting will be held **at 10.00 hrs on 11 April 2017** in the Municipal Council Building, Jaffna. Interested bidders may attend the pre-bid meeting at their own expenses.


*Chairman, Local Authority Procurement Committee,*
*Municipal Council, Jaffna.*
*Northern Province.*

*25.03.2017*

## மரண அறிவித்தல்

### நீக்கிலாப்பிள்ளை எட்வேட்

(ஓய்வுபெற்ற நீதிமன்ற ஊழியர்)



பிறப்பு 13.11.1950 இறப்பு 24.03.2017

மன்னார், எழுத்தூரைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கிலாப்பிள்ளை எட்வேட் (ஓய்வுபெற்ற நீதிமன்ற ஊழியர்) நேற்று (24.03.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி நீக்கிலாப்பிள்ளை அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் இராசமலரின் அன்புக் கணவரும் பெனடிற்யோசப் காலஞ்சென்ற மரியபுஸ்பராணி திரேசம்மா, இந்திராணி, அக்னஸ் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற எலன்திரேஸ் லீலாவதி, போல் குணரெட்ணம், AE இராஜேந்திரம், திருமதி ஆ. புஸ்பராணி மற்றும் சாள்ஸ் மரியநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2017) சனிக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈச்சமோட்டை

தகவல்
குடும்பத்தினர்.

உத்தியோகபூர்வ முடிவுகள்
NIYATHA JAYA
சீட்டிழுப்பு வாரம்: 551 வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 24.03.2017
வெற்றி இலக்கங்கள்
28 46 51 56 V
ரூ. 24,556,571/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

சீட்டிழுப்பு வாரம்: 116
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 24.03.2017
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 80,513,804/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
J 38 48 55 80
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
24.03.2017 2112 சிகப்பு
மீனம்
19 26 47 54
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 14, 422, 269/=
2017.03.26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்.

## பிரிட்டன்...

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுச் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை முன்னாள் பிரதமர் அமரர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரட்ணசிறி விக்கிரமநாயக்க 1960 ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை முக்கிய அரசியல்கதாபாத்திரமாக விளங்கியவர். தலைமை அமைச்சராக மூன்று தடவையும், எதிர்க்கட்சித் தலைவராகவும், அமைச்சராகவும், பிரதி அமைச்சர், நாடளுமன்ற உறுப்பினர், மாகாண சபை அமைச்சர் என பல்வேறு ரீதியில் அரசியலில் அரும்பெரும் பணியாற்றி அவர் அதிக அரசியல் அனுபவம் உள்ளவர்.

நாங்கள் அரசியல் ரீதியாக, கொள்கை ரீதியாக வேறுபட்டாலும் பொதுப் பிரச்சினை என்று வரும்போது ஒன்றிணைந்து செயலாற்றியுள்ளோம். எமக்கிடையே நல்ல உறவு இருந்தது ஒருபோதும் பிரச்சினைப்பட்டது கிடையாது. அரசியலில் இருக்கவேண்டிய இலட்சணம் இது. எமக்கிடையில் வேறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியும். ஆனால், நாடாளுமன்றத்துக்குள் ஒன்றிணைந்து கடமைகளைச் செய்யக் கூடியதாக இருக்க வேண்டும்.

அவ்வாறான ஒரு சந்தர்ப்பம் ஒன்றினை யுடியூப்பில் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நேற்று (நேற்று முன்தினம்) இங்கிலாந்து நாடாளுமன்றத்துக்கு அருகில் இடம்பெற்ற சம்பவத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவ்வாறு ஒன்றிணைந்து செயலாற்றினார்கள் என்பது எமக்கு சிறந்த உதாரணமாகும். அவ்வாறான தொடர்புகள் நாடாளுமன்றங்களில் உருவாகியுள்ளன. அதனை நாங்கள் பாதுகாக்க வேண்டும். என்னதான் கருத்து முரண்பட்டாலும் அவ்வாறான தொடர்புகளை நாங்கள் பேண வேண்டும்.

ரட்ணசிறி விக்ரமநாயக்க இங்கிலாந்தில் படித்தவர் என்பதால் அவர் அந்நிலையை உணர்ந்து சிறப்பாகச் செயற்பட்டார். பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற நடைமுறை என்ன என்பது உணர்ந்து அதனை முன்னெடுத்தார்.

சந்திரிகாவினதும், மகிந்தவினதும் காலத்தில் தலைமை அமைச்சராக இருந்தவர். இருவரினதும் நம்பிக்கையை வென்றவர் என்றால் அவர் உண்மையிலேயே சிறப்பானவர் தான்.

ஜே.ஆர். ஜயவர்தன சாவடைந்தபோது அவரது சாவுச் சடங்குகளைச் செய்ய ரட்ணசிறி முன்னின்று செயற்பட்டார். ஜே.ஆர். அரச தலைவராக இருந்த எமது ஆட்சிக்காலத்திலேயே அவர் சிறையில் அடைக்கப்பட்டார். இருந்த போதிலும், எந்த வைராக்கியமும், குரோதமும் இன்றி அவர் ஜே.ஆரின் இறப்புச் சடங்குகளைச் செய்ய முன்னின்று செயற்பட்டார்.

அவருக்கும் எனக்கும் நீண்ட காலமாக கொடுக்கல் வாங்கல் இருந்தது. அவர் அதிகாரத்தில் இருந்தபோது எனக்கு உதவிகளைச் செய்திருந்தார். 2015 ஆம் ஆண்டு அவர் அரசியலை விட்டு ஓய்வுபெற்ற பின்னர் மக்களின் தேவைகளுக்காக என்னுடன் அவர் தொடர்பு கொள்வார். அவரது தேவைகளை நிறைவு செய்வதற்காகவே நான் எனது காரியாலயத்தில் ஒருவரை நியமித்திருந்தேன் - என்றார்.

## கிளிநொச்சியில்...

பல தீ விபத்துக்கள் ஏற்பட்டபோதும் தீயணைப்புச் சேவை இன்மையால் அவற்றைத் தவிர்க்க முடியவில்லை. இறுதியில் கடந்த ஆண்டு கிளிநொச்சி பொது அங்காடியில் ஏற்பட்ட பெரும் தீயினால் பல மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து மாவட்டத்துக்கு ஒரு தீயணைப்புச் சேவை கண்டிப்பாகத் தேவை என வலியுறுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இதற்காகத் தற்போது 97 மில்லியன் ரூபா மாவட்டச் செயலகத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கரைச்சிப் பிரதேச சபைக்குச் சொந்தமான கரடிப்போக்குச் சந்தியில் அமைந்துள்ள காணியில் இதற்கான அலுவலகம் அமைக்கப்பட்டு வாகன வசதியும் ஏற்படுத்தப்படவுள்ளதாக மாவட்டச் செயலக வட்டாரங்கள் கூறின.

கிளிநொச்சி சந்தைப் பகுதியில் உள்ள கடைத்தொகுதிப் புனரமைப்புக்காகவும் 150 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு இந்த ஆண்டுக்கான பணிகளுக்காக 80 மில்லியன் ரூபா அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பணிகள் தொடர்பில் நேற்று முன்தினம் ஆராயப்பட்டு மாதிரி வரைபடம் தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் அடுத்த கட்டப் பணிகளை முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-101)

## பொலித்தீன்களுக்கு...

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் சாவகச்சேரி நகரசபையுடன் இணைந்து நடத்திய பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்கள் பாவனையைக் குறைப்போம் என்னும் விழிப்புணர்வு நடைபவனி நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதன் பின்னர் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் செயலாளர் இதனைத் தெரிவித்தார்.

மீசாலை பொது நூலக முன்பாக ஆரம்பமான விழிப்புணர்வு நடை பவனியில் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. நடைபவனி ஏ9 சாலையூடாகச் சுமார் நான்கு கிலோ மீற்றர் தூரம் நடைபெற்றது. நடைபவனியில் சுகாதாரத் திணைக்களத்தி னர், கிராம அலுவலர்கள், வாழ்வின் எழுச்சி அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள், பிரதேச செயலக அலுவலர்கள், நகரசபை அலுவலர்கள், பொலிஸார், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற உறுப்பினர்கள் உட்பட பெருமளவு பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

பொலித்தீன் பாவனை விரைவில் இல்லாமல் போகக்கூடிய சட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. 1896 ஆம் ஆண்டு இரசாயனக் கலவை மாற்றத்தினால் உருவான பொலித்தீன் பொருள்கள் கடந்த 50 வருடங்களாகப் பன்னாடுகளின் சுற்றாடலை மாசுபடுத்தும் பொருள்களாக மாறி வருகின்றன.

தற்போது வருடாந்தம் 800 மில்லியன் தொன் பொலித்தீன். பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பொலித்தீன் பொருள்களின் பாவனையை நாங்கள் குறைத்தால் உற்பத்தியும் குறைவடைந்து இல்லாமலே போகும். பொலித்தீன் தாள்களை எரித்து அழிக்கலாமென பலர் நினைக்கின்றனர். எரிக்கும்போது ஏற்படும் புகை சுற்றாடலை மாசடையச் செய்வதுடன் எமக்குப் பல்வேறு நோய்களை உருவாக்குகின்றது என்பது தெரியாத நிலையில் உள்ளோம் என்றார் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அ.ஜென்சன் றொனால்ட். (த-9)

## யாழ்ப்பாணம்...

வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வில் பங்கேற்பதற்காக எதிர்வரும் 9 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருவதற்கு திட்டமிட்டுள்ளார். இந்த நிலையில் திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நடிகர் ரஜினிகாந் தற்போது சங்கர் இயக்கத்தில் '2.0' என்ற படத்தில் நடித்து வருகிறார். இந்தப் படத்தை லண்டனைச் சேர்ந்த லைக்கா நிறுவனம் தயாரித்து வருகிறது. இந்த நிறுவனத்தின் தலைவர் சுபாஸ்கரன், இலங்கை முன்னாள் அரச தலைவரான ராஜபக்சவுக்கு நெருக்கமானவர் என்று கூறப்பட்டு வருகிறது.

தமிழ் மக்களை வஞ்சிக்கும் இலங்கையின் கொடும்போக்கைக் கண்டித்து எல்லோரும் பேசவேண்டிய நேரத்தில், அதைத் திசைதிருப்பும் உத்தியாகவே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறதோ என்கிற ஐயம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. இலங்கை அரசுக்குத் துணைபோகும் பா.ஜ.கவின் அனுமதியோடு இவ்வறிவிப்புச் செய்யப்பட்டிருந்தாலும் வியப்பதற்கில்லை.

ஏனெனில், ரஜினிகாந்த் போன்ற புகழ்பெற்ற நடிகர் ஒருவரை வைத்து ஒருவிழாவை நடத்தி அந்த ஒளிவெள்ளத்தில் மக்களின் உண்மையான குறைகளை இருட்டில் தள்ளிவிடுவது மட்டுமின்றி, பாதிக்கப்பட்ட மக்களுக்கான மறுவாழ்வு மிக வேகமாக நடந்துகொண்டிருக்கிறது என்று உலகத்துக்குக் காட்டவும் இந்த நிகழ்ச்சி பயன்படும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.

லைக்கா நிறுவனத்துக்கும், மிகப்பெரும் செலவில் தயாரிக்கப்படுகிற அந்தப் படத்துக்கான உலக அளவிலான விளம்பரமாக அந்த நிகழ்ச்சியைப் பயன்படுத்திக் கொள்ள எண்ணுகிறது. இலங்கை அரசுக்கும் தனியார் முதலாளிக்கும் நன்மை பயக்கும் இந்நிகழ்வைச் செயற்படுத்த எவ்வித நியாயமுமின்றி உறவுகள், உடைமைகள் மட்டுமின்றி உரிமைகளையும் இழந்து நிற்கும் அப்பாவி மக்களின் கொடுந்துயரம் பயன்படுகிறது என்பதை நினைக்கும்போது உள்ளம் கொதிக்கிறது.

கலைஞர்கள் மக்களை மகிழ்விப்பவர்களாக மட்டுமே இருக்க வேண்டும், நடிகர் ரஜினிகாந், இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உலகத் தமிழர்களின் வெறுப்புக்கு ஆளாகவேண்டாம் என்று விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் கேட்டுக் கொள்கிறோம். 2009 ஆம் ஆண்டு போர் முடிந்து எட்டாண்டுகள் கடந்துவிட்ட பிறகும் தமிழர்களுக்குக் குறைந்தபட்ச நீதியைக் கூட வழங்க முன்வராத இலங்கை அரசை வன்மையாக கண்டிக்கிறோம். இலங்கைத் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் வரை களமாடுவோம் - என்றார். (த-5)

## 1983 கலவரம்...

வாய்மூல விடைக்கான கேள்வி பதில் நேரம் ஆரம்பமானது. இதன்போது, மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவிடம் ஒழுங்குப் பத்திரத்தில் எழுப்பியிருந்த கேள்விக்கானபதிலை ஆளும் தரப்பு பிரதம கொறடா அமைச்சர் கயந்த கருணாதிலக சபையில் ஆற்றுப்படுத்தியிருந்தார்.

உதய கம்மன்பில ஒழுங்குப் பத்திரத்தில் எழுப்பியிருந்தகேள்வியில், 1983ஆம்ஆண்டு ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் இடம்பெற்ற இனக்கலவரங்களின்போது உயிரிழந்த, காயமடைந்த மற்றும் இடம்பெயர்ந்த சிங்களவர்களின் மொத்த எண்ணிக்கை எத்தனை எனவும், அவர்கள் வாழ்ந்த மாவட்டங்களுக்கமைய வெவ்வேறாக எத்தனை எனவும் கேட்டிருந்தார்.

இந்தக் கேள்விக்குச் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு அனுப்பிவைத்திருந்த பதிலில்,

"பொலிஸாரினால் மாவட்டங்களுக்கு ஏற்ப தரவுகள் ஒன்று திரட்டப்படுவதில்லை. 42 பொலிஸ் பிரிவுகள் மட்டத்திலேயே தரவுகள் திரட்டப்படுகின்றன. அந்தப் பிரிவுகளில் 1983ஆம் ஆண்டு ஜூலைமற்றும் ஓகஸ்ட் கலவரங்கள் பற்றிய தரவுகளைப் பொலிஸ்மா அதிபர் கோரியிருந்த போதிலும் 6 காரணங்களினால் தரவுகள்அனைத்தும் அழிந்துள்ளன. எனினும், மா த்தறை பொலிஸ் பிரிவில் மாத்திரம் ஒரு நபரின்கொலை தொடர்பான தரவுகள் கிடை க்கப் பெற்றுள்ளன.

இந்தச் சம்பவம் இடம்பெற்று 33 வருடங்கள் கடந்துள்ளமையால் ஆவணங்கள் அழிந்துள்ளமை, குறித்த தகவல்கள் அடங்கிய ஆவணம் பொலிஸ் திணைக்களக் கட்டளை பி8 இன் பிரகாரம் அழிக்கப்பட்டிருத்தல், பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு ஏதும் கிடைக்கப் பெறாமை, சுனாமி இடர் மற்றும் வெள்ளப் பெருக்கு போன்ற இயற்கை இடர்கள் காரணமாக ஆவணங்கள் அழிந்துள்ளமை, போர்ச் சூழ்நிலை காரணமாக பொலிஸ் நிலையங்களில் ஆவணங்கள் உரிய முறையில் இற்றைப்படுத்தப்படாமை மற்றும் பயங்கரவாதத் தாக்குதல்கள் காரணமாக ஆவணங்கள் அழிந்துள்ளமை போன்ற ஆறு காரணங்களினால் பொலிஸ் நிலையங்களில் தரவுகள் எதுவும்இல்லை" என்று அதில்குறிப்பிடப்பட்டுள்ளது. (த-4)

## கடற்படைப்...

குல்லாப் படகு மூலம் மீன்பிடியில் ஈடுபட்ட விடத்தல்தீவு 7 ஆம் வாட்டாரத்தைச் சேர்ந்த தாசன் கில்மன் (வயது-39) என்பவர் கடலில் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார். அவர் ஒரு பிள்ளையின் தந்தை.

கடற்பாதுகாப்பில் ஈடுபட்ட கடற்படையினர் கடலில் படகு ஒன்று மூழ்கிக் கிடப்பதாகவும், அதனைச் சென்று பார்வையிடுமாறும் கரையில் உள்ள மீனவர்களுக்குத் தெரிவித்துள்ளனர். மீனவர்கள் படகுகள் மூலம் குறித்த பகுதிக்குச் சென்று தேடுதல்களை மேற்கொண்டபோது முதலில் படகு மீட்கப்பட்டது. தொடர்ந்து குறித்த மீனவர் பயன்படுத்திய ரோச் லைட் கடலில் மிதந்து வந்த நிலையில் மீட்கப்பட்டது. அதன் பின்னர் குறித்த மீனவர் சடலமாக மீட்கப்பட்டார். மீனவரின் தலை மற்றும் கழுத்துப் பகுதியில் பெருங்காயங்கள் காணப்பட்டன.

கடற்படையினரின் படகு குறித்த மீனவரின் படகுடன் மோதியதாலேயே விபத்து ஏற்பட்டுள்ளதாக மன்னார் மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

சடலம் பள்ளமடு வைத்தியசாலையில் வைக்கப்பட்டது. குறித்த மீனவர் கடற்படையினரின் படகு மோதியதால் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டதால் விடத்தல்தீவு கிராம மக்கள் விடத்தல் தீவு கடற்படை முகாமை நேற்று முன்தினமிரவு முற்றுகையிட்டனர். இதனால் கிராமத்தில் பதற்ற நிலை ஏற்பட்டது.

சம்பவ இடத்துக்கு அருட்தந்தையர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜீ.குணசீலன் ஆகியோர் விரைந்து மக்களுடன் கலந்துரையாடினர். அடம்பன் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வரும்போது சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்பட்டிருக்கவில்லை. அதனால் மக்கள் வீதியில் அமர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாகாண சபை உறுப்பினர் குணசீலன் விடயத்தை பொலிஸ் உயர் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்று சந்தேக நபர்களான கடற்படைச் சிப்பாய்கள் கைது செய்யப்படாமை குறித்து கேள்வி எழுப்பினர். அதன் பின்னர் கடலில் படகில் பயணித்த இரண்டு கடற்படையினர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணையிலுள்ளனர்.

மீனவரின் சடலம் பள்ளமடு வைத்தியசாலையில் இருந்து மன்னார் பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இதேவேளை, விடத்தல்தீவுக் கடற்பரப்பில் தொடர்ச்சியாக மீனவர்களின் படகுகள் மீது கடற்படையினரின் படகு மோதி விபத்தை ஏற்படுத்தி வருவதாகவும், அந்த வகையிலே குறித்த விபத்து இடம் பெற்றுள்ளதாகவும் மீனவர்கள் தனது கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். (த-4-56)

## இராணுவ...

முற்படுத்தப்பட்டபோதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு ரத்துபஸ்வெல வெலிவேரிய சந்தியில் சுத்தமான குடிதண்ணீர் கோரி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதனால் மூவர் உயிரிழந்தனர். இதில் இருவர் துப்பாக்கிச் சூட்டிலும் ஒருவர் தட்டையான ஆயுதத்தால் தாக்கப்பட்டும் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## மிக ஆபத்தானது...

குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது: இலங்கைக்கு எதிரான முதல் பிரேரணையில் நிராகரிக்கப்பட்ட அனைத்தையும் இரண்டாம் கட்டத்தில் நிறைவேற்றவும் புலிகள் எதிர்பார்க்கும் அனைத்தையும் பெற்றுக்கொள்ளவுமே தற்போது பொறுப்புக் கூறல் விடயத்தில் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலையிட்டு இந்த நகர்வை தடுக்கவேண்டும். இல்லாவிட்டால் இந்தப் பயணம் பன்னாட்டு விசாரணையில் வந்து முடியும்.

இலங்கைக்குக் கடந்த 2015 ஆம் ஆண்டு ஜெனிவா பிரேரணையை நிறைவேற்றுவதற்கான இரண்டு வருட கால அவகாசம் வழங்கியிருப்பதன் மூலம் ஆரம்பத்தில் இலங்கை அரசு எதிர்த்த, நிராகரித்த விடயங்களை இந்த அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

நாட்டுக்கு எதிராகக் கடந்த காலத்தில் பன்னாட்டுத் தரப்பு கொண்டுவந்த பிரேரணையை முன்னைய அரசு எதிர்த்த நிலையில் இந்த அரசு அதனை முழுமையாக ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்த இணக்கம் தெரிவித்துள்ளது. அமெரிக்க பிரேரணைக்கு மீள் இணக்கம் தெரிவித்து முழுமையாக நிறைவேற்ற அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

பிரபாகரனைக் காப்பாற்ற முயற்சி செய்த நபர்களே இன்று ஜெனிவா பிரேரணையைக் கொண்டுவந்துள்ளனர். இதில் புலிகளை நியாயப்படுத்திய நபர்களும் புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் இறுதிப்போரில் பிரபாகரனைக் காப்பாற்ற கடும் முயற்சி எடுத்த நபர்கள் தெரிவிக்கும் கருத்துக்களையும் நிறைவேற்றவே அரசு முயற்சிக்கிறது.

ஆகவே தமிழர் தரப்பும் புலம்பெயர் அமைப்புகளும் புலிகளின் பிரதிநிதிகளும் எதை எதிர்பார்த்து செயற்படுகின்றனரோ அதை அடையும் பாதையை அரசு தனது இணக்கத்தின் மூலம் ஏற்றுக்கொண்டுள்ளது - என்றார். (த-4)

## 20 கிலோ...

கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டதாக மதுவரி அத்தியட்சகர் எஸ். செந்தூர்செல்வன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறையிலிருந்து வெளிமாவட்டத்துக்கு கடத்தி வரப்பட்ட ஒரு தொகுதி கேரளக் கஞ்சா புளியங்குளம் பகுதியிலிருந்து நெடுங்கேணி செல்லும் பேருந்து நிழற்குடையில் வைத்து மீட்கப்பட்டது. அந்தப் பொதியை வைத்திருந்த குற்றச்சாட்டில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 21 வயதுடைய ஒருவரைக் கைது செய்துள்ளோம். அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார் என்று அவர்கள் மேலும் கூறினர். (த-4)

# எல்லாம் தெரிந்தவன்

அமைதியான அந்த மலை நாடு மாணவர்களின் பேச்சிலும் சிரிப்பிலும் கும்மாளத்திலும் கலகலத்துக் கொண்டிருந்தது. இருபத்தைந்து மாணவர்கள் மூன்று ஆசிரியர்களுடன் சுற்றுலாப் பயணமாக அந்த மலைப் பிரதேசத்துக்கு வந்திருந்தனர்.

வானத்தைத் தொடும் மலை முகடுகளில் மரங்கள், பனியில் குளித்த புத்தம் புதிய பூக்கள், மரஞ்செடி கொடிகள், ஒலி எழுப்பும் பறவையினங்கள் இவற்றையெல்லாம் கண்ட மாணவர்களுக்கு உற்சாசம் கரை புரண்டது. "சேகர் அங்கே பார் மரங்கொத்தி மரத்தைக் கொத்தும் வேகத்தை" என்றான் குமார். சேகரோ "உதெல்லாம் எனக்குத் தெரியாதல்லவே. காணாத ஒன்றைக் கண்ட மாதிரி கத்துகிறாய்" என்று ஏளனமாகவும் துடுக்காகவும் பதில் கூறினான். அந்த வகுப்பிலேயே கொஞ்சம் பணக்காரப் பையன் சேகர். அதனால் ஆணவமும் கொஞ்சம் அதிகம்தான். எதுவும் தனக்கே தெரிந்த மாதிரி எவரையும் எடுத்தெறிந்தும், ஏளனமாகவும் பேசுவான். பல தடவைகள் ஆசிரியர் அந்தக் குணங்களைத் தவிர்த்து நடக்கும்படி புத்திமதியும் கூறியுள்ளார்.

அந்தச் சூழலில் ஆசிரியர் தாவர இயல் பற்றியும் அங்கு காணப்பட்ட மலர்கள் செடி கொடிகள் பற்றியும் விளக்கிக் கொண்டிருந்தார்.



"எல்லா மலர்களும் பல்வேறு நிறங்களைக் கொண்டிருக்க மல்லிகை, முல்லை, அல்லி என்பன மட்டும் வெண்மை நிறமாக இருப்பதேன்? காரணம் தெரியுமா? என்றார் மாணவர்களை நோக்கி. மற்றவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்துத்துக் கொண்டிருக்க சேகர் மற்றவர்களை நோக்கி ஒரு ஏளனப் பார்வையுடன் "இயற்கை தன்னிடமுள்ள நிறங்களை எல்லாம் மலர்களுக்கும் அளித்த போது வெண்மை நிறம் மட்டுமே எஞ்சியது. ஆகையால் எஞ்சியிருந்த அந்த மூன்று மலர்களுக்கும் அதையே கொடுத்து விட்டது" என்றான் கர்வத்தோடு. 'சேட் கொலரையும்' ஒரு தடவை தூக்கி விட்டுக் கொண்டான். இதை ஆசிரியரும் கவனிக்கத் தவறவில்லை. ஆசிரியரின் அடுத்த வினா. "இம்மலர்கள் மூன்றும் எப்போது மலர்கின்றன?" "இதென்ன சார், மற்ற மலர்களைப் போல காலையில் தானே!" என்றான் மீண்டும் சேகர். "இல்லை இரவில்" என்றான் குமார். "குமாரின் விடைசரி. ஆனால் நிறங்கள் பற்றிய விடை எவருக்கும் தெரியவில்லை. மலர்களின் மகரந்தச் சேர்க்கை நடைபெறுவதற்கு வண்டு, பூச்சிகளின் தொடர்பு அவசியம் என முன்பே படித்துள்ளீர்கள். இரவில் வேறு வர்ணங்கள் பூச்சிகளுக்குத் தெரியாது. வெள்ளை 'பளிச்' சென்று தெரியும் அதனாலேதான் இரவில் மலர்பவை வெண்மையாக இருந்து பூச்சி வண்டுகளைக் கவருகின்றன" என்று விளக்கமளித்தார் ஆசிரியர். சேகர் மெதுவாக தலையைக் குனிந்து கொண்டான்.

அடுத்து அருவியில் படகு உலா. நீர்ப் பயணம் பற்றிய பல அறிவுறுத்தல்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. ஆனால் சேகரோ அவற்றைச் செவிமடுத்து கேட்காமல் தனக்கு நீச்சல் தெரியுமென்றும் நீரில் வீழ்ந்தால் நீச்சல் போட்டு தப்பி விடுவேனென்றும் தற்பெருமை பேசினான். மோட்டார் படகில் பயணம் ஆரம்பமானது. மற்றைய மாணவர்களுடன் அல்லாமல் படகின் முன் பகுதியில் தனியாக நின்று சேகர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். ஆசிரியர் எச்சரித்தும் கேட்கவில்லை.

திடீரென ஒரு திருப்பத்தில் படகு திரும்பிய போது, சேகர் படகில் இருந்து தூக்கி வீசப்பட்டான். எல்லா மாணவர்களும் அவலக் குரல் எழுப்பினர். ஆசிரியர்கள் படகைத் திருப்பி சேகர் விழுந்த இடம் சென்று, அங்கே நீரில் மூழ்கிக் கொண்டிருந்த சேகரைக் காப்பாற்றி மயக்கமுற்றிருந்த அவனுக்கு முதற் சிகிச்சையும் அளித்தனர். சேகர் கண் விழித்தான். மாணவர்கள் "நீ நீந்தத் தெரியும் என்றாயே" என்ன நடந்தது? என்றனர். சேகர் தலை குனிந்தான். அனைவரிடமும் மன்னிப்பு கேட்டுக் கொண்டான். ஆசிரியர்கள் அவன் முதுகில் ஆதரவோடு தட்டிக்கொடுத்தனர். மாணவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

**பணியுமாம் என்றும் பெருமை சிறுமை**
**அணியுமாம் தன்னை வியந்து - குறள் 978**

# பறவைகள் பலவிதம்



பொதுவாக பறவைகள் பற்றிய ஆராய்ச்சியில் பறவைகளின் கால்களில் சிறு வளையத்தை மாட்டி அதன் மூலம் பறவை இனங்களின் வாழ்வியல் முறை நடமாட்டம், ஆயுள், இன விருத்தி போன்றவற்றை ஆய்வு செய்கின்றனர். பறவைகளின் கால்களில் மாட்டப்படும் மெட்டி போன்ற அமைப்பில் சில குறியீட்டு தகவல்கள் இருக்கும். வளையம் இடப்பட்ட பறவையைக் காணும் மற்றொரு ஆய்வாளர் அந்த குறியீட்டை வைத்து வளையத்தை மாட்டியவருடன் தொடர்பெடுத்து பறவை தற்போது இருக்கும் இடம் அதன் நடவடிக்கைகள் என்பவற்றை அவருக்கு அறிவிப்பார். அப்படிப் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பறவைகள் பற்றிய சில தகவல்கள்.

- ஆஸ்திரேலியாவில் வாழும் பறவை ஒன்று ஒன்பது நிறங்களில் தெரியும்.
- கடல் புறாக்கள் நீரில் மிதந்து கொண்டே தூங்கும்.
- பச்சோந்திப் பறவையின் கண்கள் எப்போதும் சுழன்று கொண்டே இருக்கு
- மரங்கொத்திப் பறவை மரத்தை ஒரு வினாடியில் 30 தடவைகள் கொத்து
- குவாரின் என்ற பறவை மல்லாந்தபடியே தூங்கும்.
- புறா ஓய்வெடுக்காமல் சுமார் ஆயிரம் கிலோமீற்றர் வரை பறக்கும்.
- புறா நீரை உறிஞ்சியே குடிக்கும்.
- நெருப்புக்கோழி ஒரே சமயத்தில் 100 இற்கும் மேற்பட்ட முட்டைகளை இடு
- மிகப் பெரிய நீர்ப் பறவை அன்னம்.
- வெட்டுக் கிளியை வேட்டையாடும் பறவை மைனா.
- வான் கோழிகளின் பிறப்பிடம் அமெரிக்கா.
- நியூசிலாந்தில் காக்கைகள் இல்லை.

# அப்பாவுக்கு என்ன தெரியும்?
## தந்தையைப் பற்றி மகன்



| | |
|---|---|
| 5 வயதில் | :- என் தந்தையால் செய்ய முடியாதது எதுவுமில்லை. |
| 7 வயதில் | :- என் தந்தைக்குப் பலவிடயங்களைப் பற்றி நன்கு தெரியும். |
| 10 வயதில் | :- என் தந்தைக்கு எல்லா விடயங்கள் பற்றியும் நன்கு தெரியும். |
| 12 வயதில் | :- என் தந்தைக்கு ஒன்றுமே தெரியாது. |
| 14 வயதில் | :- அவரா அவருக்கு, காலம் மாறியது எங்கே புரிகிறது. |
| 21 வயதில் | :- கிடக்கிறார்; அவர், அவரிடம் போய் யோசனை கேட்பதா? |
| 35 வயதில் | :- ஏதோ கொஞ்சம் தெரியும் |
| 40 வயதில் | :- அவர் என்ன நினைக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்வதில் தப்பில்லை |
| 45 வயதில் | :- அவரின் யோசனை கேட்டு பின் முடிவு எடுக்கலாம். |
| 50 வயதில் | :- என் தந்தையார் இது போன்ற விடயங்களில் எவ்வளவு சிறப்பாகத் தீர்மானம் எடுப்பார் தெரியுமா? |
| 55 வயதில் | :- அவர் இல்லாதது உண்மையிலேயே பெரிய கவலையாக இருக்கிறது. ஏனென்றால் அவரின் ஆலோசனையைக் கேட்க முடியாமல் போய் விட்டதே, அவர் இன்னும் கொஞ்சக் காலம் எம்மோடு வாழ்ந்திருக்கலாம் |
| 60 வயதில் | :- எனது வயதில் அவருடைய அறிவும் அனுபவமும் எங்கே? எனக்கேன் இது இல்லாது போய் விட்டது? |

# பேறுகள் பதினாறு

தமிழ் மக்களின் திருமணச் சடங்குகளில் மணமக்களை வாழ்த்துகையில் பதினாறும் பெற்று பெரு வாழ்வு வாழ்க என வாழ்த்துவது பெரிதும் வழக்கம். ஆனால் அந்தப் பதினாறும் (பதினாறு பேறுகளும்) எவை என்பதை அறிந்து கொள்வதில் நாம் அக்கறைப்படுவதில்லை. மேலும் பதினாறு பேறுகள் பதினாறு பிள்ளைச் செல்வங்களென்றதப்பான கருத்தும்நிலவிவருகிறது. தற்காலத்தில் பதினாறு பிள்ளைகள் என்ற பதம் நகைச் சுவையாகவும் கொள்ளப்படுகிறது. அப்படியாயின் பதினாறு பேறுகளும் எவையென அறிவோம்.

1. நிறைவான கல்வி
2. கபடமற்ற நட்பு
3. நீடித்த ஆயுள்
4. குன்றாத வளம்
5. செல்லாத இளமை
6. பரவசமான பக்தி (அன்பு)
7. நோய்களற்ற உடல்
8. சலியாத மனம்
9. அன்பான துணைவி
10. தவறாத சந்தானம் (நல்ல மக்கள்)
11. தாளாத கீர்த்தி
12. மாறாத வார்த்தை
13. தடையற்ற கொடை
14. தொலையாத செல்வம்
15. கோணாத செயல்
16. மகிழ்ச்சியான வாழ்வு என்பனவாம்.

## படங்களுக்கிடையேயான வேறுபாடுகளை இனம் கண்டு வட்டம் இடுவோம்



## சொற்களை ஒழுங்குபடுத்தி வசனம் எழுதுவோம்

1. மணி / கோவில் / கேட்டது / ஓசை

.................................................................

2. இரவில் / ஒளி / சந்திரன் / தருவான்

.................................................................

3. சோ / மழை / பெய்தது / என

.................................................................

4. இதயம் / பட / என்று / அடித்தது / பட

.................................................................

5. எழுத்து / கல்வி / இளமையில் / சிலையில்

.................................................................

6. தரத்தில் / நான் / படிக்கிறேன்/ இரண்டாம்

.................................................................

# இதயமே .... இதயமே

ஆறு அங்குல நீளமும் நான்கு அங்குல அகலமும் கொண்டது தான் எமது இதயம். ஒரு கைப்பிடியின் அளவு எவ்வளவோ இதயத்தின் அளவும் சற்றேறக் குறைய அவ்வளவுதான் நாளொன்றுக்கு சுமார் அறுபதாயிரம் மைல்கள் நீளமுள்ள குருதிக் குழாய்கள் வழியாக இதயம் குருதியை அனுப்பிவைக்கிறது. பளுதூக்கும்பயில்வானின்கைத்தசைகள்எவ்வளவு கடினமாக உழைக்கின்றனவோ அதைப் போல இரு மடங்கு அதிகமாக இதயத் தசைகள் இயங்குகின்றன. இதயத்துக்கு ஓய்வே கிடையாது என நாம் நினைக்கிறோம். ஆனால் ஒரு துடிப்புக்கும் இன்னொரு துடிப்புக்குமிடையில்இதயம்சற்றுஓய்வுஎடுத்துக்கொள்கிறது. இந்தஓய்வு நேரம் அரை வினாடிக்கும் குறை[illegible]ம். நமது குருதியில் கொலஸ்ட்ரோலின் அளவு150 மில்லிகிராமி[illegible] 300 மில்லிகிராம் வரை சாதாரணமாக காணப்படும். [illegible] உண்ணும் உணவில் உள்ள கொழும்புச் ச[illegible] கொலஸ்ரோல். கொழுப்புச் சத்து அதி[illegible] உணவுகளை நாம் அதிகம் உண்ணு[illegible] மேலதிக கொழுப்பு குருதிக்குழாய்களி[illegible] தினம் கொஞ்சங் கொஞ்சமாகப் படிந்து [illegible] ஒரு நாள் இதயத்துக்கு குருதியை [illegible]டாமல் அடைத்துவிடுகிறது. அப்பொழுதே[illegible]வலியும் அதிகமானால் மாரடைப்பும் ஏற்படுகிறது.



# பொம்மர்ஸ் அணி அசத்தல் ஆட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 25
வடமராட்சி, பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்குகளில் பதிவு செய்யப்பட்ட கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வதிரி பொம்மர்ஸ் அணி அசத்தல் வெற்றிபெற்றது.
வல்வெட்டித்துறை றெயின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வை கருணாகரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இறுதி வரை தனது ஆதிக்கத்தை உறுதிபட நிலைப் படுத்திக்கொண்ட பொம்மர்ஸ் அணி முடிவில் 5:0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது. (ம-23)



அகிலன்



அஸ்வின்

# சமநிலையில்

யாழ்ப்பாணம், மார்ச் 25
உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இரு ஆட்டங்கள் சமநிலையில் முடிவ டைந்தன.
உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது.
நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணியினரும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்ததனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில்இருஅணியினரும்தலாஓர்கோலைப் பதிவுசெய்ததனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ம-23-108)



சிறி

# கிண்ணம் வென்றது இளந்தென்றல் அணி

கரணவாய், மார்ச் 25
சமனிலை தவிர்ப்பு உதைமூலம் அன்ரனி ஜெகநாதன் வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றியது அளம்பில் இளந்தென்றல் அணி.
வடக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெயநாதன் நினைவாக முல்லைத்தீவு மாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் முல்லைத்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.
முல்லைத்தீவு சென். யூட் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக் கழகம் பலப்பரீட்சை நடத்தியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியாளரைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சமநிலைத் தவிர்ப்பில் வென்று சம்பியனானது இளந்தென்றல் அணி.
ஆட்டநாயகனாக அளம்பில் இளந்தென்றல் அணியைச் சேர்ந்த அகிலன், தொடராட்டநாயகனாக முல்லைத்தீவு சென். யூட் அணியின் சிறி, சிறந்த கோல் காப்பாளராக அளம்பில் இளந்தென்றல் அணியின் அஸ்வின் ஆகியோர் தெரிவாகினர். (ம-108)

## கூடைப்பந்தாட்ட அணித்தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 25
யாழ்ப்பாண மாவட்ட ஆண்கள் கூடைப்பந்தாட்ட அணித்தெரிவு கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இன்று இடம்பெறவுள்ளது.
காலை 7.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இந்த அணித்தெரிவு இடம்பெறவுள்ளது. எனவே அனைத்து கூடைப்பந்தாட்ட கழகங்களின் வீரர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-23)



# இன்றைய மோதல்

யாழ்ப்பாணம், மார்ச் 25
உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாம் சுற்று ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# எல்லே இன்று

கிளிநொச்சி, மார்ச் 25
கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான எல்லே தொடர் கிளிநொச்சி மத்தியகல்லூரிமைதானத்தில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. (ம)

# பாடும்மீன் – யுப்பிற்றர்ஸ் நாளை எதிர்த்து மோதல்

யாழ்ப்பாணம், மார்ச் 25
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் தேசிய ரீதியில் நடத்தும் ஏவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நாளை இடம்பெறவுள்ள ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து கொழும்பு யுப்பிற்றர்ஸ் அணி மோதவுள்ளது.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நாளை இரவு 7 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. (ம-23)

# ஒருநாள் தொடர் இன்று

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் தம்புள்ள மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது.
இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி இரண்டு டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரை 1:1 என்று சமன்செய்து வியக்கவைத்தது.
இதனால் ஒருநாள் தொடர் தொடர்பான எதிர்பார்ப்புக்கள் அதிகமாகியுள்ளன. முதலாவது ஆட்டம் இன்று ஆரம்பமாகிறது.
இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதியும் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் ஏப்ரல் முதலாம் திகதியும் நடைபெறும்.
ஒருநாள் தொடரை அடுத்து ரி-20 தொடர் எதிர்வரும் 4 ஆம் திகதி ஆரம்ப மாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கபடி நாளை

கிளிநொச்சி, மார்ச் 25
கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கபடித் தொடர் 155ஆம் கட்டையில் அமைந்துள்ள இளைஞர் கழக மைதானத்தில் நாளை இடம்பெறவுள்ளது. (ம-23)





தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றன. பெண்கள் பிரிவில் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் 16 வயதுப் பிரிவு அணி முதலிடத்தையும், 18 வயது பிரிவு அணி இரண்டாமிடத்தையும் தமதாக்கின. (ம-9)

# டோனியிலும் தெளிவில்லை

2019ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரில் விளையாடுவது தொடர்பில் தெளிவற்ற பதிலொன்றை வழங்கியுள்ளார் இந்திய அணியின் முன்னாள் தலைவர் டோனி.

இந்திய அணியின் தலைவராக நீடித்துவந்த டோனி, கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தனது பதவியில் இருந்து விலகினார். தற்போது கோக்லியின் தலைமையில் விளையாடி வருகிறார். டோனி 2019ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் விளையாடுவாரா என்பதே தற்போது பலரினதும் எதிர்பார்ப்பாக உள்ள நிலையில் டெல்லியில் நடந்த நிகழ்வில் கலந்துகொண்டு 2019ஆம் ஆண்டு உலகக்கிண்ணம் தொடரில் இரு வேறு கருத்துக்களை அவர் பதிவுசெய்துள்ளார்.

2019ஆம் ஆண்டு உலகக்கிண்ணம் தொடர்பில் தற்போது எதுவும் சொல்ல இயலாது. அடுத்து வரும் இரு ஆண்டுகளில் சில வேளைகளில் பல மாற்றங்கள் நடக்கலாம். தற்போதிருக்கும் உடல் தகுதி யுடன் இருந்தால் 2019ஆம் ஆண்டின் பின்னரும் விளையாடுவேன். இல்லாவிட்டால் முன்னதாகவும் ஓய்வை அறிவிப்பேன் என்று டோனி மேலும் தெரிவித்தார். (ம)

# குசலின் விலகல் உறுதி

இலங்கை அணியின் அதிரடி வீரர் குசல் ஜெனித் பெரேரா, பங்களாதேஷுக்கு எதிராக இன்று நடைபெறவுள்ள முதலாவது ஒருநாள் ஆட்டத்திலும் அடுத்த ஆட்டத்திலும் களமிறங்கமாட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

பங்களாதேஷ் அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடிவருகிறது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடர் முடிவடைந்தது விட்டது. ஒருநாள் தொடர் தம்புள்ளவில் இன்று ஆரம்பமாகவுள்ளது. இந்த ஆட்டத்துக்காக கடந்த புதன்கிழமை நடைபெற்ற பயிற்சி ஆட்டத்தில் பெரேரா காயமடைந்து ஆட்டத்தின் பாதியில் வெளியேறினார். இதனால் அவர் இன்று ஆரம்பமாகும் ஆட்டத்தில் களமிறங்குவது சந்தேகத்துக்கு உள்ளான ஒன்று. ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அவரின் விலகல் நேற்று உறுதியானது. பதில் வீரராக சிறிவர்தன களமிறங்குவார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அவரும் அணியில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. குசல் பெரேராவின் விலகல் இலங்கைக்கு பின்னடைவு என்று கருதப்படுகிறது. (ம)





# நெருக்கடிகள் எமக்கில்லை

## ஹசில்வூட் சொல்கிறார்

இந்தியாவுக்கு எதிராக இன்று ஆரம்பமாகும் டெஸ்ட் ஆட்டத்தில், நெருக்கடிகள் எமக்கில்லை என்றும் அது இந்தியாவுக்கே உள்ளது என்றும் தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஹசில்வூட்.

ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 4 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவும் இரண்டாவது ஆட்டத்தில் இந்தியாவும் வெற்றிபெற்றன. மூன்றாவது ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. தொடரின் இறுதி ஆட்டம் இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள அழகு நிறைந்த மைதானமான தர்மசாலாவில் இன்று நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியே கிண்ணம் வெல்லும். தர்மசாலா ஆடுகளம் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமானதாக உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் ஆஸ்திரேலிய அணியின் பந்துவீச்சு சிறப்பாக அமையும். இதனால் அந்த அணி ஆதிக்கம் செலுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகையில் ஹசில்வூட்டும் தமது அணியில் நம்பிக்கை தெரிவித்தார்.

முடிவு கிடைக்கக்கூடிய ஆடுகளமாக தர்மசாலா இருக்கும் என்று கருதுகிறேன். ஏனெனில் இந்திய அணி தொடரை கைப்பற்ற இங்கு வெற்றி பெற வேண்டியது அவசியமாகும். அதனால் முடிவு கிடைக்கக்கூடிய வகையிலேயே ஆடுகளத்தை தயாரித்து இருப்பார்கள். எனினும், நெருக்கடி எல்லாமே இந்தியாவுக்குதான். நாங்கள் சமநிலை செய்தாலே கிண்ணத்தை தக்கவைக்க முடியும். ஆனால் நாங்கள் வெற்றி பெறவே விரும்புகிறோம் என ஹசில்வூட் மேலும் தெரிவித்தார். (ம)

# இன்று இறுதி

நியூசிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் ஹமில்டன் மைதானத்தில் இன்று இடம் பெறவுள்ளது.

முதலிரு ஆட்டங்களின் முடிவில் தென்னாபிரிக்க அணி 1:0 என்றுமுன்னிலையில் உள்ளது. இன்றைய ஆட்டத்தில் வெற்றி பெற்றால் நியூசிலாந்து அணியால் தொடரை சமப்படுத்த இயலும். மாறாக தென்னாபிரிக்கா வெற்றி பெற்றாலோ அல்லது ஆட்டம் சமநிலையில் முடிந்தாலோ கிண்ணம் தென்னாபிரிக்காவிடம் செல்லும். முன்னதாக முடிவடைந்த ஒருநாள் தொடரையும் தென்னாபிரிக்கா அணியே கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (ம)

# இலங்கைக்கு வந்தது சம்பியன்ஸ் கிண்ணம்

சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் (மினி உலகக்கிண்ணத் தொடர்) நடப்பு வருடம் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள நிலையில் தொடரின் கிண்ணம் பார்வைக்காக இலங்கைக்கு எடுத்து வரப்பட்டது.

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 18ஆம் திகதி வரை இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது. தொடரில் கலந்துகொள்ளவுள்ள நாடுகளுக்கு வெற்றிக்கிண்ணம் எடுத்துச் செல்லப்படுகிறது. அந்த வகையில் தற்போது இலங்கைக்கு அது கொண்டுவரப்பட்டுள்ளது. மஹரகம, நுகோகொடை, கொழும்பு நகர மண்டபம் வழியாக இறுதியாக பொதுமக்கள் பார்வைக்காக காலிமுகத்திடல் வைக்கப்படவுள்ளது. (ம)




# கோக்லியின் நிலைப்பாடு இன்றே தெரியும்



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டத்தில் கோக்லி விளையாடுவாரா என்பது தொடர்பில் இன்றைய தினமே தெரியவரும்.

முடிவடைந்த மூன்று ஆட்டங்களில் இரு அணிகளும் தலா 1:1 என்றுள்ளன. ஓர் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இன்று ஆரம்பமாகவுள்ள ஆட்டமே கிண்ணத்தைத் தீர்மானிக்கும் விதத்தில் அமைந்துள்ளது. இன்றைய ஆட்டம் நடைபெறும் தர்மசாலா ஆடுகளம் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமானது என்பதால் கோக்லி, அணியில் முக்கியத்துவம் மிகுந்த ஒருவராகப் பார்க்கப்படுகிறார். எனினும் அவர் இன்றைய ஆட்டத்தில் களமிறங்குவாரா என்பது தொடர்பில் நேற்று மாலைவரை தெளிவற்ற நிலைப்பாடே உள்ளது.

கடந்த ஆட்டத்தில் கோக்லியின் தோள்பட்டையில் காயமேற்பட்டது. அவர் இன்று களமிறங்கினால் காயம் மேலும் பெரிதாக வாய்ப்புள்ளது. களமிறங்காவிட்டால் அணிக்கு பெரும் பின்னடைவே. இது தொடர்பில் பெரும் குழப்பநிலை நீடித்துவருகிறது.

"நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் நான் களமிறங்குவதும் களமிறங்காமல் விடுவதும் நாளையே (இன்றே) தெரியவரும். 100 சதவீதம் உடத்தகுதியுடன் இருந்தால் மட்டுமே விளையாடுவேன்" என்று கோக்லி நேற்றுத் தெரிவித்தார்.

கோக்லி தொடர்பில் உறுதியற்ற நிலைப்பாடு உள்ளதால் இறுதி நேரத்தில் அணியில் மாற்றங்களைச் செய்ய ஏதுவாக இளம் துடுப்பாட்ட வீரர் அய்யர் அணியில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார். (ம)

# விராட் கோக்லியின் புகழுக்குக் களங்கம்; திட்டமிட்டு ஏற்படுத்துகின்றன ஊடகங்கள்

## கிளார்க் மீண்டும் பாய்ச்சல்

இந்திய அணித்தலைவர் கோக்லியின் புகழுக்கு ஆஸ்திரேலிய மற்றும் பன்னாட்டு ஊடகங்கள் திட்டமிட்டு களங்கம் ஏற்படுத்த முயற்சிக்கின்றன என்று ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் கிளார்க் தெரிவித்தார்.

ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முடிவடைந்த முதல் மூன்று ஆட்டங்களின் அடிப்படையில் இரு அணிகளும் 1:1 என்று சமநிலையில் உள்ளன. ஓர் ஆட்டம் சமநிலையில் முடிந்தது. இந்தத் தொடரில் கோக்லி மிகவும் ஆக்ரோசத்தை வெளிப்படுத்தி வருகிறார். முன்னாள் வீரர்கள் பலரும் அவரது செயற்பாடுகளை கடுமையாக விமர்சித்துள்ள னர். பன்னாட்டு ஊடகங்கள் பலவும் கோக்லியை விமர்சித்துள்ளன. தி டெய்லி ரெலிகிறாப் என்ற ஆங்கில ஊடகம் கோக்லியை விளையாட்டுலகின் ட்ரம்ப் என்று வர்ணித்துள்ளது. இந்த நிலையில் இந்த விமர்சனங்கள் எல்லாம் கோக்லியின் புழுக்கு களங்கம் ஏற்படுத்தும் திட்டமிட்ட முயற்சி என்று கிளார்க் தெரிவித்தார்.



அமெரிக்க அதிபர் ட்ரம்புடன் கோக்லியை ஒப்பிடுவது தவறானது. சிமித்தை விட கோக்லி என்ன செய்துவிட்டார். எதையும் மனதில் வைத்து பேச வேண்டும். விராட் கோக்லியை எனக்கு பிடிக்கும். ஆஸ்திரேலிய மக்களும் அவரை நேசிக்கிறார்கள். இரண்டு அல்லது மூன்று ஆஸ்திரேலிய நிருபர்கள் கோக்லியின் புகழுக்கு களங்கத்தை ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். ஆனால் இதுபற்றி எல்லாம் அவர் கவலைப்படவில்லை. இதேபோல ஆஸ்திரேலிய ஊடகங்கள் எழுதுவதையும் பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை. இனியும் அவர் அவ்வாறே இருக்கவேண்டும், தொடர்ந்து சிறப்பாகச் செயற்படவேண்டும் என்று கிளார்க் மேலும் தெரிவித்தார். (ம)

# மியாமி ரென்னிஸ் தொடரில் ஒலிம்பிக் சம்பியன் தோல்வி



அமெரிக்காவின் மியாமி நகரில் நடைபெற்றுவரும் ரென்னிஸ் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் ஒலிம்பிக் சம்பியன் மோனிகா தோல்வியடைந்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டமொன்றில் பியூர்டோரிகாவின் மோனிகாவை எதிர்த்து ருமேனியாவின் கிறிஸ் ரியா மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:2 என்று கைப்பற்றி முன்னிலை பெற்றார் கிறிஸ்ரியா. அவர் அடுத்த செற்றிலும் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி இரண்டாவது செற்றையும் 6:4 என்று கைப்பற்றியதை அடுத்து 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெளியேற்றப்பட்டார் மோனிகா.

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் கடந்த வருடம் நடைபெற்ற ஒலிம்பிக் தொடரின்போது பெண்கள் ஒற்றையர் பிரிவில் மோனிகா தங்கப்பதக்கம் வென்றார். இதனால் அவர் அடுத்தடுத்த தொடர்களில் முன்னணி வீராங்கனைகளான செரீனா வில்லியம்ஸ், வீனஸ் வில்லியம்ஸ், கெர்பர், முகுருசா ஆகியோருக்கு கடும் சவாலாக விளங்குவார் என்று கருதப்பட்டது. ஆனால் இது வரையில் மோனிகா மிகப் பெரும் தொடரொன்றில் சொல்லிக் கொள்ளும்படியான பெறுபேற்றை வெளிப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் கெவின் அண்டர்சன் (தென்னாபிரிக்கா), ஜெரிமி சார்டி (பிரான்ஸ்) பாபியோ போக்னி (இத்தாலி), பெனோய்ட் பேர் (பிரான்ஸ்), துடி செலா (இஸ்ரேல்) உள்ளிட்டோர் முதல் தடையை வெற்றிகரமாகக் கடந்தனர். (ம)


## பஸ் விற்பனைக்கு

WP NB.... தொடரிலக்க ,2012 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட மிக நல்ல நிலையில் உள்ளடாட்டாபஸ்வண்டி உடன் விற்பனைக்கு உண்டு.

சிலிண்டர் கொள்ளளவு : 3784 cc

ஆசன எண்ணிக்கை : 38+1

நீளம் : 914 cm , அகலம் : 203 cm ,

உயரம் : 285 cm

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்

**0714115004**

## கணினி விற்பனைக்கு



*Hp* கணினி 29.750/= விலையில்
(FREE-8GB PEN/ W.CAM/H.PHONE)
*Hp* LAPTOP 29.750/= விலையில்
*Hp* PRINTER 3790/= விலையில்
*Hp i3 7th Gen 65 990/=* விலையில்
(ONE YEAR WARRANTY)

**St.ANTONY'S**
**187, K.K.S ROAD, JAFFNA TOWN.**

**021 222 4865**


## மாவிட்டபுரம் குமாரகோயில் பரிபாலன சபைப் பொதுக்கூட்டம்

மாவிட்டபுரம் குமார கோயில் ஆலயப் புனருத்தாரணம்,புதிய பரிபாலனசபைத் தெரிவு தொடர்பான பொதுக்கூட்டம் 07.04.2017 வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆலயமண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைத்து அடியார்களும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தரும பரிபாலன சபை, குமாரகோயில்


## வேலை வாய்ப்பு

யாழ்நகரில் பிரபல்யமான நிறுவனமொன்றிற்கு

- ✔ பூ மரங்கள் பராமரித்தல்.
- ✔ காரியாலயவளவை துப்புரவாக வைத்திருத்தல்

போன்ற வேலைகளுக்கு ஆள்கள் தேவை.
27.03.2017 திங்கட்கிழமை
முற்பகல் 10 - பிற்பகல் 2.00 மணிவரை
(ஆர்வமுள்ள வர்கள்) நேரில் சமுகம் தரவும்.

E.S.பிறின்டேஸ்
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY**யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANÇAISE** மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம்.**www.ambafrance-lk.org**

விரைவில் ஆரம்பம். உடன் பதிவை உறுதிப்படுத்துக.

**021 222 8093** 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

## கனடாவில் நிரந்தர குடியேறல் வேலைவாய்ப்பு கல்வி கருத்தரங்கு

இனிமேலும் சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல வேண்டாமே!

குறைந்த கட்டணத்துடன் சட்டபூர்வமாக குடும்பத்துடன் கனடாவில் குடியேறலாம்

நாள்-26-03-2017
ஞாயிற்றுக்கிழமை
காலை 9 மணி

முற்பதிவு அவசியம்
V2 Travels
0768226236
49 A சப்பல் லேன்
யாழ்ப்பாணம்


## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 | 23 |
| 05 | 03 |
| 1935 | 2017 |

### திருமதி சிவஞானம்மா வீரசிங்கம்
### (யோகசவுந்தரி)

பத்மாவாசம், கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடா, கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானம்மா வீரசிங்கம் 23.03.2017 வியாழக் கிழமை காலை கொழும்பில் காலமானார்.

அன்னார் பிரபல வர்த்தகரும் ரஞ்சன் ரான்ஸ்போர்ட் உரிமையாளருமாகிய காலஞ்சென்ற வீரசிங்கத்தின் அன்பு மனைவியும் பத்மாதேவி (கனடா) ரவீந்திரன்(கொழும்பு) ரவிரஞ்சன்(ஜேர்மனி) ரவிச்சந்திரன் (கலிபோர்னியா), ரஞ்சனாதேவி(கொழும்பு), ராகினிதேவி(ஆஸ்திரேலியா), ரமணிதேவி(ஒட்டாவா) ஆகியோரின் அன்புத் தாயும் தர்மேந்திரன் (கனடா), பிரிதினி (கொழும்பு), ராஜி (ஜேர்மனி), வினோதினி (கலிபோர்னியா), சந்திரசேகரம் (ஓய்வுபெற்ற பிரதம விலைமதிப்பீட்டாளர், கொழும்பு), அருள்முருகன் (ஆஸ்திரேலியா), பாலகுமார் (ஒட்டாவா) ஆகியோரின் அன்பு மாமியும் இலோஜினி, ஜேமஸ், அமுதினி, முகிந்தன், திலீப், இந்து, பிறிந்தன், சுஜித்தன், பிறீத்தன், இலக்கியா, காவ்வியா, யானுலி-ஜெயந்தன், வேணுசயன் ரனோஷா, ராகுலன், நமீதா, மித்திரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் குவீராவின் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் நாளை (26.03.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு அஞ்சலிக்காக 17A, சுவிசுத்தாராம வீதி, வெள்ளவத்தையில் வைக்கப்பட்டு மு.ப. 11.00மணியளவில் இறுதிக்கிரியைகள் ஆரம்பித்து ஒருமணிக்கு கல்கிசை பொதுமயானத்தில் இந்து முறைப்படி தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**றஞ்சனா - 011 236 0844**
**ரவி - 011 250 6383**

தகவல்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இராசகோபால் கனகசிங்கம்



யாவாரிமூலையை பிறப்பிடமாகவும் 145/2 ஊரியன் முரசுமோட்டையை வசிப்பிடமாகவும் கரந்தாய், பளையினை தற்காலிக முகவரியாகவும் கொண்ட இராசகோபால் கனகசிங்கம் 24.03.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசகோபால்-பவளம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக்கணவரும் இராசலட்சுமி, இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அரவிந்தன்(கனடா),தரனிஸ்வரன்(ஸ்ரீவிநாயகர்ஸ்ரோர்,இயக்கச்சி) தனிதரன் (ஸ்ரீ விநாயகர் ஸ்ரோர் கரந்தாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சியாலினி(வவுனியா), ஜெந்தினி(அல்லாரை அ.த.க. பாடசாலை ஆசிரியை), ஜெயராதிகா(கிளி சேரன் பற்று அ.த.க பாடசாலை ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் லேனுகா, கிருட்சிகா, நுகட்சிகா, பார்த்தீபன், எளில், டிலக்சிகா ஆகியோரின் அன்புமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 26.03.2017 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணியளவில் யாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.
077 4054653, 077 052 3625

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.